
# சாயி மார்க்கம்

ஜனவரி - ஜூலை 2018




**பர்த்தி யாத்திரை விசேட மலர்**

**சத்திய சாயி சர்வதேச நிறுவனம் - ஸ்ரீலங்கா**

**தமிழ் சஞ்சிகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சத்சங்க மண்டபம்
சுவாமியின் பிரசன்னம் - 01.05.2018











Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சாயி மார்க்கம்
# Sai Markam

மலர்: 25
இதழ்: 60

ஜனவரி
ஜீலை
2018

**ஆசிரியர்:**
Dr.R.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2832 / 5580
Email:moothy1941@yahoo.com

**துணை ஆசிரியர்:**
திரு.S.R. சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி
தாவடி, கொக்குவில்
தொ.பே - 021 222 5442

இலங்கையில் தனிப்பிரதி ரூபா 100.00
வருடச் சந்தா ரூபா 250.00 (2 பிரதிகள்)

வெளிநாடு:
வருடச் சந்தா 15 அமெரிக்க டொலர்

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர்,
சாயி மார்க்கம்,
659, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## உள்ளே......


| | |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 02 |
| பர்த்தி யாத்திரை அறிக்கை | 03 |
| பர்த்தி யாத்திரையில் இடம்பெற்ற உரைகள் | |
| 1. திரு.என்.வெங்கடேஸ்வரன் | 05 |
| 2.டாக்டர்.எஸ்.லதாஸ்ரீ | 08 |
| 3. ஸ்ரீ.பிஜு்பிறிஸ்டி | 11 |
| 4. ஸ்ரீ.ஆர்.ஜே.ரத்னாகர் | 14 |
| 5. பேராசிரியர். நஞ்சுண்டையா | 17 |
| 6. ஸ்ரீமதி.சுந்தரவல்லி சுரெஸ் | 19 |
| 7. ஸ்ரீ.அரவிந் பாலசுப்ரமண்ய | 23 |
| 8. ஸ்ரீ.ஆமெஸ்பாண்டே, ஸ்ரீ.ரவிகுமார் | 27 |
| 9. ஸ்ரீ.சாயி கிரிதர் | 31 |
| 10. ஸ்ரீ.C.G. சாயிபிரகாஸ் | 35 |
| 11. ஸ்ரீ.முரளி | 39 |
| 12.ஸ்ரீ.சாயிபிரசாந்த் | 40 |
| சாயி மார்க்கம் சாயி சமுத்திரம் | 48 |
| நிறங்கள் ஓர் ஐந்துடையாய் | 51 |
| அன்புவாரமும் அன்புவார ஒன்றுகூடலும் | 52 |
| அன்புவார போட்டியில் பரிசு பெற்ற ஆக்கங்கள் | 53 |
| நான் கண்ட கைலைக்காட்சி | 62 |
| குருமாருக்கான செயற்பட்டறை | 63 |
| சுவாமியின் வருகையும் அவரது தரிசனமும் | 66 |
| திருவள்ளுவரின் விநாயகர்.... | 67 |
| குருபூர்ணிமா செய்தி | 68 |
| நிறுவனச் செய்திகள் | 71 |

**ஒரே ஒரு மதம் அது
அன்பென்னும் மதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய தலையங்கம்

# புனித யாத்திரை



ஒரு யாத்திரை என்பது தார்மீக அல்லது ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பயணம் அல்லது தேடலாகும். தீர்த்த யாத்திரை என்பது மகான்களும், அவதார புருஷர்களும் வாழ்ந்து மறைந்த இடங்களுக்கும் கடவுளின் சாந்நித்தியம் அதிகம் வெளிப்படுகின்ற கோவில்களுக்கும் செல்வதாகும். புனித நதிகளில் சம்பிரதாய முறைப்படி நீராடுவது, ரிஷிகளும் முனிவர்களும் தவம் செய்து வந்த மலைகளுக்கோ குகைகளுக்கோ செல்வது ஆகிய வற்றையும் குறிக்கும்.

எந்த இடத்தில் மகான்களும் அவதார புருஷர்களும் ஆன்மீக சாந்நித்தியம் நிறைந்திருக்கும்படி சங்கல்ப்பித்துள்ளார்களோ எந்த இடத்தில் ஆன்மீக வரலாறுகளும் நினைவுகளும் பொதிந்துள்ளதோ அதுவே தீர்த்ததலம் அல்லது சன்னதியாகும். தீர்த்த யாத்திரையில் இருவகையுண்டு:

1.புறத்தில் தீர்த்த யாத்திரைக்கென்றே அமைந்த தலத்திற்குச் செல்வது.
2.யாத்திரிகரின் மனதில் அந்தர்முகமாக விளங்குவது மற்றையது. மானசீகமாக சென்று ஆன்மீகத்தில் தோய்வது மிகச் சிறந்தது.

யாத்திரை பக்தியையம் ஆன்மீக விழிப் புணர்வையும் தரவேண்டும். தீர்த்த தலத்தின் புனிதத்தன்மை பற்றிய அறிவு வேண்டும். அவ்விடத்திலுள்ள ஆன்மீக அதிர்வலைகளை உள்வாங்கவேண்டும். புனித யாத்திரைக்கு நாம் எம்மைத் தயார் செய்ய வேண்டும். தகுதியாக்க வேண்டும். இதற்கான வழிகாட்டல்கள்:

1. யாத்திரை செல்லுமுன் யாத்திரீகர்களின் மனம் முதலில் அந்தத் தலத்திற்குச் செல்லவேண்டும். யாத்திரீகர்கள் அந்தத் தீர்த்தத் தலத்தில் நடந்த தெய்வீக சம்பவங்களை மனதிற்குள் காணவேண்டும்.
2. தீர்த்த யாத்திரைப் பிரார்த்தனை, அதைப் பற்றிய சிந்தனை மற்றும் தியான சாதனை செய்யவேண்டும்.
3. யாத்திரீகர்கள் தனிமையை நாடி ஆன்மீகஏக்கம் கொண்டிருக்கவேண்டும். அத்துடன் பணிவுடனும் மற்றவர்களின் தொடர்பின்றியும் இருக்கவேண்டும்.
4. தீர்த்த தலத்தில்பெறும் நினைவுகள் இதயத்தில் நிலைத்திருக்க வேண்டும். கமரா, கைத்தொலைபேசி முதலியவற்றைத் தவிர்க்கவேண்டும்.
5. யாத்திரைக்குப் பிறகு அதன் நினைவுகளைப் பொருத்தே அது பயனள்ள யாத்திரையா என்பதைத் தீர்மானிக்க முடியும்.

மனித உடம்பைவிட வேறு சிறந்த தீர்த்ததலம் இல்லை. ஆன்மா இருக்கும் ஆலயமே உடலாகும். ஆத்மா உடலில் வெளிப்படுவதுபோல வேறு எந்த இடத்திலும் வெளிப்படுத்துவதில்லை. எந்த உடலில் இருக்கும் ஆன்மாவைக் கண்டவர்களுக்கு மறுபிறப்பில்லையென மகான்களும் கூறுகின்றனர். சாஸ்திரங்களும் கூறுகின்றன.
பகவான் அல்லது அவதார புருஷரின் ஓர் அம்சம் தீர்த்த தலத்தில் இருந்தபடி ஆன்மீக நாட்டமுள்ளவர்களைத் தம்மிடம் இழுத்து அவர்களை உயர்த்துவது ஆகும். இந்த சக்தி எப்போதும் இருக்கிறது. அவதாரங்களின் சமாதிக்கும் இச் சக்தி உண்டு. உண்மையில் தெரிந்தோ தெரியாமலோ நாம் எல்லோரும் யாத்திரீகர்களேயாவோம். அநேகர் ஒளியுடன் திருப்தியடைந்து வெப்பத்தை அணுக விருப்பம் கொள்வதில்லை.

சாயி அடியார்கள் தம்மைச் சாதனைகள் மூலம் தகுதியாக்கியே புட்டபர்த்தி யாத்திரைக்குச் சென்றுள்ளார்கள். ஏதோ ஒருவிதத்தில் ஆன்மீக மலர்ச்சியை உணர்ந்துள்ளார்கள். நாம் தெய்வீகத் தன்மையிலேயே கண்ணாக இருக்கவேண்டும்.

ஜெய் சாயிராம்

-ஆசிரியர்

உசாத்துணை தரவுகள் :
இராமகிருஷ்ண விஜயம், மார்ச் 2017.
புட்டபர்த்தியில் நிகழ்ந்த சத்சங்கங்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பர்த்தி யாத்திரையும் புத்தபூர்ணிமா நிகழ்வும் - 2018
# 26.04.2018 - 04.05.2018

இம்முறை புட்டபர்த்தியில் புத்த பூர்ணிமா நிகழ்வை நடத்தும் முதன்மை நாடாக இலங்கைக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இந் நிகழ்வுடன் சேர்ந்தாற்போல் பர்த்தி யாத்திரையை செய்வதற்கு பகவானின் சங்கல்ப்பத்தினால் தீர்மானிக்கப்பட்டது. அந்த வகையில் சுவாமியின் பெருங்கருணையினால் இலங்கையின் கிராமங்கள், நகரங்களிலிருந்து 365 பக்தர்கள் இந் நிகழ்வுகளில் பங்கு பற்றும் பெரும்பாக்கியம் கிட்டியது. இந்த பர்த்தி யாத்திரையில் பங்குபற்றுவதற்கான தயார்படுத்தலுக்காக பக்தர்கள் 21 நாள் அக மாற்றத்திற்கான சாதனைகளில் ஈடுபட்டார்கள்.

ஏப்ரல் 26ஆம் திகதிக்கு முன்னராக புட்டபர்த்தியை பக்தர்கள் சென்றடைந்தனர். அங்கே சாயி குல்வந் மண்டபத்தில் நாளாந்தம் நடைபெறுகின்ற ஓம்காரம், சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனம், தியானம், சிவலிங்கா பிஷேகம், வேதம் ஓதுதல், பஜனை போன்ற சாதனைகளில் பக்தர்கள் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார்கள். இதற்கு மேலதிகமாக 26.04.2018 தொடக்கம் 04.05.2018 வரை காலை 10.30 மணிக்கும் பிற்பகல் 7.45 மணிக்கும் சத்சங்க மண்ட பத்தில் இடம்பெற்ற விசேட உரைகளையும் கேட்டு பயன் பெற்றார்கள். இவ்வுரைகளை சுவாமியுடன் மிக நெருக்கமாக இருந்த மாணவர்கள், பக்தர்கள் நிகழ்த்தினார்கள்.

பர்த்தி யாத்திரையின் ஒரு பிரதான நிகழ்வாக புத்த பூர்ணிமா நிகழ்வு அமைந்தது. **தர்மம், பரிநிர்வாணத்திற்கு இட்டுச் செல்லும் ஒரு பாதை** என்பது புத்த பூர்ணிமாவின் கருப்பொருளாக அமைந்தது.

புத்த பூர்ணிமா நிகழ்வுகளில் இலங்கையுடன் பௌத்தர்கள் வாழும் நாடுகளான தாய்லாந்து, கொங்கொங், பர்மா, சிங்கப்பூர், ஜப்பான், தாய்வான், மலேசியா, நேபாளம், இந்தோனேசியா, பூருணை போன்ற நாடுகளைச் சேர்ந்த 650 பக்தர்களும் இணைந்துகொண்டனர்.

சாயி குல்வந் மண்டபமானது இலங்கை பத்தர்களால் செய்யப்பட்ட 250 வெசாக்கூடுகளாலும், பௌத்த கொடிகளாலும் புத்த பெருமானின் போதனைகளைக்கொண்ட பதாதைகளினாலும் அற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

புத்த பூர்ணிமாவின் முதல்நாள் (29.04.2018) நிகழ்வாக மாலை வேதம் ஓதுதலைத் தொடர்ந்து வரவேற்புரையை நேபாளத்தைச் சேர்ந்த அமர்காக்கி நிகழ்த்த இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் சுனந்த தேகம்பொடவும் தாய்லாந்தைச் சேர்ந்த டாக்டர் ஆர்ட் ஓங்யும் ஸாயி அவர்களும் பிரதான உரையை நிகழ்த்தினார்கள். இதைத் தொடர்ந்து "சேரிவானஜ" என்ற தலைப்பில் அமைந்த பௌத்த போதனைகளை உள்ள டக்கிய ஒரு நாடகம் கொழும்பு சாயி நிலையத்தைச் சேர்ந்த இளைஞர்களால் நிகழ்த்தப்பட்டது. அடுத்து கொழும்பு சாயி நிலைய இளைஞர்களால் தெய்வீக கானங்கள் இசைக்கப் பட்டது. இறுதியாக வலயம் - 4 மற்றும் 5ஐச் சேர்ந்த இளைஞர் களின் பஜனை அதைத்தொடர்ந்து ஆராத்தியுடன் நிகழ்வுகள் நிறைவுக்கு வந்தன.




30ஆம் திகதி 2ஆம் நாள் (30.04.2018) புத்த பூர்ணிமா நிகழ்வு அன்று மாலை வேதம் ஓதியபின் தாய்லாந்து சத்திய சாயி பாடசாலை மாணவர்களால் "சித்தார்த்தரை கௌதம புத்தராக்கிய சந்தர்ப்பங்களை வைத்து ஒரு நாட்டிய நாடகம் இடம்பெற்றது. அதை அடுத்து "சாயி பஜனபினா" என்ற பஜனைப் பாடலை வலயம் 4, 5ஐச் சேர்ந்த இளைஞர்கள் பல் மொழிகளில் பாடிய வீடியோ காண்பிக் கப்பட்டது.

தொடர்ந்து வலயம் 4, 5 பக்தர்களால் பஜனை செய்யப்பட்டு ஆரத்தியுடன் நிகழ்வு நிறைவேறியது. புத்த பூர்ணிமா நிகழ்வுகளின் இன்னுமொரு பரிணாமமாக 29ஆம் திகதி மதியம் புட்டபர்த்தியில் அமைந்துள்ள அதிவிஷேட வைத்தியசாலையில் இருந்த நோயாளிகளுக்கும் உடனிருந்த உதவியாளர் களுக்கும் நாராயணசேவை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட இலங்கையைச் சேர்ந்த அன்பர்கள் அந்த சேவை தங்களுக்கு ஒரு அற்புதமான உணர்வைத் தந்ததாகக் கூறினர். நோயாளிகளுடன் அன்பைப் பரிமாறி நாராயண சேவையில் ஈடுபட்டதின் மூலம் சுவாமியின் அன்பை உணர்ந்து கொள்ள முடிந்ததாக கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே, முதலாம்திகதி பர்த்தி யாத்திரையின் ஒரு பகுதியாக மாலை வேதம் ஓதுகின்ற நிகழ்வைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம் பெற்றது. வடபிராந்திய மகளிர் பிரிவினரால் "பிரம்ம வித்தியாவில் பெண்களின் பங்கு" என்ற தலைப்பில் இந் நிகழ்வு நடைபெற்றது.

அடுத்த நிகழ்வாக இலங்கை தெற்கு, மேற்கு பிராந்தியமும் வடபிராந்தியமும் இணைந்து "தெய்வீக கானங்கள்" இசை நிகழ்வைத் தந்தனர். தொடர்ந்து பஜனை, ஆரத்தியுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

இந்த 3 நாள்கள் நிகழ்வுகளின்போது இலங்கை பக்தர்களுக்கு சமாதிக்கு மிக நெருக்கமாக அமர்கின்ற அரிய வாய்ப்பு வழங்கப்பட்டது. மேலும் நிகழ்வுகளில் நேரடியாகப் பங்குகொண்டவர்களுக்கு சுவாமியின் ஆசீர்வாதத்தின் வெளிப்பாடாக நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. இலங்கை பத்தர்கள் அனைவரும் சுவாமியின் அருகில் இருந்து புகைப்படம் எடுத்துக் கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டனர்.


இலங்கை பக்தர்களின் நிகழ்வுகள் மிகத் தரமாக இருந்ததாக பிறநாட்டு சாயி அன்பர்கள் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

இவ்வாறாக புட்டபர்த்தியில் புத்த பூர்ணிமா பர்த்தி யாத்திரையில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவரும் சுவாமியின் பேரருளில் மூழ்கித் திளைத்த ஒரு அற்புத உணர்வைப் பெற்றனர், என்பதை இங்கு குறிப்பிடுவது சாலப் பொருத்தமானதாகும்.

ஜெய் சாயிராம்

டாக்டர்.சி.சிவகோணேசன்
தேசிய ஆன்மீக இணைப்பாளர்,
ஸ்ரீ லங்கா



# யாவர்க்கும் வாழ்வெனும்

பிருந்தாவனத்திலே நந்த குமாரன்
புட்டபர்த்தியின் எங்கள் சாயி நாதன்
வருந்தும் மனங்களுக்கு வாழ்வான தேவன்
வாழ்த்தி அவன் புகழை பாடுவோம் நாமே
சாயி நந்தனா - ஜெய்
சாயி நந்தனா

கருணை வடிவான காட்சியிலே - சாயி
குடும்பமாய் இணைந்து விட்டோம் ஊரினிலே
பெருகும் அன்பென்ற உயிர்ப்பினிலே - சாயி
உலகமைக்கப்புறப்பட்டோம் பாரினிலே
சாயி நந்தனா - ஜெய்
சாயி நந்தனா

தாமரை மலரான பாதாரவிந்தம் - எங்கள்
ஆணவம் அழிக்கின்ற ஆனந்த மன்றம்
யாவர்க்கும் வாழ்வெனும் எங்கள் நாதன்
பேர் சொல்லி பேர் சொல்லி உய்வமே நாளும்
சாயி நந்தனா - ஜெய்
சாயி நந்தனா

பேராசிரியர்.என்.சண்முகலிங்கன்
யாழ். பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பர்த்தி யாத்திரையில் இடம்பெற்ற உரைகளின் தொடர்

ஸ்ரீ. N. வெங்கடேஸ்வரன்

(முன்னாள் ஐ.நா. உத்தியோகத்தர், பிரசாந்தி நிலையத்தில் வசிக்கிறார்.)


அகிம்சா பிரதம புஷ்பம், சர்வபூததயா புஸ்பம், சமா புஷ்பம், சாந்தி புஷ்பம், தபஸ் புஷ்பம், தியானம் புஷ்பம்... சகோதர சகோதரிகளே! மனமுவந்து வரவேற்கிறேன்.

பொதுஜன உறவு உத்தியோகத்தர் (திரு. முரளி) நேற்று சிறீலங்கா பக்தர்களுக்கு உகந்த பேச்சை நிகழ்த்துமாறு கேட்டார். நான் வழக்கமாக "சற்குருவின் செய்தி" என்ற தலைப்பில் கிரமமாக உரை நிகழ்த்தி வந்துள்ளேன். எப்படி உடனே மாற்றுவது? நான் இரவு 9.00 மணிவரை பேச்சைத் தயாரித்துப் பின் சுவாமியுடன் கதைத்து சுவாமிக்கு முன்னால் வைத்தேன். அதிகாலை சுவாமி கனவில் தோன்றி எனது உரையை மாற்றி, வேதாந்தம் கொஞ்சம் சொல்லியபின்பு சில குறிப்புகள் சொன்னார். அவையாவன. தனிப்பட்ட அனுபவங்கள், சில அற்புதங்கள் என்பவையே யாகும்.

"கடவுளில் இருப்பது ஆன்மீகம்.
To be in God is Spirituality
கடவுளோடு இருப்பது கல்வி
To be with God is Education
கடவுளுக்காக இருப்பது சேவை"
To be for God is Service

நீங்கள் யாவரும் யாத்திரையில் வந்துள்ளீர்கள். பிரசாந்தி நிலையம் ஷேத்திரம், தலைவன் சத்திய சாயிபாபா. சிலர் யாத்திரை என்றுவந்து கடையில் போய் பாத்திரங்களை வாங்கிப்போகிறார்கள். நீங்கள் சத்தியசாயி என்ற பாத்திரத்தை உங்களோடு எடுத்துச் செல்லுங்கள்.

1. பகவானே "என்னை எடுத்துச் செல்லுங்கள்" என்று கூறியுள்ளார். எப்படி எடுத்துச் செல்வது? உங்களிலுள்ள 6 உள் எதிரிகளைத் தரலாம். தந்தால் என்னை எடுத்துச் செல்லலாம்.
   நாங்கள் பெற்றால் விட்டு விலகாதது ஞானம், எங்களை விட்டுச் சென்றால் திரும்பி வராதது அஞ்ஞானம்.
2. சம அதி. எந்த நிகழ்வாலும் சமநிலையில் இருத்தல். இங்கு சகல எதிர்மறைக் குணங்களைக் களைந்தால் இந்தச் சமநிலையை அடையலாம்.
3. சுவாமி இங்குதான் உள்ளார். அங்கு இல்லை என்று யார் சொன்னாலும் நம்பவேண்டாம். அவர் இங்கும் உள்ளார். அங்கும் உள்ளார். ஒவ்வொரு அணுவிலுமே சாயி உள்ளார். சாயி எங்கும் உள்ளார். பிரகலாதன் தூணிலும் உள்ளார் என்று தந்தைக்குச் சொன்னாரே! சாயி SAI என்றால் See Always Inside, உள்நோக்கிப் பார் என்ற அர்த்தமும் உண்டு. பஜனை பாடும்போது சாயியைத் தெரியவில்லை என்கிறோம். பக்கத்திலுள்ளவர் வேறு யாருமல்ல. சாயியேதான் என்பதை உணரவேண்டும். சாயியைக் காண்பதற்கு விரிவாக்கம், தூயபார்வை, அப்பியாசம், அனுபவம் ஆகியவை தேவை. உங்களை இந்த யோகபூமிக்குக் கொண்டு வந்ததே தான் சொன்னதை விளங்கி அனுபவிப்பதற்கே யாகும். சுவாமியைப் பலர் பிழையாக விளங்கிக்கொள்கிறார்கள். வாருங்கள், அவதானியுங்கள், அனுபவியுங்கள், ஏற்றுக்கொள்ளுங்கள் என்று பல தடவைகள் கூறியுள்ளார்.
4. தரிசனம், ஸ்பரிசனம், சம்பாஷணம் பெறுவது மிகவும் அதிர்ஷ்டம். தரிசனம் பாபத்தை நீக்கும். ஷ்பரிசனம் கர்மவினையை நீக்கும். சம்பாஷணை சங்கடங்களைத் தீர்க்கும். கடவுளை அடைவதையே நோக்காகக் கொள்ள வேண்டும். உங்களின் துன்பங்களை நீக்கவே சுவாமியிடம் வந்துள்ளீர்கள். நாங்கள் மற்றவர்களுக்கு இலட்சிய புருஷர்களாக திகழவேண்டும். பகவான் சத்திய சாயி பாபாவினுடைய நிழலாக செயற்பட வேண்டும்.
5. சுவாமி ஒருமுறை எங்களிடம் இராமாயணத்தை ஒரு வசனத்தில் சொல்ல முடியுமா? என்று கேட்டார். சுவாமி இப்படியான கேள்வி கேட்டால் நாம் மௌனமாக இருப்போம். சுவாமி தகுந்த பதிலைத் தருவார். சுவாமி "இராமர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்ததையே செய்யவேண்டும்" என்று பதிலளித்தார். அவர் தந்தை தசரதனுடைய சொல்லை மீறவில்லை. அவர் சொல்லைக் காப்பாற்றுவதற்காக குருவின் ஆலோச னையையும் தட்டிக்கழித்தார். சுவாமி "நான் சொல்வதைச் செய்" என்று புத்தி புகட்டினார். நாங்கள் ஆத்ம சொரூபீகள் என்பதால் எப்போதும் ஆனந்தமாகவே இருக்கவேண்டும்.

6. நாங்கள் அவதாரங்களுடன், பழகும் பொழுது முதலில் மனிதனாகவே பார்ப் போம். அவர்கள் நீங்கும்பொழுது தெய்வமாகவே உணர்வோம். சுவாமியிடம் 600000 சேவாதள் பதிந்துள்ளார்கள். 3 கோடி மாணவர்கள் இலவசக் கல்வி பெறுகிறார்கள். பலகோடி மக்கள் இலவச வைத்திய சேவை பெறுகிறார்கள். கோடி மக்களுக்கு குடிநீர் வசதியளித்துள்ளார். அவர் தனது அங்கியில் பொக்கற்றோ அல்லது உலோகப் பொருள்களை வைத்தி ருப்பதில்லை. அவருடைய பெயரில் வங்கிக் கணக்கில்லை. அவருடைய பெயரில் ஒரு ஆதனமும் இல்லை. எல்லாம் அவர் கையில் உள்ளது. நாங்கள் சுவாமியை எப்போதும் பக்தியுடன் பற்றிக்கொண்டு அவரது பெருமைகளை நினைத்து நினைத்து உருக வேண்டும்.

ஒருமுறை மத்திய கிழக்கு நாடொன்றில் உரை நிகழ்த்தினேன். வாய் வறண்டு போனதும் நீர் கேட்டேன். ஒருவர் வந்து வெளியே வந்து குடிக்கும்படி நீரைத் தந்தார்கள். உரை நிகழ்த்திய இடம் ஓர் ஆலயம். அங்கே மண்டபத்தினுள்ளே நீரோ அல்லது ஆகாரமோ எடுக்கக்கூடாது என்றார்கள். உள்ளே நீர் எடுக்க முடியாதென்றால் வெளியே போய் எடுக்க வேண்டும். நாம் தான் மாற வேண்டும். சுவாமியும் தனிநபரை முதலில் மாற்றுகிறார்.

சத்திய சாயி நிறுவனத்தையும் சேவைக்காகவே ஸ்தாபித்தார். சேவையுடன் பக்தியும் சேர்ந்தால் மோக்ஷம் கிடைக்கும். அவதாரம் மனிதஉருவில் இறங்கியது மனித உருவில் இருக்கும் எம்மைத் தெய்வமாக ஏற்றுவதற்கே யாகும். சுவாமி உருவ நிலையிலிருந்து அருவ நிலையில் உள்ளார். அவர் ஒரு இடமும் போகவில்லை. அவர் எங்குமுள்ளார். அவர் எம்மைக் கடைந்து உன்னத மானவர்களாக மாற்றுவார். அவர் எங்களில் விசரை உண்டாக்கிப் பின் அதையும் மாற்றி விடுவார். நான் உன்னை அழ வைப்பேன். கண்ணீர் நிலத்தில் விழமுன்பே அதைத் துடைத்தும் விடுவேன். அவதாரங்களின் லீலைகளினுள் இதுவும் ஒன்றாகும்.

ஒரு முறை 20 பேர் அடங்கிய குழு ஒன்று வந்திருந்தது. முதல்நாள் 20 என்று சொல்லப் பிழையென்று தன்னையும் சேர்த்து 21 என்று திருத்தினார். அடுத்தநாள் 21ஐ பிழையென்று சொல்லி நான் ஒவ்வொருவருடனும் இருப்பதால் 40 என்று திருத்தினார். மூன்றாவது நாள் 40 என்று சொல்ல பிழையென்று சொல்லி இருப்பது ஒன்றே ஒன்றுதான் என்று திருத்தினார். உதாரணம் மூலம் அத்வைதம் கற்பித்தார். புத்தபெருமான் அரண்மனை அருகே போகும் போது அவரது மகன் ராகுல் ஓடிவந்து புத்தபெருமானின் சின்ன விரலைப் பிடித்தார். ஏதாவது தரும்படி கேட்க தனது கையிலிருந்த பிச்சைப் பாத்திரத்தை மகனிடம் கொடுத்தார். மேலேயிருந்து பார்த்துக்கொண்டிருந்த சுத்தோதன் அரசன் "நீயும் பிச்சைக்காரனாக மாறி இப்போது பேரனையும் பிச்சைக்காரனாக்கி விட்டாய்" என்று கத்தினார். புத்த பெருமானும் மகனும் மௌனமாக நடந்துசென்றார்கள். ராகுல்தான் முதற் சீடனானான்.

சரணாகதி, கீழ்ப்படிவு என்பதற்கு சுவாமி கபீர்மகானின் வாழ்க்கையில் நடந்ததைச் சொல்வார். கபீர் நெசவு நெய்பவர். நல்ல பகல்வேளை ஏதோ ஒன்று கீழே விழுந்து விட்டது. மகனைப் பார்த்து விளக்கைக் கொண்டு வரச்சொன்னார். மகனும் ஓடிப்போய் விளக்கைக் கொண்டு வந்தார். இந்தப் பகலில் விளக்குத் தேவையில்லை கொண்டு போ என்றார். மகனும் ஒன்றும் பேசாது கொண்டு சென்றார். சரணாகதிக்கு கபீரின் மகனையும் புத்தபெருமானின் மகன் ராகுலையும் உதாரணமாகக் காட்டினார்.

சில நேர்காணலின்போது அற்ப விடயங்களைக் கேட்டு சுவாமியின் நேரத்தை வீணாக்குவார்கள். சுவாமியும் பொறுமை இழக்காது அவர் அவரது நிலைக்குக் கீழிறங்கி அன்புடன் தகுந்த பதிலைக் கொடுப்பார்.

சுவாமியைப் பற்றி நாம் விமர்சிக்கும்பொழுது சாயி பாபா யார் என்று கேட்டால், தெரிந்த கடவுள் அனைத்திற்கும் மேலாக ஒன்றுள்ளது என்றால் அதுவே சாயி பாபா என்று சொல்லவேண்டும். "ஒருவரும் என்னைச் சரியாக விளங்கிக்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவில்லை. ஏன் எனது பெயரில் நீங்கள் பிளவுபட வேண்டும். நான் நம்பிக்கையுள்ள ஒருவரைத் தேடுகிறேன்." என்றார் பகவான்.

தரிசனத்தின் சக்தியை எனது வாழ்வில் நடந்ததைப் பற்றிச் சொல்கிறேன். இப்போது 74 வயது. நான் 8 வயது வரையும் உடுப்புப் போடாமலும் பள்ளிக்கூடம் போகாமலும் இருந்தேன். எங்களுக்குத் தெரிந்தவர் வீட்டிற்கு பாலயோகி ஒருவர் வருகிறார். அவர் கடவுள். அவருடைய தரிசனத்தைப் பெறும்படி அழைத்தார்கள். நாம் அங்கு சென்றோம். அவரின் தரிசனம் கிடைத்தது. நான் வீடு வந்ததும் உடுப்புப் போட்டு பாடசாலைக்குப் போகத் தொடங்கினேன். பட்டப் படிப்பு பட்டப்பின் படிப்பு எல்லாம் முடித்தேன். நான் 1980 இல் பிரசாந்தி நிலையம் வந்தேன். சுவாமி தனக்கு முன்னால் இருக்கும்படி சொன்னார். நேர்காணலில் "நீ கடவுள்" என்று எனக்குச் சொல்லித்தந்தார். உள்மாற்றம் ஏற்பட்டது.

49 ஆவது வயதில் சுகநாடி வாசித்தோம். வாசிப்பவர் எனதைப் பார்த்துவிட்டுத் தான் ஒன்றும் சொல்ல மாட்டேன் என்று மாலை 6 மணிக்கு தொலைபேசியில் மனைவியைக் கதைக்கச் சொன்னார். மனைவி தொடர்பு கொண்டபோது இவர் உயிருடன் இருக்க முடியாது. ஆனால் அவர் இங்கிருக்கிறார். ஒரு பெரிய மகான் இவரைப் பாதுகாக்கின்றார் எனச் சொன்னார். 1993ஆம் ஆண்டு நான் இறந்ததாக முடிவு போட்டார்கள். சுவாமி எனக்கு உயிர் தந்தார்.

1999 ஆம் ஆண்டு சுவாமி என்னைப் பார்த்து உடனே வைத்தியசாலைக்குப் போகச் சொன்னார். சுவாமி அங்கேயும் வந்து பார்த்தார். அங்கே 32 நாள்கள் இருந்தேன். அமெரிக்காவிலிருந்து வந்த வைத்தியர்கள் அறுவை சிகிச்சை செய்தார்கள். சத்திய சாயி பாபாவின் சமாதியில் 8 மலர்களைப் போட்டுப் பிரார்த்திக்கவேண்டும்
.

அகிம்சை, கருணை, சாந்தி, தபம், தியானம், சத்தியம், தர்மம், பிரேமை

நேர்காணலின் போது என்னை ஏதாவது கேட்கச் சொன்னார். "நான் என்னில் உள்ள எதிர்மறை சக்திகளை உங்களிடம் அர்ப்பணிக்க உதவி செய்யுங்கள்" என்று கேட்டேன். "நீயும் கடவுள். நீ கொஞ்சம் முயற்சி செய். மிகுதி நான் செய்வேன்" என்றார்.

அண்மையில் சிங்கப்பூரிலிருந்து 16 வயதிற்குட்பட்ட 30 பிள்ளைகள் வந்தார்கள். அவர்களைப் பிரசாந்தி நிலையத்தைச் சுற்றிப் பார்க்க அழைத்துச் சென்று சில ஆன்மீக விளக்கங்களைக் கொடுத்தேன். தியான கல்ப விருட்சத்தின் கீழே தியானம் செய்தார்கள். அமைதியை அனுபவித்தார்கள்.

பிரார்த்தனைப் பாடல் பாடி 4F பற்றியும் சொல்லிமுடித்தார்.

ஜெய் சாயிராம்


## தேசிய சேவைத் திட்டம்




**புற்றுநோயாளர் காப்பகம்**

**ஹன்வல, மகரகம**

**வைத்திய சேவையை நோக்காகக் கொண்டு 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் புற்று நோயாளர் காப்பகம் மகரகமவிலிருந்து 20 கி.மீ தொலைவிலுள்ள ஹன்வல எனும் இடத்தில் அமைந்துள்ளது. இதில் வழங்கப் படும் சேவைகள் அனைத்தும் இலவசம். இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 0094 715 678 332
E mail - info@ssiosrilanka.org
Web: www.ssiosrilanka.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. S. லதாசிறீ

பிரசாந்தி நிலையத்திலுள்ள சத்திய சாயி பொது வைத்தியசாலையில் வைத்தியராகப் பணிபுரிகின்றார்.

பகவானின் பொற்கமலப் பாதங்களில் எனது அன்பான சமர்ப்பணம். மூத்தவர்களே! சகோதர, சகோதரிகளே! இளம்பிள்ளைகளே! அன்பான சாயிராம்.

ஆண்டவனுடைய பாதத்தில் வாழ்ந்தால் அன்பை வெளிப்படுத்தமுடியும். "அன்புடன் வாழ்" என்பதைப் பற்றிச் சிந்திப்போம்.

அன்பு தேவையற்ற எதிர்மறையான சக்தியை வெளியேற்றும். இரு கால்களில் நடமாடும் பேரன்பே சுவாமியாகும். இது தான் தெய்வத்தையடையும் ராஜபாட்டை. அன்பு தான் பாதையும் அன்பு தான் இலக்குமாகும்.

நாம் இந்தத் தெய்வீகத்தை எப்படி வெளிக்கொணரலாம்? சுவாமியின் வாழ்க்கையை அவதானிக்கவேண்டும். அல்றக்கர் (Al Drucker) என்ற பக்தன் சுவாமியிடம், "நாம் சுவாமியை நேசிக்கிறோம் என்று தெரியும். ஆகவேதான் தரிசனத்திற்காக இங்கு வந்துள்ளோம். சுவாமி எங்களை நேசிக்கிறார் என்று எப்படித் தெரியும்?" என்று கேட்டார்.

சுவாமி சிரித்துவிட்டு, "என்னை நேசிக்கிறாய் என்று உணரும்பொழுதே நான் உன்னை நேசிக்கிறேன் என்பது உண்மையாகிறது. அன்பு என்னும் விதையை என் இதயத்திலிருந்து உனது இதயத்தில் விதைத்துள்ளேன்." என்று சொன்னார்.

எம்முடைய பொறுப்பென்ன? இந்த விதையைப் பாதுகாத்து பராமரித்து பெரிய விருட்சமாக வளர்க்கவேண்டும். இது எல்லோரிடத்திலுமுள்ள பொக்கிஷம். மாணவர்கள் என்ன நிகழ்வு நடத்தினாலும் முடிவில் "நாம் சுவாமியை நேசிக்கிறோம்" என்று சொல்வார்கள். சுவாமியும் தான் நேசிப்பதாகத் தலையாட்டுவார். ஒருமுறை ஜேர்மனி நாட்டுக்குழு சுவாமியிடம் கதைத்தபொழுது, தாங்கள் சுவாமியை மிகவும் நேசிப்பதாகச் சொன்னார்கள். அதற்கு சுவாமி: "என்னை நேசிக்கவேண்டாம். எனது செய்தியை நேசிக்கவும். எனது அதி உயர் செய்தி அன்பேயாகும்" என்று சொன்னார்.

நாம் இந்த தெய்வீக அன்பை ஏனையவர்களுக்கும் கொடுக்வேண்டும். நாங்கள் சுவாமியின் பக்தர்களா இல்லையா என்று சுவாமியே நிர்ணயிப்பார். சுவாமி விவேகானந்தர் "எனது வாழ்வின்மூலம், எனது குருவின் மகிமையை ஓரளவு வெளிப்படுத்தினேனாகில், எனது வாழ்வு வீண்போகவில்லை" என்று சொன்னார். "சுவாமியின் வாழ்வே அவரது செய்தி". அவரது அன்பு நிபந்தனையற்றது. ஏனையோரிடமிருந்து நன்றியைக்கூட எதிர்பார்ப்பதில்லை. பகவான் சிறிய வயதில் (7 - 8 வயது) பேரனார் கொண்டமராஜுவுடன் வாழ்ந்தார். அவருக்கு எல்லாம் செய்வார். உணவு சமைத்துக்கொடுத்து உடுப்பு தோய்த்து பாடசாலைக்கு நடந்துபோய் வருவார். தர்மம் முதலில் வீட்டில் தொடங்கவேண்டும். பெற்றோரை மதித்து அவர்கள் சொல்வதைக் கேட்டுச் செய்யவேண்டும். வீட்டில், அயலில் வாழும் முதியோருக்கு உதவி செய்யவேண்டும். வீட்டு வேலைகளை பொறுப்பேற்று செய்யவேண்டும். தமையனாருடன் இருந்த பொழுது 4 - 5 மைல்கள் நடந்து குடிநீர் சுமந்துவந்தார்.

சுவாமி சிறுவனாக இருந்தபொழுது புட்டபர்த்தி மிகவும் பின்னடைந்த கிராமமாகவே இருந்தது. இப்பொழுது அது மிகவும் விருத்தி அடைந்துள்ளது. சுவாமியின் அன்பு அயல் கிராமங்களையும் முன்னேறச் செய்தது. அவர் பல்கலைக்கழகம், பாடசாலைகள், வைத்தியசாலைகள் ஸ்தாபித்தார். றயல்சீமா என்ற வரண்ட கிராமத்திற்கு குடிநீர்வசதி ஏற்படுத்தினார். சர்வதேச சத்தியசாயி நிறுவனத்தை ஸ்தாபித்து உலகெங்கும் சேவையை விரிவுபடுத்தியுள்ளார். கோடிக்கணக்கானவர்களை உன்னதமாக மாற்றியுள்ளார். குடிநீர் வசதி அமைத்ததற்காக கிராமத்து மக்கள் பிரசாந்தி நிலையம் வந்து நன்றி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார்கள். சுவாமி "எனக்கு இம் மாபெரும் சேவையைச் செய்யச் சந்தர்ப்பம் தந்துள்ளீர்கள். இதற்காக நான் தான் நன்றி கூறவேண்டும். மேலும் மேலும் சேவை செய்ய சந்தர்ப்பம் தாருங்கள்" என்று கூறினார்.

நாங்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து அவர்களில் கரிசனை கொள்ளும் திறனை வலுப்படுத்த வேண்டும். ஐந்து அடிப்படை மனித மேம்பாடுகளுக்கும் அன்பே அடிப்படையானது. சுவாமி கூறியவை:

அன்பு எண்ணத்தில் சத்தியமாகிறது.
அன்பு செயலில் தர்மமாகிறது.
அன்பு உணர்வில் சாந்தியாகிறது.
அன்பு புரிந்துணர்வில் அகிம்சையாகிறது.

மனித அன்பு விருப்பு வெறுப்புகளால் மாற்றமடையும். தெய்வீக அன்பு எல்லோரிடமும் ஒரே மாதிரியாக செயற்படும். நிபந்தனையற்றது. தொடர்ச்சி யானது. எதிர்பார்ப்பற்றது. அவர் மிருகங்களையும் எவ்வளவோ அன்புடன் பராமரிப்பார். ஹம்பியில் தங்கிய பொழுது எருமை மாடு தான் குடிநீர் ஏற்றி இறக்கியது. சுவாமி திரும்பும் பொழுது அதற்குப் போய் தடவி நன்றி கூறினார். ஒருமுறை காரில் பயணம் செய்தபொழுது சுவாமி அமைதி நிலையிலிருந்தார். வீதியின் குறுக்கே பாம்பு ஓடியது. சாரதி சடுதியாக பிறேக் பிடித்தால் சுவாமியின் அமைதி குலைந்து விடுமென்று எண்ணி பாம்புக்கு மேலே காரைச் செலுத்தினான். இறங்கும்பொழுது சுவாமியின் அங்கியில் சில்லு அடையாளங்கள் இருந்தன. எப்படி ஏற்பட்டது எனக் கேட்டபோது, "என்னைப்பற்றி சாரதி எவ்வளவு கரிசனை கொண்டாரோ அதற்கும் மேலாக நான் பாம்பின் மீதும் கரிசனை காட்டவேண்டும்" என்று சொன்னார்.

நாம் எமது வசதிக்காக வேறு ஒருவரையோ பிராணியையோ துன்பத்திற்கு ஆளாக்கக்கூடாது.
நாம் ஒருவரையோ பிராணியையோ துன்பப்படுத்தினால் அது சுவாமியைச் சென்றடையும்.
படைப்பில் உள்ள அனைத்திற்கும் சுவாமியே பாதுகாப்பானவர்.
இவை மேற்கூறிய நிகழ்விலிருந்து கற்றுக்கொண்ட பாடம்.

ஒருமுறை மாணவர்கள் நேர்காணல் அறையில் அளவளாவிய பொழுது எல்லோருக்கும் முறுக்கு கொடுத்தார். அவர்கள் சாப்பிடும் பொழுது சிறு துண்டுகள் கீழே விழுந்தன. அவற்றை மெல்ல நிலவிரிப்புக்குக் கீழே தள்ளினார்கள். சுவாமி இதைக்கண்டு "நீங்கள் பிழை செய்தால் ஒழிக்க வேண்டாம். அதை மனத்தைரியத்துடன் ஒப்புக் கொண்டு திரும்பவும் செய்யாதிருக்கவேண்டும்." என்று அறிவுறுத்தினார்.

சுவாமி யாரும் ஏதாவது அற்ப விடயமானதையும் பேசினால் உன்னிப்பாகக் கேட்பார். எதைச் செய்தாலும் முழுக் கவனத்துடன் செய்யவேண்டும். இப்படிச் செய்தால் கடமையில்லாத போதும் அன்பின் நிமித்தம் நல்ல செயல்களைச் செய்வோம். முழு மனதுடன் செய்தால் எதுவும் தெய்வீகமானதாகிவிடும். மாணவர்கள் நாடகம் நடிக்கமுன்பு முழுமையாகச் செயற்படுவார்கள். ஒரு மாணவன், சிறிய நேரத்திற்கு தாகத்தால் வாடும் பரீக்சித் அரசனின் பாகத்தை நடித்தார். சிறிய பகுதிதான், சுவாமி முதலில் இம் மாணவனை ஆசீர்வதித்து மோதிரமும் சிருஷ்டித்துக் கொடுத்தார். ஏனையோர் ஆச்சரியப்பட்ட போது அம் மாணவன் நாடகத்தில் தாக முகத்தைக் காட்டுவதற்காக முழுநாளும் நீர் குடிக்காமலே இருந்தான். இந்தத் தியாகம் மனப்பாங்குதான் சுவாமியால் அவதானிக்கப்பட்டது.

இன்னொருமுறை ஒரு மாணவன் தனக்குக் கொடுக்கப்பட்ட முக்கியமான பெரிய பாகத்தை தன்னிலும் பார்க்கத் திறமையாகச் செய்யக்கூடிய மாணவனுக்குக் கொடுத்தார். நாடக முடிவில் நடித்த மாணவனையும் கொடுத்த மாணவனையும் கூப்பிட்டு ஆசீர்வதித்தார். சகலதையும் சுவாமி அவதானிப்பார்.

சேவை எம்மில் என்ன மாற்றத்தைக் கொண்டுவரும்? உதாரணமாக உடம்பை எடுத்தால் கால் விரலில் முள்ளு குத்திவிட்டால் கால் விலகப் பார்க்கிறது. கை உடனே போய் முள்ளை அகற்றுகிறது. கண் கலங்குகிறது. முழு அவயங்களும் துன்பத்தைப் போக்க உதவுகின்றன. இதேபோல் யாராகிலும் துன்பத்திலிருந்தால் உடனேபோய் உதவிசெய்யவேண்டும். படைப்பு முழுவதுமே ஆண்டவனின் உடம்பு. ஆகவே துயர் தீர்க்கவேண்டும். எல்லோரும் எல்லாம் ஒன்றே என்ற உணர்வு ஏற்படவேண்டும். நாங்கள் எப்போதும் எண்ணம் சொல், செயலில் தூய்மையையும் ஒருமையையும் கடைப்பிடிக்கவேண்டும். எதையும் செய்வதற்கு முன்பு செய்யும் செயல் ஆண்டவனை ஆனந்தப்படுத்துமா? என்று ஆராய்ந்த பின்பே செய்யவேண்டும்.

நாம் எம்மிலுள்ள எதிர்மறைச் சக்திகளை அகற்றுவதற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வப் பிரீதி

முழுமையான நம்பிக்கையும் அன்பும் இருக்வேண்டும். கடவுளே எல்லாம் செய்வார். நான் ஏன் கவலைப்பட வேண்டும்.

பாபபீதி

கடவுளின் சங்கல்ப்பத்தை நிபந்தனையில்லாது ஏற்றுக் கொள்ள வேண்டும். சரணாகதி நாம் அவரின் உபகரணங்களே யாவோம்.

இதைப் பின்பற்றுவது இலேசானதல்ல. நாம் ஒரு அடி எடுத்துவைத்தால் சுவாமி 100 அடிகள் முன்வைத்து எம்மை வழிநடத்துவார். இதற்கு மூன்று Sஐ ஞாபகம் வைத்திருக்கவும். அவையாவன:

S Silent - Sailens

அமைதி அல்லது மௌனம்

S Innerview not Interview

உள்நோக்கு நேர்காணல் அல்ல. அமைதியின் ஆழத்தில் சுவாமியின் குரலைக் கேட்கலாம்.


S Shut our mind open our heart

வாயை மூடி, இதயத்தைத் திறக்கவும்.

ஜோதி தியானம் சுவாமியுடன் தொடர்புகொள்ள வைக்கும். கண்ணைமூடி நாமத்தைச் சொல்லி ரூபத்தை இதயத்தில் இருத்தினால் மனது ஓய்ந்துவிடும். நாம் செய்யும் வேலைகள் அனைத்தையும் நாமஸ் மரணத்தினால் புனிதமாக்கி விடலாம். தொடர்ச்சியான நாமஸ்மரணை பகவானுடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்தும்.

அடுத்த சாதனை "தன்னை அறிதல்" இதை ஸ்வாதியாய என்று சொல்வார்கள். இதற்கு "அகநோக்கு" "அகஆய்வு" பயிலவேண்டும். சாயியின் வாகினி தொடர் : எனது அன்பாண மாணவர்களே (ஐந்து மலர்கள்) வாசிப்பது மிகவும் நன்று. நாளாந்த குறிப்பு ஏட்டைப் பாவிக்கலாம். ஆன்மீக முன்னேற் றத்தை இதன்மூலம் அளவிடலாம்.

ஒரு பரீட்சையில் எல்லாப் பாடங் களிலும் சித்தியடையவேண்டும். இரண்டில் திறமையாகச் செய்து ஒன்றில் குறைவாகச் செய்து பரீட்சையில் சித்தியடைய முடியாது. எண்ணம், சொல், செயல் மூன்றிலும் 100மு கொடுக்கவும். முதலாவது வகுப்பில் சேர்ந்தவனுக்கு, 1990ஆம் ஆண்டு நேர்காணலின்போது சுவாமி படம் ஒன்றை சிருஷ்டித்து எல்லோருக்கும் கொடுத்தார். இரண்டு சுவாமி, ஒன்று கேட்கும் சுவாமி மற்றையது சொல்லும் சுவாமி. இரண்டும் ஒன்றை ஒன்று பார்க்கும் பொக்கற் அளவு படம். இயேசுபிரான் 10 கட்டளைகளில் "அயலவனை உன்னைப் போல் நேசி" என்பதே மிகவும் உன்னதமான கட்டளையென்று சொல்லி யுள்ளார். சுவாமியை சகலதிலும் இருப்பதை தொடர்புபடுத்துவதையே தொடர்ச்சியான இணைந்த பேருணர்வு என்று சொல்லுகிறார்கள். (CIA)




சாயிராம் என்று இதயத்திலிருந்து சொன்னால் மற்றவரில் சாயியைக் காண்கின்றோம் என்பது வெளிப் படையாகும்.

எல்லோருக்கும் அநேகமாக இரண்டு தடைகள் :

1. கடவுளை மறத்தல். இதில் சிக்காமலிருக்க சேவையும் நாமஸ்மரணையும் செய்யவேண்டும்.
2. நான் என்று இவ்வளவு காலமும் வைத்திருந்த அடையாளத்தை விட விருப்பமில்லாமலிருப்பது. மற்றையோரை இருந்த மாதிரியே முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1958 இல் சுவாமி பிரேம வாகினியைத் தொடர்ச்சியாக சனாதன சாரதியில் வெளியிட்டார். இரண்டை வலியுறுத்தியுள்ளார்.

1. மற்றவர்களுடைய பிழைகளை, குறைகளை மறக்க வேண்டும்.
2. சுவாமி எல்லாம் அறிந்தவர், எங்கும் உள்ளவர் என்பதை மறக்கக்கூடாது.

நாங்கள் கூப்பிடாவிட்டாலும் சுவாமி அருகிலேயே இருப்பார். சுவாமியின் கால்களைக் கெட்டியாகப் பிடிக்கவேண்டும்.

"எனக்கு உங்களின் பக்தி (Devotion) வேண்டாம். உங்களின் உன்னத மாற்றத்தையே (Transformation) வேண்டுகிறேன்"

"சிறிய நான் (தன்னலம்) வாங்கி வாங்கி மறந்துவிடும். பெரிய நான் (ஆன்மா) கொடுத்துக் கொடுத்து மன்னித்துவிடும்."

Phyllis Krystal என்ற பக்தை போன விமானம் கடத்தப்பட்டது. பயங்கரவாதிகள் சகலரையும் கொல்லப்போவதாக அதட்டினார்கள். இந்த பக்தை பகவானைப் பிரார்த்தித்து பகவானின் அன்பை அவர்களுக்கு மானசீகமாகச் செலுத்தினார். அவர்களின் மனம் மாறி எல்லோரையும் விடுவித்தார்கள். முயற்சி, அப்பியாசம், பொறுப்பு இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27.04.2018



# ஸ்ரீ. பிஸ்புருஸ்டி

ரேடியோ சாயியில் முதல்வராகப் பணிபுரிகிறார்,
சத்திய சாயி உயர்கல்வி நிறுவனத்தின் பட்டதாரி.

பஜனைப் பாடலுடன் தொடங்கினார்.
பிரசாந்தி நிலைய வாசி
அரஜசுலோ மேரே சாயி.

புட்டபர்த்தி பிராசாந்தி நிலைய தேவனே எனது பிரார்த்தனை யை செவி மடுக்கவும்.

எனது சமர்ப்பணங்கள்.

1947ஆம் ஆண்டு சென்னையிலுள்ள பால பட்டாபியை நோக்கிக் காரில் சென்றார். இடையில் காரை நிற்பாட்டி தான் கொண்டுவந்த சிற்றுண்டிகளை எல்லோருக்கும் கொடுத்தார். கார் சாரதி சாப்பிட மன மில்லாமல் மிகவும் சஞ்சலத்துடன் இருந்தான். சுவாமி என்ன சமாச்சாரம் என்று கேட்க வாகனத்தில் பெற்றோல் இல்லை. என்ன செய்வதென்று தெரியவில்லையென்று சொன்னான். அதைப் பற்றி கலலைப்படாதே. இப்போ சாப்பிடு, மிச்சம் நான் கவனிக்கிறேன் என்று சொன்னார். சாரதி இந்த இளம் மனிதனுக்கு பெற்றோலின் தேவையைப் பற்றி என்ன தெரியும் என்று எண்ணினான். காரில் திறப்பைப் போட்டதும் என்ஜின் வேலை செய்யத் தொடங்கியது. 300Km பெற்றோல் இல்லாமல் கார் ஓடியது. இடையில் நின்றுவிட்டது. 6.30 மாலைநேரம் எல்லோரும் கொஞ்சநேரம் ஓய்வெடுத்தார்கள். சாரதி காருக்குப் பின்னால் போய் பீடி புகைத்தார். சுவாமி அவனிடம் விபூதி இருக்குதா என்று கேட்டார். எனக்கு அதில் நம்பிக்கை இல்லை என்று சொன்னான். சுவாமி என்ன பெயர் என்று கேட்க குமாரசாமி என்று பதிலளித்தான். “நீ வடை சாப்பிட்டிருக்கிறாயா?” ஏன் அதைக் கேட்கிறீர்கள்? “நீ உனது அம்மா செய்த வடை சாப்பிட்டிருக்கிறாயா” என்று கேட்டார். அப்போது அவன் தனது தாயார் இறந்துவிட்டதாக சொன்னான். எப்படி அம்மா இறந்தார் என்று தெரியுமா? அவர் இறக்கும்போது அவருக்கு 45 வயது. எனக்கு 4 வயது என்று சொன்னார். சாரதி மனம் இழகிவிட்டான். சுவாமி அவனருகில்போய் கையைத் தொட்டார். அவனுக்கு மின்சக்தி பாய்ந்தது போலிருந்தது. சேட்டைத் திறந்து நெஞ்சில் இருந்த காய வடுவைக் காட்டி, இது எப்படி வந்தது என்று தெரியுமா? உனக்கு 2 வயதிருக்கும் மிகவும் வறுமையான குடும்பம். அம்மா ஏதோ பொரித்துக் கொண்டிருக்கும்போது நீ ஓடிப்போய் அம்மாவைக் கட்டிப்பிடித்தாய். அப்போது தடக்குப்பட்டு எண்ணைச் சட்டியில் விழுந்தாய். அதுதான் இந்தக் காயம்” என்று நடந்ததைச் சொல்ல குமாரசாமிக்கு அதிர்ச்சியாயிருந்தது. அதுவரை கடவுளில் நம்பிக்கை யில்லை. இதைக் கேட்டபின்பு அழுது, சுவாமியை சுவாமி யென்று நம்பத் தொடங்கினான். சுவாமி சாரதி அனுமதிப் பத்திரத்தை எடுத்து அதில் தனது படத்தையும் படைத்தார். திகதியும் போட்டார். பயணம் 10.00 மணி இரவு முடிவடைந்தது. அந்நேரம் தொட்டு குமாரசுவாமி சுவாமியின் தீவிர பக்தனானான். தொடக்கக் காலத்தில் சுவாமி கையாலே தொட்டுப் பலரை உன்னதமாக்கியுள்ளார்.

1948 இல் பிரசாந்தி நிலைய மண்ட பத்திற்கு அத்திபாரக் கல் பதிக்கப்பட்டது. பெரிய மாநகரங்களில் இருந்துவரும் பக்தர்கள் புட்டபர்த்தியை விட்டு வேறு வசதியுள்ள இடத்தில் ஆச்சிரமத்தை அமைக்குமாறு கேட்டார்கள். சுவாமி “புட்டபர்த்தியில் விதைத்த விதை வருங்காலத்தில் பெரிய விருட்சமாக வளரும். திருப்பதி, காசி போன்ற வற்றை விட பிரபல்யமாகும்” என்று கூறினார்.

அத்திபாரத்துடன் யந்திரத்தகடு சிருஷ்டித்து வைத்தார். திரு.திருமால் ஐயங்கார் தான் கட்டடக் கலை வல்லுனர். அவர் ஒரு பெரிய பாறைக் கல்லைத் தேடி சித்திராவதி நதியில் திரிந்தார். அப்போது ஒரு பெரிய பாறைக் கல்லைக் கண்டார். அதை உடைப்பதற்கு சுவாமியிடம் அனுமதி கேட்டார். சுவாமி 2 அல்லது 3 நாள்கள் பொறுக்கும்படி சொன்னார். அன்றிரவு பெரிய மின்னல் இடி முழக்கத்துடன் மழை பெய்தது. மின்னல் கல்லில் விழுந்து அதைச் சுக்குநூறாக்கியது. பிரசாந்தி நிலையம் கட்ட போதுமானளவு கல்லுக் கிடைத்துவிட்டது. பிரசாந்தி நிலையம் என்ற பெயர் ஏன் வைத்தது. இங்குவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்களுக்கு பிரசாந்தி கிடைக்க வேண்டுமென்பதற்காகவேயாகும். இங்கே மனது புதிதாகப் பிறந்த பிள்ளையின் மனதைப் போல் மாறும். இங்கு வருபவர்கள் மறுபிறப்பு எடுத்த மாதிரி மாறிவிடுவார்கள். சாரதி குமாரசாமி எப்படி மாறினாரோ அப்படி மாறிவிடுவார்கள். நாங்கள் எவ்வளவு அதிஷ்டசாலிகளென நாம் அறிவதில்லை.

1970 ஆம் ஆண்டு ஒரு மகான் இமய மலையிலிருந்து பிரசாந்தி நிலையத் திற்குப் பயணம் செய்தார். தர்மாவரம் புகையிரத நிலையத்தில் இரவு தங்க வேண்டிய தாயிற்று. காலை எழும்பினால் இவர் திரும்பவும் இமய மலைக்கே கொண்டு போய்ச் சேர்க்கப் பட்டதை உணர்ந்தார். அப்போது அசரீரி "நான் உத்தரவு தரமுந்தி ஏன் வர முற்பட்டாய்?" என்று கேட்டது. நமக்கு ஒவ்வொருவருக்கும் எவ்வாறு பிரசாந்தி நிலையம் வந்தோமென்பது வித்தியாசமான கதையாக இருந்திருக்கும். நாம் திரும்பிப் போகும் போது பிரசாந்தியால் நிரப்பப் படுவோம். டிசெம்பர் மாதம் 1971ஆம் ஆண்டு சென்னையில் பெரிய மகாநாடு நடந்தது. சுவாமி அமெரிக்காவிலுள்ள திரு. திருமதி வால்டர் கோவன் (Walter Cowen) என்ற தம்பதிகளை அழைத்திருந்தார். கோவன் அவர்கள் இதய நோய்க்கு ஆளாகி மரணித்தார். சுவாமி அடுத்தநாள் காலை வைத்தியசாலைக்குச் சென்று அவரை உயிர்ப் பித்தார். கோவன் அவர்கள் தனது அடுத்த உலகப் பயணத்தைப் பற்றி ஹிஸ்லொப் என்பவருக்கு சொல்லியுள்ளார். நாம் முற் பிறவிகளில் நினைத்த, சொன்ன, செய்த செயல்கள் அனைத்தும் பதியப்பட்டிருந்தன. நீதி கொடுக்கும்பொழுது என்ன மனப் பாங்குடன் செயல்கள் செய்யப்பட்டுள் ளனவோ என்றுதான் கவனிக்கப்பட்டதெனச் சொன்னார்.

இனி பூர்ணசந்திர மண்டபத்தைக் கட்டிய கமானி பூர்ணசந்திரனின் வாழ்வைப் பார்ப்போம். 6 மாதங்கள் தீவிரமாக வேலைகளைச் செய்து கட்டி முடித்தார்கள். அவர் ஒரு பெரிய தொழிலதிபர். ஒக்டோபர் மாதம் 1972ஆம் ஆண்டு தசரா விழாவின் போது மண்டபத்திறப்பு விழாவை வைக்கத் தீர்மானித்தார்கள். சுவாமி இரத்தன்லால் அவரிடம் கமானி என்பவரை இவ்விழாவிற்கு வரவேண்டாம் என்று அறிவிக்கும் படி சொன்னார். அறிவிக்கப்பட்டது. கமானி நல்ல பக்தன், இதையிட்டு கவலைப்படவில்லை. விழாவின்போது ஊர்வலம் நடந்தது. அப்போது சுவாமி அருகில் வந்தவர்களுக்கு கமானி இங்கே வந்துவிட்டாரென்று சொல்ல எல்லோரும் அதிசயித்தார்கள். அந்நேரம் கமானி கம்பனி நிர்வாகிகளுடன் கூட்டம் நடத்தினார். சடுதியாக உணர்வின்றி விழுந்து உயிரை விட்டார். கமானியின் மனைவியார் மன முடைந்து விட்டார். பித்துப் பிடித்தவர் போலாகி விட்டார். உடலைத் தகனத்திற்கு எடுத்துச் செல்ல விடுகிறாரில்லையென பிரசாந்தி நிலையத்திற்கு அறிவித்தார்கள். சுவாமி "உடலைத் தகனம் செய்யும்படி சொன்னார்". மனைவியார் சுவாமி தான் சுமங்கலியாக இருப்பேனென ஆசீர்வதித்தார். இது எப்படிப் பொய்க்கும் என்று அலறினார். திருமதி இரத்தின்லாலைப் போய் அவரை ஆற்றும்படி சுவாமி சொன்னார். 3 நாள்களுக்குப் பின்பு சுவாமியிடம் போக வேண்டு மென்று அடம்பிடித்து புட்டபர்த்திக்கு வந்தார்கள். அடுத்த நாள் சுவாமி நேர்காணலுக்குக் கூப்பிட்டார். அங்கே 15 நிமிடங்கள்வரை ஒன்றும் பேசாது தொடர்ச்சியாக அழுதார். சுவாமி அவரின் தலைமேல் கைவைத்துக் கொண்டே யிருந்தார்.

30 நிமிடங்களுக்கும் ஒன்றும் பேசாமல் வெளியே வந்துவிடுவார். ஒருநாள் சுவாமியிடம் ஏன் நடந்தது என்று கேட்கப்போகிறேன் என்று சொல்லி சுவாமியிடம் கேட்டார்.

**திருமதி கமானி :**
சுமங்கலி என்ற ஆசீர்வாதத்தின் பலன் என்ன?
**சுவாமி :**
அம்மா, பக்தன் என்றால் யார்?
**திருமதி கமானி :**
கடவுளுடன் தொடர்புகொண்டவன்.
**சுவாமி :**
கணவன் என்றால் யார்?
**கமானி அம்மையார் :**
குடும்பத்தின் தேவைகளைக் கொடுத்து பாதுகாப்பவர்.
**சுவாமி :**
"யார் உன்னை எந்நேரமும் பாதுகாத்து கவனிக்கிறார்? உன்னுடைய தோழனாக எப்போதும் இருப்பவர் யார்? நீ கணவனின் மரணத்திற்குப் பிறகு நாராயண சேவை செய்த அன்று சிவப்புச் சீலையல்லவா அனுப்பினேன். வெள்ளை நிறச்சேலை அனுப்பவில்லையே. நான் உன்னுடன் சதா இருக்கிறேன். நீ சுமங்கலிதான். முன்னர் வாழ்ந்தது போல உடை உடுத்தி நடந்துகொள். உடல் வரும் போகும். சுமங்கலியாகவே இரு" என்று கூறி ஆசீர்வதித்தார்.

சுவாமி எப்போதும் மங்களகரமான வார்த்தைகளையே உபயோகிப்பார். அவர் மங்களத்தின் ரூபமேயாகும். எங்களுக்கு நல்லதையே சொல்வார். செய்வார். பிரபஞ்சத்தின் முதல்வனுடனல்லவா நாம் வாழ்கின்றோம். சுவாமிக்கும் தர்மசங்கடமான நிலை ஏற்படலாம். ஒரு அரசன் தன் நாட்டு மக்கள் எப்படி வாழ்கிறார்களென அறிவதற்கு மாறுவேடத்தில் சென்றார். இரவுநேரம் கொள்ளையர்கள் இவரை மறித்துக் களவாட முயன்றார்கள். 5 கிராமத்தவர்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிவந்து அரசனைக் காப்பாற்றினார்கள். சிறிது நேரத்தில் அரசனின் காவலாளிகள் வந்துவிட்டார்கள். அந்த 5பேரின் விவரங்களையும் அறிந்து கொண்டார். அடுத்தநாள் ஐவரையும் கூப்பிட்டு அவர்களின் உதவும் தன்மையைப் பாராட்டி ஒவ்வொருவரையும் விரும்புவது எதுவோ அதைக்கேட்கச் சொன்னார்.

முதலாவது ஆள் :
எனக்கு ஒரு வீடு வேண்டும்.
கட்டித்தரலாம் என்றார் அரசன்.

இரண்டாவது ஆள் :
வணிகம் செய்வதற்கு முதல் இல்லை.
பணஉதவி கேட்டார். கொடுக்கப்பட்டது.

மூன்றாவது ஆள் :
நான் மந்திரியாக இருக்க விரும்புகிறேன்.
மந்திரிப் பதவியும் கொடுக்கப்பட்டது.

நான்காவது ஆள் :
எனது மகளை விவாகம் செய்து கொடுக்கவேண்டும்.
அரசன் தனது மந்திரி ஒருவரை மணக்கச் சொன்னார்.

ஐந்தாவது ஆள் :
அரசே என் வீட்டிற்கு வருடம் ஒரு முறையாவது வந்து போனால் காணும் என்றான்.

அரசனும் ஒத்துக்கொண்டான்.
ஐந்தாம் ஆளின் வீட்டிற்குப் போகும் நாள் நெருங்கி விட்டது. அரசனது சேவகர்கள் வீட்டுக்குப் போகும் வழி நன்றாக இல்லையென்று சொல்லி வீதியைப் புனரமைத்தார்கள்.

வீட்டைப் பார்த்தால் அரசனுக்கு ஒத்ததல்ல என்று தீர்மானித்து நல்ல மாளிகையைக் கட்டிக்கொடுத்தார்கள்.

அரசன் விருந்தினராகப் போவதென்றால் விருந்து கொடுப்பவனுக்குத் தகுதி வேண்டும். அவனை அரச சபையில் பிரபுவாக நியமனம் செய்தார்கள். அரசனை உபசரிக்க நல்ல பெண் வீட்டில் இருக்கவேண்டுமே. இந்த ஆணின் வீட்டில் பெண் இல்லை. ஆகவே அரசனின் மகளை இந்தப் புதிதாக அமைச்சர் பதவி கிடைத்த ஐந்தாவது ஆளுக்குத் திருமணம் செய்தார்கள்.

ஒவ்வொருமாதமும் அவர்களுக்கும் பணமும் கொடுக்கப்பட்டது.

அவன் வருடத்தில் ஒரு தடவையாவது அரசன் வீட்டிற்கு வரவேண்டுமென்றதற்கு எவ்வளவு அவனுக்குக் கிடைத்தது. கடவுளிடம் 100 ஐக் கேட்கவேண்டாம். அவரிடம் "கடவுளே எம்முடன் இருங்கள்" என்றே கேட்கவேண்டும். கடவுள் வந்தால் எல்லாம் கிடைக்கும்.

பிரசாந்தி நிலையத்திற்கு வந்துள்ள நீங்கள் "சுவாமி எங்களுடன் ஒவ்வொரு கணமும் இருக்க வேண்டும்" என்று பிரார்த்திக்கவேண்டும். ஆங்கிலத்தில் பாட்டுப் பாடினார்.



"Every moment of my Life, Please be with me
In every single act of mine, Be thou my guide
Baba Sai Baba, Baba Sai Baba

When i slip, When i fall, Lend your hand
When i stray far away, Bring me back again
Baba Sai Baba, Baba Sai Baba

From the Darkness into Light, Lead me Father
From Unreal, to the Real
Baba Sai Baba, Baba Sai Baba"

புறப்பட்டுப் போகும் போது சுவாமியையும் கூட்டிச் செல்லுங்கள்.

"சமஸ்த லோகா: சுகினோ பவந்து"

ஜெய் சாயிராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27.04.2018



# ஸ்ரீ .R.J. இரத்னாகர்

**சுவாமியின் இரத்த உறவினர். சத்திய சாயி உயர்கல்வி நிறுவனத்தில் கல்வி கற்றவர். சுவாமியே இவரை மத்திய அறக்கட்டளையில் முக்கிய அங்கத்தவராக நியமித்தார். மிகுந்த செல்வாக்குடையவர். சத்திய சாயி நிறுவன உத்தியோகத் தவர்களையும் செய்கைகளையும் நன்றாக அறிந்தவர்.**

பகவானின் பொற்கமலப் பாதங்களில் எனது பணிவான சமர்ப்பணங்கள். சிறீலங்கா யாத்திரீகர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றேன். முதல்தரம் வந்தவர்களை கை உயர்த்தச் சொல்லி அனைவரையும் சாயி குடும்பத்தினுள் சேர்த்துக்கொண்டார். சுவாமி தனது ஸ்தூல உடம்பு இல்லாத நிலையில் உங்களை இங்கே கூட்டிவந்துள்ளார். எல்லோரும் பாக்கியசாலிகளே. ஏனென்றால் சுவாமியின் அனுமதியின்றி பிரசாந்தி நிலையத்தினுள் நுழைய முடியாது. சுவாமி தமிழில் நன்றாகக் கதைப்பார். சென்னை, சிறீலங்காவிலிருக்கும் பக்தர்களை மிகவும் நேசிப்பவர். 1943ஆம் ஆண்டே தமிழ் மாநிலத்திலுள்ள அநேக கிராமங்களுக்குப் போயுள்ளார். தான் மனித உருவம் எடுத்ததே மானிடரைத் திரும்பவும் அவர்களது உற்பத்தி நிலைக்குக் கொண்டு போவதற்கே என்று சுவாமி சொல்லியுள்ளார். சுவாமிக்கு ஒரே ஒரு ஆசைதான். அது எம்மை ஆசையற்ற வர்களாக்குவதேயாகும். நாங்கள் எவ்வளவு முயன்றாலும் ஆசையை முற்றாக அழித்து விட முடியாது. குறைந்தது வாழ வேண்டு மென்ற ஆசையாவது எஞ்சியிருக்கும். நாங்கள் என்ன விருப்பத்தோடும் சுவாமியிடம் போனால் அது கிடைக்கும். கிடைக்கும் வரை விடாப்பிடியாகக் கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். சிறு பிள்ளை தனக்கு ஒன்று வேணும் என்று அடம் பிடிப்பதை உதாரணமாக சுவாமி சொன்னார்.




இன்னொரு அருளுரையில் சுவாமியிடம் சுவாமியை அல்லாது ஒன்றையும் கேட்க வேண்டாம். கேட்டால் கீழ் நிலைக்குப் போய்விடுவோம் என்று சொன்னார். நான் அப்போது இளம் பையனாக இருந்தேன். சுவாமியிடம் "ஒரு சந்தேகம்" என்று சொன்னேன். அது என்ன என்று கேட்டார். நான் "சுவாமி ஒரு அருளுரையில் வேண்டியதை சிறுபிள்ளை அடம்பிடித்துக் கேட்பது போலக் கேட்கவேண்டுமென்று சொன்னீர்கள். வேறொரு உரையில் கடவுளிடம் ஒன்றும் கேட்கவேண்டாம் என்று சொன்னீர்கள். இந்த முரண்பாட்டை விளக்கவும்" என்று கேட்டேன்.

"பிள்ளை மாதிரிக் கேட்கவேண்டுமென்றால் சுவாமியைத்தான் விடாப்பிடியாக பிள்ளைமாதிரிக் கேட்கவேண்டுமென்பதுதான் அதன் விளக்கம்" என்று சொன்னார்.

சுவாமி கடுமையான ஆன்மீக சாதனை செய்யச் சொல்லவில்லை. எல்லாவற்றையும் ஆன்மீகமயமாக மாற்றினால் அதுவே போதும். உதாரணமாக, பள்ளிச் சிறுவன் படிப்பை முழுமையாகக் கற்கவேண்டும். இளம் வயதினர் நல்ல உத்தியோகம் தேடவேண்டும். பின்பு விவாகம். இப்படியே நிகழ்வுகள் நடக்கும். உலகவாழ்க்கையையும் திறமையாக உன்னதமாக வாழவேண்டும். கடவுளைத் தோழனாக வைத்திருக்க வேண்டும். எமது வாழ்வு தெய்வீகமானதாக மாறும். ஒரே சைதன்யமே யாவற்றிலும் இருக்கிறதென்பதை ஆழமாக உள் வாங்கிக்கொள்ளவேண்டும். ஆத்மா உடலைவிட்டுப் போனதும் உடல் சவமாகிறது. ஒருவரும் சவத்தை வைத்திருக்க விரும்பமாட்டார்கள்.

சுவாமி சொன்ன கதை ஒன்று:

ஒரு அரசன் எல்லோராலும் விரும்பப்பட்டவன். அவன் இறந்ததும் பிரேதத்தை கொண்டுபோகும் பொழுது கடும் மழை பெய்தது. கொஞ்சநேரம் கடையிலோ கோவிலிலோ வைப்பதற்கு ஒருவரும் அனுமதிக்கவில்லை. எந்தப் புகழான பெரிய அரசனாகிலும் சவமானால் மதிப்பில்லை. செருப்புக்குக் கிடைக்கும் மரியாதைகூட சவத்திற்குக் கிடைக்காது.

உயிருடன் இருக்கும் பொழுது சுவாமியின் மகா வாக்கியத்தை "அனைவரையும் நேசி அனைவருக்கும் சேவை செய்" செயற்படுத்தவேண்டும். நாரதர் வியாசரைப் பார்த்து 18 புராணங்களையும் கலியுகத்தில் வாசிக்கமாட்டார்கள். ஆகவே சாராம்சமாக சொல்லவும். வியாசர். ஒரு வசனத்தில் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**"எப்போதும் உதவி செய், ஒருபோதும் தீங்கு செய்யாதே"**

நாங்கள் பிரபல்யமான கோயிலுக்குப்போய் சில மணித்தியாலங்கள் வரிசையில் நின்று இறுதியில் கருவறையைச் சென்றடைந்தபோது கண்களை மூடிப் பிரார்த்திக்கின்றோம். அதுவரை அந்த விக்கிரகத்தைப் பார்த்துக் கும்பிட வேண்டும் என்று ஆவலுடன் இருந்தோம். ஏனென்றால் கடவுள் உள்ளேதான் இருக்கிறார் என்றஉணர்வு வந்துவிடுகிறது. கடவுள் ஒவ்வொரு ஜீவனுக்குமுள்ளே உறைகிறார். நாங்கள் ஊட்டிக்கு சுவாமியுடன் போய்க்கொண்டிருந்தோம். மதுமலைக் காட்டில் வாகன நெரிசல் ஏற்பட்டு காரை நிற்பாட்டினோம். 3 - 4 மணித்தியாலமாக வாகனங்கள் ஓடாமல் நின்றன. ஒரு பெரிய யானை தெருவின் நடுவில் நின்று கொண்டிருந்தது. இதைச் சுவாமிக்கு அறிவித்தோம். வாகனங்களுக்கு அருகே மெல்லச் சென்று, வீதியை விட்டுச் சென்று சுவாமி யானையைப் பார்த்தார். யானையும் சுவாமியைப் பார்த்தது. அது மெல்ல நடந்து ஓரமாகப் போய் நின்றது. வாகனங்கள் நகரத் தொடங்கின. நாங்கள் ஊட்டிக்குப் போய்ச்சேர்ந்து 10 மணித்தியாலத்திற்குப் பின்னரே மற்றைய வாகனங்கள் வந்தன. யானை எங்களைப் போகவிட்டு திரும்பவும் நடுத்தெருவில் வந்து நின்றதாகச் சொன்னார்கள். பிரபஞ்சத்தில் எங்கும் சைதன்யம் பரந்துள்ளது. பகவானுக்கு எல்லாம் தெரியும். இதைச் சந்தேகிக்கக்கூடாது. எமது சைதன்யாவின் பிரகாசத்தை 6 உள் எதிரிகள் மழுங்கடித்துவிடுகின்றன.

பொறாமையை விளக்குவதற்காக சுவாமி சொன்னகதை :

இரண்டு தபசிகள் கடுமையாக ஒருவருக்கு ஒருவர் எதிராக இருந்து தவம் செய்தார்கள். கடவுள் காட்சி கொடுத்தார். முதலாவது நபரிடம் போய் வரம் கேட்கும்படி சொன்னார். அடுத்த தபசி என்ன கேட்டாரோ இரண்டு மடங்கு தரும்படி வரம்கேட்டார். கடவுள் மற்றவரிடம் போய் வரம் கேள் என்றார். அவர் "மற்றைய தபசி என்ன வரம் கேட்டார்?" என்றார். கடவுள் "அவர் உமக்குக் கிடைப்பதில் இரண்டு மடங்கு தரவேண்டும்" என்று வரம் கேட்டதாக சொன்னார். இருவருக்கும் இடையில் அளவிலா பொறாமை. இரண்டாவது தபசி தனது ஒரு கண்ணை குருடாக்கிவிடும்படி கேட்டார். முதலாவது தபசியிடம் சென்றபோது மற்றவர் கேட்ட வரத்திலும் பார்க்க இரண்டு மடங்காயின் உமது இரண்டு கண்களும் குருடாக வேண்டுமென்று வரம் கொடுத்தார். பொறாமை மனிதனை எவ்வளவு கீழ் நிலைக்கு தாழ்த்துகிறதென்பதைப் புரியலாம். எவ்வளவு தவம் செய்தும் பிரயோசனமில்லை. நாங்கள் எல்லோரும் ஒரு தாயின் பிள்ளைகளே. தாய் பிள்ளைகள் சண்டையிடுவதை விரும்ப மாட்டாள். கடவுள் எல்லோரிலும் உறைகிறார் என்ற இறுக்கமான நம்பிக்கை யிருந்தால் ஒருவருக்கும் தீங்கு செய்ய மாட்டோம். கிருஷ்ண பகவானின் காலத்தில் தீயது வெளியே இருந்தது. இப்போது கலியுகத்தில் தீமை மனிதனுக்குள்ளேயே இருக்கிறது. ஆகவேதான் மனிதனை உன்னத மானவனாக மாற்றவேண்டியுள்ளது.

சுவாமி எங்களுக்குத் தந்த ABC

ABC எப்போதும் கவனமாக இரு

ABC தீயவர்களுடன் அணுகாதே

ABC தீய சம்பாசனையிலிருந்து விலகியிரு.

எப்போதும் இனிமையாகவும் மென்மையாகவும் பேசவும். தொடர்ச்சியான பிரார்த்தனையும் எப்போதும் புன்னகையுடனும் வாழவேண்டும். பலர் பிரசாந்தி நிலையத்திற்கு வந்து பிரச்சினைகளால் அழுவார்கள். பணம் பிரச்சனையை எப்போதும் தீர்க்காது. தூய்மையான அன்பு தான் பிரச்சினையைத் தீர்க்கும். உதாரணமாக பஞ்சுமெத்தை குளிரூட்டிய அறை, எல்லாம் இருந்தாலும் நித்திரை வராது. மன நிம்மதி இல்லாவிட்டால் நித்திரை வராது. தூய அன்பு தான் அமைதியையும் நித்திரையையும் தரும். இதைச் சொல்லி வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுவதற்கே அவதார் உதித்தார்.

நாங்கள் தூர கிரகங்களுக்கெல்லாம் பயணிப்போம். அயல் வீட்டுக்காரனில் கரிசனை இல்லை. வீட்டில் முரண்பாடு இருந்தால் சமூகத்தில் எப்படி அமைதி நிலவும். சுவாமி சொல்லியுள்ளார்.

- தனி நபர் உன்னத மாற்றமே முதல் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செய்துகொண்டிருப்பதைக் கைவிடத் தேவையில்லை.
- கடவுளை இதயத்தில் இருத்திவிடு
- பிரச்சினைகளைப் பற்றிக் கடவுளுக்குச் சொல்லத்தேவையில்லை.

நீ கடவுள் என்று நினை, பிரச்சினைகளெல்லாம் பறந்துவிடும். "சுவாமி உம்மிலேயே எனக்குப் பக்தி என்னைக் காப்பாற்றுக" என்று காலையும் மாலையும் பிரார்த்திக்க வேண்டும். அரைநேரம் வேலை செய்து முழுநேரச் சம்பளம் எடுக்கமுடியாது. பகுதி நேர வழிபாட்டிற்கு முழுநேரக் கிருபை எப்படிக் கிடைக்கும்?

எப்பொழுதும் சுவாமியுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நாங்கள் பிழைகளை விட்டுவிட்டு சுவாமியை எங்கள் பக்கம் நிற்கச் சொல்கிறோம். கடவுளுமோ மிகுந்த அன்பு கொண்டவர். எப்போதும் கொடுப்பதற்கே ஆயத்தமானவர். அவர் எமது அன்பு ஒன்றையே எதிர் பார்க்கிறார்.

"உங்களுக்கு உரை நிகழ்த்தியதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. சுவாமி உங்களையும் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக. எப்போதும் பிரசாந்தி நிலையத்திற்கு வரவும். அமைதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்"

(சந்தேகங்கள் இருந்தால் கேட்கச்சொல்ல ஒருவரும் கேட்கவில்லை.)

ஜெய் சாயிராம்.

டாக்டர் ஜெகநாதன் நன்றிகூறி அவரை ஸ்ரீ லங்காவுக்கு வருமாறு அழைத்தார்.






# இழப்பும் பேறுதான் !

இழந்தது எல்லாம் திரும்பத்தா இறைவா
இழந்தது எல்லாம் திரும்பத் தா என்றேன்.
இழந்தது எவை என இறைவன் கேட்க,
பலவும் இழந்திருக்கிறேன் கணக்கில்லை என்றேன்...
பட்டியல் ஒன்றிட்டுச் சொல்லவா இயலும்?
கால மாற்றத்தில் இளமையை இழந்தேன்...
கோலம் மாறி அழகையும் இழந்தேன்...
வயதாக ஆக உடல் நலம் இழந்தேன்...
எதை என்று சொல்வேன் நான்...
இறைவன் கேட்கையில்?
எதையெல்லாம் இழந்தேனோ
அதையெல்லாம் மீண்டும் தா என்றேன்.
அழகாகச் சிரித்தான் இறைவன்.
"கல்வி கற்றதால் அறியாமையை இழந்தாய்"..
" உழைப்பின் பயனாய் வறுமையை இழந்தாய்"..
" உறவுகள் கிடைத்ததால் தனிமையை இழந்தாய்"..
"நல்ல பண்புகளால் எதிரிகளை இழந்தாய்"..
சொல்ல இன்னும் பல உண்டு இது போல ...
தரட்டுமா அனைத்தையும் திரும்ப என்றான்...
திகைத்தேன்!
இழப்பின் மறுபக்கம் எதுவேன்று உணர்ந்தேன்.....
வாழ்க்கையின் ஓட்டத்தில் இழப்பும் பேறுதான்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேராசிரியர். நஞ்சுண்டையா

முன்னாள் பரீட்சை நெறியாளர்.
சத்திய சாயி உயர்கல்வி நிறுவனம்

ஓம் ஸ்ரீ சாயிராம்


சுவாமி தூய அன்பானவர். நானே அன்பின் வடிவம் என்றும் தான் சொல்வது மந்திரமாகும் என்றும் கூறியுள்ளார். இதயத்திலிருந்து பேசவேண்டும். எத்தனை பேர் கேட்க வந்துள்ளார்க ளென்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டாம். வருவோரின் எண்ணிக்கை தன்னில் தங்கியுள்ளது என்றார். ஒருமுறை தரிசனத்திற்குப் போய் சத்தியம் சிவம் சுந்தரம் பாகம் 3 என்ற புத்தகத்தை வாசித்துக்கொண்டிருந்தேன். சுவாமி அதை என்னிடமிருந்து எடுத்து கதிரையில் அமர்ந்து மூன்று கவிதைகளை எழுதினார். சுவாமியே உங்கள் அனைவரையும் அழைத் துள்ளார். என்ன பிரயோசனம் பெறவேண்டும். எவ்வாறு ஆனந்தமாய் இருக்வேண்டுமென்பதை உணரவேண்டும். அதிஅற்புதமான ஆதி புருஷரான சுவாமியிடம் இருந்து அன்பைப் பெறவேண்டும். சுவாமி எனக்குப் பல கடிதங்கள் எழுதியுள்ளார். ஒரு கடிதத்தில்:
"இந்த உடலை, நீ பல பிறவிகளில் செய்த புண்ணிய ங்களின் பலனாகப் பார்க்கும் சந்தர்ப்பத்தை பெற்றாய்."

"ஆசை மாயை என்னும் மகா சக்தியின் வெளிப்பாடு திரும்பத் திரும்ப எழும். ஏன் என்றால் உனது அறியாமையே பிரமையே அதற்குக் காரணம்"
"சுவாமி சதா பரவசத்திலுள்ளார். அவரை நீங்கள் எங்கெல்லாமோ தேடுகிறீர்கள். கவரிமான் தன்னிலிருந்து தான் வாசைன வருகிறதென்று தெரியாமல் வெளியே தேடுகின்றது. நீங்களும் கடவுளை வெளியே தேடுகிறீர்கள். இதயத்தில் அவர் உள்ளார்."

"நான் மனிதன் தெய்வீகமானவன் என்பதை உணரவைக்கவே வந்துள்ளேன்" என்று எழுதியிருந்தார். சுவாமி 8 பேரை மீள் உயிர்ப்பித்துள்ளார். 1984ஆம் ஆண்டு தசரவிழாவின் போது சுவாமியின் உரை நடந்தது. அங்கு அவர் முன்னிலையில் கதிரையிலிருந்த Dr.போஸ் என்பவர் மயங்கிவிழுந்து உயிர்நீத்தார். இதை வைத்தியர்களும் உறுதிப்படுத்தினார்கள். "Dr. போஸ் எழும்பு" என்று சொல்ல அவர் எழும்பினார். சுவாமியிடம் இருந்து நாம் எதையும் பெறலாம். உயிர், மோதிரம், சங்கிலி, விபூதி, மருந்து ஆகியவற்றைக் கொடுத்து அற்புதங்கள் நிகழ்த்தியுள்ளார். சிலர் இந்த அற்புதங்களைப் பார்க்க வந்தார்கள். சிலர் தமது பிரச்சினைகளைத் தீர்க்க வந்தார்கள். பலர் ஆனந்தத்திற்காக வந்தார்கள். இதய பூர்வமான பிரார்த்தனையை செவிமடுப்பார். சுவாமி எம்மிட மிருந்து ஒன்றையும் எதிர்பார்ப்பதில்லை. எப்போதுமே கொடுத்துக் கொண்டிருப்பார்.

திரு. வால்டர் கோவன், திரு. ராதாகிருஷ்ணன், திரு. ரசகோத்ரா ஆகியோரை மீள் உயிர்ப்பித்துள்ளார். என்னைச் சுவாமி எத்தனையோ தடவைகள் பாராட்டி வெகுமதிகள் தந்துள்ளார். நான் இதை எனது கர்வத்தை பலப்படுத்தச் சொல்ல வில்லை. எதையும் தருவார் சுவாமி என்பதையே சொல்ல வந்துள்ளேன். 1963ஆம் ஆண்டு சுவாமி பக்தன் ஒருவருடைய இதய நோயையும் பாரிசவாதத்தையும் எடுத்து ஒரு கிழமை அவஸ்தைப்பட்டார். பல பக்தர்களை யும் அவஸ்தைப்படவைத்தார். பேராசிரியர் கஸ்தூரி அவர்கள் சுவாமியிடம் "ஒரு பக்தனுக்காக அவரது வருத்தத்தை தங்கள் மீது எடுத்துக் கொள்வதனால் அநேகமான பக்தர்களை அவஸ்தைக்குள்ளாக்குகிறீர் களே" என்று கேட்டார். சுவாமி, "எனக்கு உங்களுடைய கணக்கு ஒன்றும் தெரியாது. யாராவது என்னிடம் அடைக்கலம் புகுந்தால் அவரைப் பாதுகாப்பேன்." என்று பதிலளித்தார்.

ஒருமுறை சுவாமியுடன் காரில் வரும் போது (1981) தேவனாப்பள்ளி என்ற கிராமத்தில் அரசியல் பிரச்சார நிகழ்வு நடந்து கொண்டிருந்தது. சுவாமி யார் வெல்லுவார் என என்னிடம் கேட்டார். யார் வென்றாலும் யார் தோல்வியடைந்தாலும் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வராது என்று பதிலளித்தேன். ஏன் அப்படிச் சொல்கிறாய்? எனது கிராமத்தில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொன்னதும், "அது என்ன உனது கிராமம்? உனது கிராமம் பிரசாந்தி நிலைய மல்லவா?" என்று சொன்னார். பின்பு "சுவாமி காங்கிரஸ் வலுக்கட்டாயப்படுத்தி கர்ப்பத் தடை ஒப்பறேசன் செய்தார்கள். கிராம மக்கள் வெறுப்புடன் இருக்கிறார்கள் என்று சொன்னேன்.

"சுவாமி சில நிகழ்வுகள் உங்கள் சங்கல்ப்பத்தினால் நடக்கின்றன. சில அசம்பா விதங்கள், இயற்கை அனர்த்தங்கள் உங்கள் சங்கல்ப்பமின்றி நிகழ்கின்றன. இந்த நிகழ்வுகளால் பிரபஞ்சத்திலுள்ள சமநிலை குழம்பாதா?" என்று கேட்டேன். சுவாமி "நான் ஆதி முதல்வன், நான் அரசாங்கத்தில் அமைச்சரவையும் அமைச்சர்களும் இருப் பதைப் போல நானும் அமைச்சரவை, அமைச்சர்கள் எல்லாம் வைத்திருக்கின்றேன். உதாரணமாக சூரியன், சந்திரன், ஆகியோராகும். ஆனாலும் எனக்குக் கீழே மூன்று திணைக்களங்களை நேரடிப் பார்வை யில் வைத்துள்ளேன். அமைச்சரவையின் வேலைகளில் நான் குறுக்கிடுவதில்லை." என்று சொல்லி மூன்று திணைக்களங் களையும் சொன்னார்.

1. என்மீது பக்தி கொண்டவர்களை நான் நேசிக்கிறேன். நான் அவர்களின் பக்தியை அல்லாது வேறொன்றையும் கவனிப்பதில்லை. அவர்கள் குற்றவாளிகளாகவும் இருக்கலாம். அவர்களை உன்னதமாக மாற்றுவதே என் நோக்கம். எனது பணியும் அதுவேயாகும்.
2. யார், யார் நிஷ்காமகர்மாவில் ஈடுபடுகிறார்களோ அவர்களை நான் கவனிப்பேன். நான் எண்ணிக்கையைப் பார்ப்பதில்லை. தரத்தையும் மனப்பாங்கையுமே அவதானிப்பேன்.
3. ஆன்மீக சாதனையில் ஈடுபடுப வர்களையும் நான் நேரடியாகக் கவனிப் பேன். யாராவது என்னைத் தியானித்தால் நான் அவரைப் பாதுகாப்பேன்.






சுவாமி ஒரு வணிகனல்ல: அவர் தெய்வீகத் தாய். கேட்பதைத் தருவபவர். தனக்கு எப்போது எதை எப்படிக் கொடுக்க வேண்டுமென்று தெரியும் என்று சொன்னார். தொடக்கத்தில் உலகப் பொருள்களைக் கேட்பீர்கள். பின்னர் ஆன்மீக முன்னேற்றத்தைக் கேட்பீர்கள். ஷீரடி சாயி பாபாவும் சபுரி (பொறுமை), சிரத்தை (நம்பிக்கை) இரண்டையுமே கேட்பவர். அசையாத நம்பிக்கை இருக்கவேண்டும். யாத்திரைகளிலும் பார்க்க பயிற்சியில் ஈடுபடவேண்டும்.

நான் ஒன்றைப்பற்றியும் கவலைப்படுவதில்லை. சுவாமி எனது குடும்பக் கடமை எல்லாவற்றையும் கவனிக்கிறார். அவர் இப்போது ஸ்தூல உடம்பில் இல்லாவிட்டாலும் அநேகருக்கு உலகெங்கும் பலவிதமான அற்புதங்களையும் அனுபவங்களையும் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்.

பிரேமதாரா பாகம் - I , சுவாமி எழுதியது. அதை வாசிக்கவும். நம்பிக்கை யுடனும் அன்புடனும் நாமஸ் மரணையுமே போதும். காயத்திரி மந்திரத்தை 3 தடவை 3 வேளைகளில் சொல்லவும். பெரிய சாதனை ஒன்றும் தேவையில்லை. செய்வதெல்லாவற்றையும் எனக்கு அர்ப்பணித்து விடவும்.

சுவாமி எனக்கு எழுதிய கடிதங்களிலிருந்து சில செய்திகளைச் சொல்கிறேன்.

- எனக்குத் தூய்மையான இதயமே வேண்டும் பணம் அல்ல.
- எனக்கு நீ எழுதும் புத்தகத்திலும் பார்க்க நீயே வேண்டும்.
- "சுவாமியே வேண்டும்" என்று பிரார்த்திக்க வேண்டும்.
- சுவாமியின் பணி கிடைக்க வேண்டுமெனக் கேள்.
- எங்கள் எல்லோரையும் பாதுகாத்தருளும் என்று பிரார்த்திக்கவும்.
- எங்களில் உள்ள பிழைகளைத் திருத்திவிடுமாறு வேண்டவும்.

சொன்னவற்றை இதயத்தில் பதித்துக் கொள்ளவும்.

"சமஸ்த லோகா சுகினோ பவந்து"

ஜெய் சாயிராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஸ்ரீமதி. சுந்தரவல்லி சுரேஷ்

(சுவாமியின் கல்லூரியில் ஆசிரியையாக பணிபுரிகிறார்)

சாயி காயத்திரியை உச்சரித்து பின்வரும் பஜனைப் பாடலுடன் தொடங்கினார்.

ஹர சிவ சங்கர ஸஷாங்க சேகர
ஹரபம் ஹரபம் பம் பம் போலோ
பவ பயங்கர கிரிஜா சங்கர
திமி திமி திமி தக நர்த்தன கேலோ

9 கோட்பாடுகள் சுவாமி தந்துள்ளார். (தமிழில் பேசப் பெருமையாக உள்ளது.) இதைக் கடைப் பிடித்தால் தான் சுவாமி யிடமிருந்து பக்தன் என்ற சான்றிதழைப் பெற முடியும். எப்படியெல்லாம் வாழ வேண்டு மென்று சிறு கதைகள் மூலமும் சில உவமைகள் மூலமாகவும் சுவாமி விளங்கப் படுத்தியுள்ளார். எமக்கு கிடைப்பதெல்லாம் எமது கர்மவினை மூலமேயாகும். வேப்பம் கொட்டை விதைத்து மாம்பழம் எடுக்க முடியாது. சுவாமி, "பங்காரு நான் சொன்னபடி நடந்தாயேயானால் துன்பம் வராது" என்று சொல்லி யுள்ளார்.

பிரம்மா ஒருமுறை நாரதரைப் பார்த்து "நீர் பல லோகமெல்லாம் போய் வருகிறீர். பூலோகத்தில் நடக்கும் அதிசயத்தைச் சொல்லும்" என்று கேட்டார். நாரதர், "இறந்த மனிதனைப் பார்த்து இறக்கப்போகும் மனிதர்கள் அழுகிறார்கள். எப்போது எப்படி உயிர் விட்டுப் பிரியும் என்று தெரியாது. 84 இலட்சம் உயிரினங்கள் படைக்கப்பட்டுள்ளன. அதில் மனிதனுக்கே அதி உயர்நிலை கொடுக்கப் பட்டுள்ளது. அவனுக்கு ஆனந்தத்தில் வாழத்தெரியாது. அவன் மறந்து விட்டான்." என்று கூறினார்.

எப்போதும் இன்பத்தையே நாடுகிறோம். அப்படிப்பட்ட வாழ்க்கை வாழத்தெரியாது மனிதன் தடுமாறு கிறான். பாவம் என்றால் என்ன? எதைச் செய்தாலும் பிறருக்குத் துன்பம் விளைந்தால் அது பாபச் செயலாகும். எண்ணத்தாலும் சொல்லாலும் செயலாலும் இது ஏற்படலாம். அதன் விளைவை ஏற்றுக்கொள்ளவேண்டும். புண்ணியம் என்றால் ஒருவனின் எண்ணத்தாலும் சொல்லாலும் செயலாலும் பிறர் ஆனந்தம் அடைந்தால் அது புண்ணியச் செயலாகும். உணவு உண்ணமுன்பு பிறருக்கும் உணவு கிடைக்கவேண்டுமென்று பிரார்த்தனை செய்ய வேண்டும். பிடி அரிசி மிச்சம் பிடித்து நாராயண சேவை செய்யலாம். சிறிதளவானாலும் பரவாயில்லை. அலெக்சாண்டர் சக்கரவர்த்தி பல நாடுகளைக் கைப்பற்றி இறக்கும் தறுவாயில் தனது கைகளை சவப்பெட்டிக்கு வெளியே தொங்க விடவேண்டுமென்று சொன்னான். அதாவது நாம் போகும்போது ஒருகை மண்ணையும் கொண்டு போகமுடியாது என்பதை உணர்த்தவே.

நீங்கள் எல்லோரும் இங்கு வருவதற்கு எவ்வளவோ ஒழுங்குகள் செய் திருப்பீர்கள். எவ்வளவோ யோசித் திருப்பீர்கள். நாம் தயார் செய்ய வேண்டும். சுவாமி மிகுதியைச் செய்வார். ஒரு அரசன் மந்திரியிடம் நாட்டு நடப்பு எப்படி இருக்கிறது என்று விசாரித்தான். மந்திரி "எல்லாம் நல்லது, ஆனால் ஊர்முழுவதும் ஒருவனை முட்டாள் என்று சொல்கிறார்கள்." என்றார். அரசன் அந்த முட்டாளைக் கூட்டிவரச் சொன்னான். அரசன் விசாரணை செய்து இவன் ஒரு முட்டாள் என்றே தீர்மானித்து அவனது நெற்றியில் "முட்டாள்" என்பதை எழுதி ஒட்டி விட்டார். காலப்போக்கில் அரசன் மரணப் படுக்கையில் கிடந்தார். முட்டாள் உள்ளே சென்று அரசனைப் பார்த்து, "எங்கே போகிறாய்? எப்பொழுது போகிறாய்? எப்படிப் போகிறாய்? எப்போது வருவாய்?" என்று கேட்க அரசன் ஒன்றும் தெரியாது என்றான். இது ஒன்றும் தெரியா விட்டால் நீர்தான் சரியான முட்டாள். உமக்குத்தான் இப்பட்டி பொருந்தும் என்று சொல்லி அரசனின் நெற்றியில் ஒட்டினான். பிறருக்குச் சேவை செய்வதன் மூலமே எமது கர்மாவை அழித்துக் கொள்ள லாம். சுவாமியும் பார்த்துக் கொள்வார். 9 கோட்பாடுகள் தந்துள்ளேன். பின்பற்றினால் ஐவருக்குப்பட்ட கடனையும் தீர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவர்களுக்குக் கடன்.**

- மழை, காற்று கொடுப்பதால்தான் உயிர் வாழ முடிகிறது.

**ரிஷிகளுக்குக் கடன்**

- வாழ்க்கைக் கோட்பாடுகளைத் தந்துள்ளார்கள்.

**பிதுருக்கடன்**

- இறந்த பெற்றோருக்கும் கடன். ஒருநாளாவது நினைத்து பிரார்த்தனை செய்.

**மனிதருக்குக் கடன்**

- தானியங்கள், எல்லாப் பொருள்களையும் எத்தனையோ மனிதர்கள் சேர்ந்து உழைத்தார்கள். அவர்களுக்குக் கடன்.

**பூதக்கடன்**

- பல பிராணிகளுக்கும் கடன் பட்டுள்ளோம். பசு, மரம் ஆறுபோல் வாழவேண்டும். பிறருக்காக வாழ்கின்றன. அப்போதுதான் அருள் கிடைக்கும்.

9 கோட்பாடுகள் சாயி வேதம்.


முதலாவது

தினமும் தியானம், ஜெபம், பிரார்த்தனை. கர்ம மாலையுடன் பிறக்கின்றோம். இக் கோட்பாட்டின் மூலம் கர்மாவின் விளைவைக் குறைக்கலாம்.

இரண்டாவது

குடும்ப பஜனை, வாரத்தில் ஒருதடவை செய்ய வேண்டும்

அகண்ட பஜனை. Dr. பத்மநாபாவினால் பங்களூருவில் தொடங்கியது. சுவாமி அங்கே செல்வார். ஒரு பையனுக்கு தோலில் வெள்ளை படர்ந்திருந்தது. அவன் பாபாவைத் தனக்கு அறிமுகம் செய்யும்படி பத்மநாபா அவர்களிடம் கேட்டான். அப்படிச் செய்ய முடியாது. நீயே பாபாவிடம் நேரடியாகக் கேள். அவர் வீட்டில் நடக்கும் பஜனைக்கு வருவார். அப்போது கேட்கும்படி சொன்னார். பாபா வரும் போது மழை தொடங்கிவிட்டது. நீண்ட






கடினமான பயணம். சுவாமி களைத் திருப்பாரென அவரை இன்னொரு வீட்டில் களைப்பாறுவதற்காகக் கூட்டிச் சென்றார்கள். சுவாமி அவ்வீட்டுக்குப் போனதும் அப்போதே பஜனை நடக்கும் இடத்திற்குக் கூட்டிச் செல்லச்சொன்னார். அங்கே போனதும் தோல்நோய் பிடித்த பையன் பாடிக் கொண்டிருந்தான். சுவாமி அவன் தலைமீது கையை வைத்தார். தோலிலுள்ள வெள்ளை மாறியது. ஏன் பாபா உடனேயே போகவேண்டும் என்று கேட்டீர்கள். அடுத்த நாளும் போய் ஆசீர்வதித்திருக்கலாமே என்றார்கள். சுவாமி, "எந்த ஒரு பக்தன் இதயத்திலிருந்து அழைத்ததும் போகாமல் இருக்க முடியாது" என்று சொன்னார். பஜனை வீணாகப் போகாது.

மூன்றாவது - பாலவிகாஸ் கல்வி.

உங்களது குழந்தைகளையும் ஏனைய குழந்தைகளையும் இவ் வகுப்புக்குப் போக உற்சாகம் கொடுக்கவேண்டும். இங்கே மனித மேம்பாடுகள் விதைக்கப்படுகின்றன. இப்போதைய பிள்ளைகளுக்கு மனித மேம்பாடுகளைப் பற்றிக் கட்டாயம் சொல்லியும் காட்டியும் கொடுக்கவேண்டும். உதாரணமாக ஒரு கதை:

ஒரு பணக்காரன் இருந்தான். அவனுக்கு ஒரே ஒரு மகன். தகப்பனார் நோய்வாய்ப்பட்டு படுக்கையிலே படுத்தார். மகன் இவர் அரியண்டம் என்று நினைத்து வளவில் ஒரு மூலையில் சிறு குடிசை அமைத்து அங்கேயே ஒதுக்கிவிட்டான். உணவைக்கூட சரியாகக் கொடுக்காமல் ஒரு மண்சட்டியில் கஞ்சியைக் கொண்டுபோய் ஊற்றி விடுவான். ஆனால் அந்தக் குடிசைக்குப் போகும்போது தனது மகனையும் கூட்டிச் செல்வான். பெரியவர் ஒருநாள் இறந்துவிட்டார். மகன் மகிழ்ச்சியுடன் குடிசையை அழித்து மண்சட்டியை உடைக்கப்போனான். அப்பொழுது சின்னப்பிள்ளை "அப்பா, அப்பா அந்தச் சட்டியை உடைக்க வேண்டாம்." என்றது. தகப்பனார் "இது என்ன ஆசை. நான் உனக்குப் பொன்னில் செய்த சட்டி வாங்கித்தருவேன். ஏன் இந்த மண்சட்டி? குழந்தை." என்றார். "இல்லை அப்பா நீங்கள் வயதானதும் இந்தச் சட்டியில்தான் உங்களுக்கு கஞ்சிதர வேண்டுமல்லவா?" என்று பிள்ளை சொன்னது. நாங்கள் செய்வதையே குழந்தைகள் உன்னிப்பாகக் கவனித்து உள்வாங்கி விடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலாவது

சேவை : நிலைய சேவைச் செயற்பாடுகளில் பங்கு பற்ற வேண்டும். (மேலும் சொல்ல நேரமில்லை)

ஐந்தாவது

நகர சங்கீர்த்தனம் :

மாதத்தில் ஒரு முறையாவது பங்கு பற்ற வேண்டும். இதுவும் ஒரு மகத்தான சேவை. ஒரு பக்தன் கிரமமாக இதில் பங்குபற்றுபவர். ஒருநாள் வேறு ஒருவரும் வரவில்லை. இவருக்குப் பாடவும் முடியாது. ஒரு ரான்சிஸ்ரர் கருவியில் பாட்டைப் போட்டு சத்தத்துடன் சுற்றி வந்தார். இவர் சாதனத்தின் மூலமே செய்தபடியால் அதற்குப் பலனுண்டா என்று சுவாமியிடம் கேட்டபொழுது அந்த நல்லெண்ணத் திற்காகப் பலனுண்டு என்று சொன்னார். இவர்கள் 36 பேர் சேர்ந்து கேதாரநாத்திற்கு யாத்திரை சென்றார்கள். கோயிலைச் சென்றடைய முன்பு நிலநடுக்கம் நிகழ்ந்தது. மழை, மண்சரிவு, உணவின்மை, களைப்பு இவற்றினால் 48 மணிநேரம் சஞ்சலப்பட்டார்கள். நில நடுக்கத்தின்போது நின்ற இடமே பிளந்து கீழே போகும். நகர சங்கீர்த்தனத்தில் ஆர்வமாகப் பங்கு பற்றியவர் சடுதியாகப் புதையலில் அகப்பட்டார். புதையும் போது சாயிராம் சாயிராம் என்று சொல்லிக் கொண்டே "நீங்கள் என்னைக் காக்க வரவேண்டாம். நீங்களும் புதைந்துவிடுவீர்கள். நான் சுவாமியிடம் போய்விடுவேன். தப்பின அனைவரும் பாதுகாப்பாக ஊருக்குப் போகச் சொல்லுங்கள்" என்று சொல்லிக் கொண்டே புதைந்துபோனார். என்ன தயாள மனப்பாங்கு. மரணபயமே இருக்கவில்லை. இவர்களில் 17 பேர் தான் வீடு திரும்பினார்கள்.

ஆறாவது

சாயி இலக்கியம் வாசித்தல் :

இலக்கியம் ஆயிரக்கணக்கில் உள்ளது. ஒரு பந்தியாவது வாசித்து உள்வாங்கவேண்டும்.

ஏழாவது

இனிமையான பேச்சு : (நேரம் போதவில்லை)

எட்டாவது

குறைகூறாமல் வாழத்தெரிந்துகொள். முக்கியமாக ஒருவர் இல்லாதபோது அவரைப் பற்றிக் குறைகள் கூறப்படாது. எமெர்சன் (Emerson) என்ற புகழ்பெற்ற எழுத்தாளர் இருந்தார். ஒருநாள் நண்பன் ஓடிவந்த உம்மைப்பற்றி இன்னொரு நண்பன் தாறுமாறாகப் பேசுகிறான் என்று சொல்ல, அவர் பேசியது உண்மையா - இல்லை அவர் பேசியதைச் சொல்வதால் யாருக்காவது நன்மையா - இல்லை அப்படியாகில் எனக்குச் சொல்ல வேண்டாம்" என்று கூறினார்.


ஒன்பதாவது

ஆசைக்கு வரம்பு வைத்தல் அல்லது சக்தியை வீண் விரயம் செய்யாதிருத்தல்.

இதனால்வரும் சேமிப்பை சேவையில் செலவழி. எதுவாயினும் பிறரைச் சந்தோசப்படுத்த முயன்றால் நாமும் சந்தோசமாக வாழ்வோம்.

இதற்கு ஒரு நிகழ்வு:

புற்றுநோயால் துன்பப்படுபவர்களை பராமரிக்க வசதி



யில்லாதவர்கள். கொஸ்பிஸ் "Hospice" என்ற நிலையத்தில் பராமரிப்பார்கள். இவர்கள் மரணவாயிலை நெருங்கிக் கொண்டிருப் பவர்கள். இருவர் ஒரே அறையில் பராமரிக்கப் பட்டார்கள். இருவரும் நண்பரா கினார்கள். ஒருவர் ஒவ்வொருநாளும் மற்ற வருக்குத் தான் யன்னல் வழியே காணும் காட்சியை மிகவும் ரசனையுடன் சொல்லி வந்தவர். கேட்ட வருக்கும் வேதனை குறைந்த ஆனந்த மாயிருந்தார். ஒருநாள் கதை சொன்னவர் இறந்து விட்டார். மற்றவர் இதை அறிந்து அந்த நண்பன் இருந்த கட்டிலுக்கு மாற்றும் படி தாதியிடம் சொன்னார். ஏன் என்று கேட்க நண்பன் யன்னல் வழியே பார்த்த காட்சிகளை நானும் பார்க்க ஆசைப் படுகிறேன். அப்போது தாதியார், "அந்தச் சுவரில் யன்னலில்லை. நண்பனுக்கு கண் பார்வையுமில்லை. எல்லாம் கற்பனையில் சொல்லியுள்ளார்" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை நிலையைச் சொன்னார். அப்போது தான் நண்பன் வலியை மறந்து மற்றவனின் வலியைக் கதை மூலம் குறைத்தாரென்று நன்றியுணர்வுடன் பிரார்த்தித்தார். சாகும் போதும் மற்றவரின் வேதனையைக் குறைக்க வேண்டும். இதுதான் கற்ற பாடம்.

இன்னொரு பக்தை 20 வருடமாக புட்டபர்த்தியில் வசிக்கிறார். அவர் ஸ்லோவேனியா (Slovenia) நாட்டைச் சேர்ந்தவர். 20 வருடங்களுக்கு முன்பு விபத்தில் சிக்கி மூளையின் செயல் குறைந்து எல்லா வற்றையும் மறந்திருந்தார். நண்பர்கள் சுவாமியிடம் கொண்டுவந்தார்கள். சுவாமி "வேதம் கற்றுக்கொள்" என்று சொன்னார். அவர் ஊனு பெட்டி மூலம் பலநாள்கள் கேட்டுப் பாடமாக்கிக் கொண்டார். பின்பு சந்திக்கும் பிள்ளைகளுக்கெல்லாம் வேதம் கற்றுக் கொடுத்தார்.

"வேதம் சொல்லிக்கொடுக்கவே நான் வாழ்கிறேன்" என்று சொல்லி அயல் கிராமங்களுக்குப் போய் பிள்ளைகளுக்கு வேதம் சொல்லிக் கொடுப்பார்.

"பிறருக்கு சேவை செய்வதே உன்னத வாழ்க்கை என்று சொல்லி சுவாமி சொல்லியுள்ளார். இந்த சாயி வேதத்தை கற்று விளங்கிப் பின்பற்றவேண்டும்.

சுவஸ்திப் பிரஜா பியவ் பரிபாலயந் தா:
ஞாயேன மார்கேன மஹிம் மஹிஷா:
கோ ப்ராம்மனிபியஸ் சுபமஸ்து நித்யம்
சமஸ்த லோகா: சுகினோ பவந்து
சமஸ்த லோகா: சுகினோ பவந்து
சமஸ்த லோகா: சுகினோ பவந்து

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
ஜெய் சாயிராம்



உலகம் சீர்திருந்தி குறையற்றதன் பின்பே தான் உழைத்து இன்பம் காண முடியும் என்று கூறும் மனிதன் ஆற்றோரம் அமர்ந்து, ஆற்று நீர் கடலில் சேர்ந்த பின்புதான் தன்னால் கடக்க முடியும் என்று கூறும் மனிதனைப் போல்தான் வெற்றி காண்பது இயலாது.
- சுவாமி விவேகானந்தர்.

# தேசிய சேவைத் திட்டம்




சத்திய சாயி பாடசாலை -மானிப்பாய் - யாழ்ப்பாணம்

கல்வி சேவைத்திட்டத்தை நோக்காக கொண்டு இலங்கையின் முதலாவது சத்திய சாயி பாடசாலை யாழ்ப்பாணத்தில் மானிப்பாயில் சுவாமியின் ஆசியுடன் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆண்டு 1 தொடக்கம் 11 வரை வகுப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. 180 பிள்ளைகள் கல்வி பயில்கின்றார்கள்.
இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: +94 21 225 5086
E mail - info@ssiosrilanka.org
saischool@ssiosrilanka.org
Web: www.ssiosrilanka.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.05.2018



## ஸ்ரீ .அரவிந்த் பாலசுப்பிரமண்யம்

றேடியோ சாயியில் பணிபுரிகிறார்

ஓம் ஸ்ரீ சாயிராம்!

இப் புதிதான அனுபவத்தை எனக்கு அளித்த சுவாமிக்கு எனது மனமுவந்த நன்றிகள்

சுவாமி சொன்ன ஒரு கதையுடன் ஆரம்பிப்போம். ஒருவனுக்கு நான்கு மனைவிகள். நான்குபெயருடன் வாழ்வதென்றால் மிகவும் கஷ்டம். இம் மனிதன் சுவர்க்க லோகத்திற்குச் சென்றான். அங்கு காவலில் தேவதை, ஏன் சுவர்க்க லோகத்திற்கு வரவிரும்புகிறாய்? என்று கேட்டது. மனிதன் தான் ஒருமுறை விவாகம் செய்து அனுபவித்து விட்டேன். ஆகவே சுவர்க்கத்தைத் தேடி வந்தேன் என்றான். பின்பு ஒரு தரம் போனபோது தேவதை ஏன் இங்கு வருகிறாய் என்று கேட்டது? நீ இருமறை விவாகம் செய்தும் ஒன்றும் படிக்கவில்லை. ஆகவே நீ நரகத்திற்குத்தான் போக வேண்டும் என்று தேவதை சொன்னது.

இன்னுமொரு கதை

ஒருவனுக்கு நான்கு மனைவிகள். அவர் (USA) வெளிநாட்டுக்கு செல்ல வேண்டி வந்தது. அப்போது எல்லா மனைவியரிடமும் என்ன கொண்டு வரவேண்டுமெனக் கேட்டார்.

முதலாவது மனைவி : "தனது தலைவலிக்கு அமெரிக்காவில் நல்ல மருந்துகள் இருக்கும் வாங்கிவரவும்" என்றாள்.

இரண்டாவது மனைவி : "அங்கே பவுண் நகைகள் மலிவாக இருக்கும். போதியளவு வாங்கிவரவும்" என்றாள்.

மூன்றாவது மனைவி : அறிவுத் தாகம் கொண்டாள். அங்கே ஒவ்வொரு துறையிலும் நல்ல புத்தகங்கள் வாங்கி வரவும் என்றாள்.

நான்காவது மனைவி : நீங்கள் சுகத்தோடு திரும்பி வந்தால் போதும் என்றாள்.

இம் மனிதன் திரும்பிவந்து நான்காவது மனைவியின் வீட்டிலே தங்கினார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ஆசையிருக்கும்.


இதே போல சுவாமியின் பக்தர்கள் நான்கு வகை யானவர்கள். அவையாவன :

1. ஆர்த்தாஸ் - உடல் ரீதியான மனரீதியான ஆசையை நிரப்புதவற்காக ஆண்டவரிடம் செல்பவர்கள்.
2. ஆர்த்தார்த்தி வெற்றி காண்பதில் ஆசை. பொருள்கள் முதலியவற்றை வேண்டுபவர்கள்.
3. ஜிஜ்னாசு படைப்பைப் பற்றி அறிய ஆர்வமுடை யவர்கள்.
4. ஞானி கடவுளுக்காக கடவுளை வேண்டுபவர்கள்.

இக் கலியுகத்தில் ஒருவருக்கும் கடவுளை வேண்ட விருப்பமில்லை. கூகிள் (Google) பார்க்க ஆசைப்படுவார்கள். கடவுளைப் பார்க்க விரும்பமாட்டார்கள். சுவாமி கருணையானவர். அவர் 4 வித பக்தர்களுக்கும் கிருபை கொடுப்பவர்.

சுவாமியின் அளப்பெரும் அன்பைப் பற்றி நான் அறிந்ததைச் சொல்கிறேன். சுவாமியின் அன்பைப் பற்றிச் சொல்வதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி.

தியாகராஜன் என்றொருவர் இருந்தார். மகான் தியாகராஜர் அல்ல. சுவாமி தனது அன்பினால் இவரை மகான் தியாக ராஜராக மாற்றினார். இம் மனிதனுக்கு புற்று நோய் பீடித்து விட்டது. இவருக்கு சில மாதங்களே வாழமுடியும். இவருக்கு 4 பிள்ளைகள். மனைவியோ இறந்துவிட்டார். யார் பிள்ளைகளைப் பார்ப்பார்கள் என்று ஒரே கவலை. கடைசிப் பிள்ளைக்கு 4 வயது தான். மூத்த மகள் வைத்தியராகி விட்டாள். அவளுக்குத் தந்தையின் வியாதியைப் பற்றி நன்கு தெரியும். இதனால் அவள் எப்போதும் உற்சாகமின்றி சோர்ந்து போயிருந்தாள். அவளின் சக மாணவியாயிருந்தவள் ஒருத்தி சுவாமியைப் பற்றிச் சொல்லி பிருந்தா வனுக்குப் போய் சுவாமியை பார்க்கச் சொன்னாள். இருவரும் பிருந்தாவனத்தில் சுவாமியின் தரிசனம் பெற்றார்கள். தரிசனத் திற்குப் பின்பு மூத்தமகள் ஆனந்தமாக






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தாள். வீட்டில் தகப்பனாரையும் பிருந்தாவனம் செல்லுமாறு வற்புறுத்தினாள். தியாகராஜன் தான் எத்தனையோ தெய்வங் களைக் கும்பிட்டும் பயன் கிடைக்கவில்லை. புதிதாக இன்னொரு சுவாமியைக் கும்பிட்டு என்ன பயன் என்று சொல்லிப் போகவில்லை. கலியுகவரதன் விடமாட்டார். நீருக்குப் பலவித பெயர்களைச் சொல்லி அழைப்பார்கள். கடவுள் ஒன்றே. அவரைப் பல நாமங்களிலும் உருவங்களிலும் வழிபட்டாலும் ஒரு கடவுளையே சென்றடையும். நாம் நமது முயற்சியாலும் விருப்பத்தாலுமே இங்கு வந்துள்ளோம் என்று நினைப்போம். இது தவறு. சுவாமியின் கிருபையில்லாவிட்டால் இங்கு வரவும் முடியாது, தரிசனமும் கிடையாது. தியாகராஜனுக்கு என்ன நடந்ததென்று பார்ப்போம். தியாகராஜனின் கம்பனி பெரியார் தொலைபேசியில் தியாகராஜனைக் கூப்பிட்டு கம்பனிக்குத் தேவையான ஒரு முக்கியஸ்தர் வந்துள்ளார். அவர் சாயிபாபாவைக் காண வேண்டுமென்று விரும்புகிறார். நீ அவருக்கு வேண்டியதைச் செய்து சாயி பாபாவிடம் அழைத்துச் செல் என்று வேண்டுதல் விடுத்தார். தியாகராஜன் வைத்திய லீவில் நின்றாலும் சம்பளம் கொடுபட்டது. ஆகவே அவர் தான் எப்படியும் செய்ய உத்தேசித்து முக்கியஸ்தரை பிருந்தாவனம் கூட்டிச் சென்றார். அவருக்கு இப்போது புதிய உற்சாகம் பிறந்துள்ளது. இருவரும் பிருந்தாவனத்தை அடைந்த பொழுது சுவாமி தரிசனம் முடித்து தனது அறைக்குள் போய்விட்டார். தங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்று துக்கப்பட்டு ஒரு மரத்தின்கீழ் கொஞ்சநேரம் இருப்பதற்காகச் சென்றார்கள். 20 நிமிடத்திற்குப் பின்பு எல்லோரும் அங்கும் இங்கும் ஓடினார்கள். சுவாமி அறையைவிட்டு வெளியே வந்தார். சுவாமி இவ்விருவரை நோக்கி வந்து "தியாகராஜா எழும்பு" என்று பெயர் சொல்லிக் கூப்பிட்டார். அவரோ பக்தனில்லை. ஆனால் எக் கடவுளைக் கும்பிட்டாலும் சுவாமி அதை ஏற்றுக் கொள்ளுவார். "தியாகராஜா நீ இறக்கமாட்டாய். இதை நம்பு" என்று சொன்னார். தியாகராஜன் 25 வருடங்கள் வரை வாழ்ந்தார். ஆறு மாதம்தான் வாழ்வார் என்று சொன்ன வைத்தியரோ 10 வருடத்தில் இறந்து விட்டார். இந்தத் தியாகராஜன் பிருந்தாவன வார்டன் (Warden) ரவிகுமார் அவரின் தந்தையாவார். முழுக் குடும்பமும் பக்தர்களாக மாறி புட்டபர்த்தியிலேயே தங்கி சீவித்தார்கள். அவர்கள் அநேகரைச் சுவாமியிடம் போக உற்சாகமும் உந்துதலும் கொடுத்தார்கள். இவர்களுள் நானும் ஒருவன். 2007 அல்லது 2008ஆம் ஆண்டு தியாகராஜன் யஜுர் மந்திரை நோக்கிச் சென்று வாசலிலே அஷ்டாங்க நமஸ்காரம் செய்து தனது உயிரை நீத்தார். முதலில் சுவாமி நாம் விரும்புவதைத் தந்து காலப்போக்கில் தான் தரவந்ததை விரும்பிக் கேட்பீர்கள் என்று சுவாமி சொல்லியுள்ளார். தியாகராஜன் தனது நோயைத் தீர்க்க வேண்டி சுவாமியிடம் வந்தார். அவர் ஆர்த்தி என்ற பக்தர் பிரிவைச் சேர்ந்தவர்.




இனி அர்த்தார்த்திப் பிரிவு பக்தனைப் பார்ப்போம். அவர் எனது மாமனார். தந்தையின் மூத்த தமையனாவார். நாம் எல்லோரும் அவரின் மூலமாகவே சுவாமியிடம் வந்தோம். அவர் டாற்றா (Tata oil co) கம்பனியில் வேலை செய்தார். அவரைச் சடுதியாக கல்கத்தாவிற்கு வேலை மாற்றம் செய்தார்கள். அவருக்கோ பங்களூரை விட்டுப் போக மனமில்லை. எல்லோரிடமும் இவ் வேலை மாற்றத்தை நிறுத்தும்படி விண்ணப்பித்தும் வாய்க்கவில்லை. அவர் மிகவும் துக்கத்திலிருந்தார். ஒரு மாதத்தில் போயே ஆக வேண்டியிருந்தது. இரவு கனவிலே ஹரிதாஸ் ஒருவர் மாட்டுடன் ஆடிப்பாடி வந்தார். ஹரிதாஸ் என்பவர்கள் நாராயணனை ஆடிப்பாடி தொழுபவர்கள். கிராமங்கள் எல்லாம் செல்வார்கள். மக்கள் கொடுக்கும் உணவு, உடைகளை ஏற்றுக்கொள்வார்கள். கனவிலே ஹரிதாஸ் "எதைப் பற்றியும் கவலைப்படவேண்டாம்" என்று சொன்னார். இதன் பின்பு அவரது மனதில் பெரிய அமைதி நிலவியது. இக் கனவு கண்டு ஒரு கிழமைக்குப் பின்பு மோட்டசைக்கிளில் போகும்பொழுது ஹரிதாஸ் ஒருவர் பிரசங்கம் செய்வதைக் கேட்டு அவ்விடத்திற்குச் சென்றார். என்ன அதிசயம், கனவில் வந்தவரே அங்கே பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். யார் என்று கேட்ட பொழுது மக்கள் அவர்தான் சத்தியசாயிபாபா என்று சொல்லி அவரைப் புட்டபர்த்தியில் போய்ப் பார்க்கலாம் என்றும் சொன்னார்கள். சுவாமியின் சங்கல்ப்பமின்றி அவரைக் கனவிலும் காணமுடியாது. நான் எத்தனையோ தடவைகள் அவரையே நினைத்து நித்திரைக்குப் போயுள்ளேன். கனவில் வரவில்லை. எதிர்பாராதபோது கனவில் தோன்றுவார். பிரசாந்தி நிலையத்திற்குக்கூட அவரது சங்கல்ப்பமின்றி ஒருவரும் வரமுடியாது. மாமனாருக்கு அவரின் கிருபை கிடைத்தது. மாமனார் நான் புட்டபர்த்திக்குச் செல்வேன். எனது வேலை மாற்றத்தை நிற்பாட்டட்டும் என்ற வேண்டு கோளுடன் சென்றார்.

சுவாமி சொன்ன கதை :

ஒரு மனைவி கணவனை எழுப்பி "விருந்தினர்கள் வரப்போகிறார்கள். கெதியாக காப்பித்தூள் வாங்கி வாருங்கள்" என்று சொன்னாள். கணவனும் வெளியே போய் எங்கும் பார்த்தால் கடைகள் மூடிக்கிடந்தன. அன்று வேலை நிறுத்த நாள். எங்கும் தேடி களைத்துப்போய் நடந்து சென்ற பொழுது தலை மரக்கொப்பில் அடிபட்டது. அங்கே ஒரு குரல் கேட்டது. எனது அருமைக் குழந்தாய், "நான் கல்பவிருட்ஷம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன வேண்டும். நான் தருவேன்" என்றது அக்குரல். எனக்கு "3 பக்கற் காப்பித்தூள்தான் வேண்டும்" என்று கேட்டார். "மக்கள் கல்பவிருட்ஷமான என்னிடம் வந்து அற்ப விடயங்களைத்தான் கேட்கிறார்கள். நானோ எதையும் கொடுக்க வல்லவன்." என்று சுவாமி சொல்லியுள்ளார். எனது மாமனாரும் வேலை மாற்றத்தையே கேட்டுக் கொண்டு புட்டபர்த்தி சென்றார். அக்காலத்தில் பிரயாணம் இலேசானதல்ல. மாமனாரையும் தகப்பனாரையும் சுவாமி நேர்காணலுக்கு அழைத்தார். மாமனார் சுவாமியை நேரில் கண்டதும் பெரிய மாற்றத்துக்குள்ளானார். "நீ கல்கத்தா போகமாட்டாய். வேறு ஏதாவது கேள்" என்றார் சுவாமி. மாமனாருக்கு என்ன கேட்கவேண்டும் என்று தெரியவில்லை.

கடவுள் இப்படிக் கேட்டால் "நீங்கள் விரும்பியதைத் தாருங்கள்" என்றுதான் கேட்கவேண்டும். எனக்குப் பத்து வயதிலே தரிசனம் கிடைத்தது. சுவாமியைப் படம் பிடிக்கவேண்டுமென்ற ஆசையிருந்தது. தகப்பனாரிடம் கமரா வாங்கித் தரச்சொல்லிக் கேட்டேன். அடுத்த பிறந்த நாளுக்கு நல்ல கமரா வாங்கித் தந்தார். இரண்டு வருடங்களுக்குப் பின் தரம் கூடிய இன்னொரு கமரா வாங்க ஆசைப்பட்டு கடையில் போய் நல்லதொன்றைத் தெரிவு செய்து வைத்தேன். தகப்பனாரோ இன்னும் தரம்கூடிய கமராவை வாங்கித் தந்தார். இதே போல நாமும் சுவாமியிடம் தெரியாத்தனத்தில் தரம் குறைந்ததைக் கேட்டாலும் சுவாமி நல்ல தரமானதை தகுந்த நேரத்தில் தருவார். "எனக்குத் தேவையானதை நீங்களே தரவும்" என்றே சுவாமியிடம் கேட்கவேண்டும். சுவாமி 1000 தாய் தந்தையருக்கும் மேலானவர். எனது மாமனாரும் சுவாமியிடம் வேறு ஒன்றும் கேட்கவில்லை. நாங்கள் எல்லோரும் விலைமதிப்பில்லாத பெரிய பொக்கிஷத்தை அடைந்தோம். மாமனார் பங்களூரை விட்டுப் போகவில்லை. 2008ஆம் ஆண்டு உயிர் நீத்தார். கடவுள் தனது வாக்கை எப்போதும் நிறைவேற்றுவார்.

மூன்றாவது பிரிவு பக்தர்கள் ஜிஜ்னாசு :
எனது பெற்றோர் தியாகராஜ சுவாமிகளின் சமாதியைத் தரிசிக்கச் சென்றார்கள். அங்கே அதற்குப் பக்கத்தில் நாகரத்தினம் என்பவரின் சமாதியும் இருந்தது. நாகரத்தின அம்மையார் தியாகராஜ சுவாமிகளைக் கடவுளாகவே வழிபட்டார். அவர்தான் சமாதிக்கு நிலத்தையும் கொடுத்து சமாதியையும் கட்டுவித்தார். அவரிடம் தியாகராஜர் கனவில்தோன்றி "நீ ஏன் என்பின்னால் ஓடுகிறாய்? எனது கடவுளான இராமா அவதரித்துள்ளார். அவரின்பின்னால் ஓடு" என்று சொல்ல "அந்த ராமா எங்கே?" என்று கேட்க "வெங்கடகிரி இராஜாவீட்டில்" என்று சொல்லி மறைந்தார். வெங்கடகிரி இராஜா 1940 50 இலே பகவானை இராம அவதார் என்று உணர்ந்துகொண்டார். சுவாமியும் அவரின் அரண்மனைக்குப் பல தடவைகள் சென்றுள்ளார். சுவாமி வருகிறார் என்றதும் முன்வாசலில் வெறுங்காலுடன் வந்து வரவேற்று சுவாமி நடந்துபோன பாதையில் பிரதட்டை போடுவார். சுவாமி குளிக்கப்போனதும் வேத பண்டிதர்களைக்கூப்பிட்டு வேதம் ஓதச் சொல்வார். சுவாமி குளிப்பதை கடவுளுக்கு அபிசேகம் என்றே உணர்ந்து கொண்டார். நாகரத்தினம் அம்மா ராஜாவுடன் தொலைபேசியில் "எனது குரு, ராமர் உவ்விடம் வந்துள்ளார் என்று சொன்னார். உண்மை தானா?" என்று சொன்னார். அந்த அம்மை யாரின் குரு சுவாமியைக் காண்பித்தார். சுவாமியும் அம்மையாரைத் தன்னிடம் அழைத்துள்ளார்.

நாங்கள் செய்வதெல்லாம் எமது ஆனந்தத்திற்கேயாகும். சிறு விசாரணை, ஏன்? ஏன்? என்று கேட்டால் இந்த உண்மை வெளிப்படும்.
உ-ம் :
நான் உணவு சாப்பிடவேண்டும். - ஏன்?
எனக்குப் பசியாய் இருக்கிறது. - ஏன்?
நான் சாப்பிடத்தான் வேண்டும். - ஏன்?
இல்லாவிடில் எனக்கு வேதனை. - ஏன்?
சாப்பிடாவிட்டால் துன்பம். - ஏன்?
சாப்பிட்டால் மகிழ்ச்சியாயிருப்பேன்.

இதேமாதிரி
மாணவன் ஒருவன்படிக்க வேண்டும். ஏன்?
நல்ல புள்ளி எடுக்கவேண்டும். - ஏன்?
நல்ல வேலை கிடைக்கும். ஏன்?
தேவையான பொருள்களை வாங்க. ஏன்?
சந்தோசமாயிருக்க.

எதைச் செய்தாலும் நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கேயாகும். எமக்கு தற்காலிக மான அல்லது நிரந்தரமான மகிழ்ச்சியா வேண்டும்? எல்லோரும் நிரந்தரமானதையே வேண்டுவோம். நாம் இதற்காகச் சரியான வழியில் செல்லத் தெரியாமல் சஞ்சலப் படுகிறோம்.

சுவாமி ஒரு கதை கூறுவார் :
ஆந்திராவில் ஒரு பட்டாளத்து உணவகம் இயங்கியது. அங்கே சைவச் சாப்பாடு கிடையாது. பிராமணன் ஒருவர் அங்கே போய் இட்டலி தோசை கேட்டார். தொழிலாளி "ஏன் ஐயா வெளியில் தொங்கும் பலகையைப் பார்க்கவில்லையா. இங்கே மரக்கறி உணவு கிடையாது" என்று சொன்னான். சுவாமி புன்னகையுடன் நம்மில் அநேகர் பிழையான இடத்தில் போய்க் கேட்கிறோம் என்று சொன்னார். சுவாமியிடம் ஆனந்தத்தைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கலாம். பொருள்களைக் கேட்க வேண்டாம். இப்படியாகக் கேட்பதற்கு நாம் சுவாமியின் அருகே செல்லவேண்டும். உதாரணமாக கைத்தொலைபேசி தேவை யென்றால் தந்தையிடம் நேரடியாகத் தானே கேட்போம். சுவாமியைப் புகழத் தேவை யில்லை. நேரடியாக கேட்க வேண்டும். ஆனால் அருகாமையில் இருக்காவிட்டால் இப்படிக் கேட்கவராது. தந்தையுடன் அருகா மையில் இருந்து பழகுவதால் தான் அவரிடம் நேரடியாகக் கேட்க முடிகிறது. தந்தையுடன் எப்படி நெருங்கிப் பழகிறோமோ, சுவாமி யுடனும் நெருங்கிப் பழகவேண்டும். இதற்கு நாம் நேரமில்லை என்று சொல்லித் தப்பிப்போம். சுவாமியோ சிரித்துவிட்டு "இன்று காலை உணவு எடுத்தாயா?இன்று குளித் தாயா? இது எல்லாவற்றிற்கும் நேரமுண்டு. என்னை வணங்கத்தான் நேரமில்லை. கடவுளி ற்கு முன்னுரிமை கொடுக்காததால்தான் நேரம் போதாமல் இருக்கிறது." ஆனால் ஏதேனும் பாரிய விபத்திலகப்பட்டால் சாய்ராமா என்று கத்துவோம். பின்பு வருகிறேன் என்று சொல்லமாட்டார். அவர் உடனேயே பிரசன்னமாகிவிடுவார். இதை நாம்அவரிடம் எதிர்பார்க்கின்றோம். சுவாமி எங்களில் எப்போதும் அன்பாகவே இருக் கிறார். திரௌபதை துயிலுரியப்பட்ட பொழுது இருதயவாசி கிருஷ்ணா என்று அழைத்தார். திரௌபதை முன்னொருநாள் கிருஷ்ணரின் விரலில் காயம் ஏற்பட்டபொழுது தனது சீலையின் நுனியைக் கிழித்து காயத்திற்கு கட்டுப்போட்டார். ஆனால் இப்பொழுது எத்தனையோ மடங்கு கூடிய சீலையைக் கிருஷ்ணபகவான் அளித்தார். கடவுள் எங்களுக்கு எவ்வளவோ மடங்கு அதிக மாகவே தருவார். நாங்கள் ஒரு அடி எடுத்து வைத்தால் அவர் 100 அடிகள் எடுப்பார். நாம் ஒரு அடியேனும் எடுக்காவிட்டால் அவரும் ஒரு அடியும் எடுக்கமாட்டார். எங்களுக்குக் கிடைத்த மாபெரும் பொக்கிஷம் சுவாமியேயாகும். சுவாமியிடம் பிரார்த்திக்க வேண்டியது:




சுவாமி மேல் அன்பையே வைக்க அருளவும், சுவாமியின் அருளுரைகளை வாசித்து கலந்தாலோசிக்க அருள்புரியவும், கடவுளுடன் கதைக்கவும். அவருடன் நேரத்தைப் போக்காட்டவும், அவரிடம் ஆனந்தத்தையே கேட்க வேண்டும்.

ஒருமுறை தரிசனத்தின்போது சுவாமியின் பாதத்தில் இலையான் ஒன்று பறந்து வந்திருந்தது. அதற்குப் பாதத்தின் மகிமையோ பெறுமதியோ தெரியாது. அடுத்தகணம் புறாவின் எச்சத்தின்மேல் அமர்ந்தது. எங்களது மனமும் அப்படித்தான். நாங்கள் பிரசாந்தி நிலையத்தில் இருக்கும் போது அந்த இலையான் மாதிரி செயற்படக்கூடாது. பிரசாந்தி நிலையத் திற்கு வந்துவிட்டோம். பாதத்தைத் தரிசித்தோம். பின்பு என்ன செய்ய வேண்டும்? சுவாமியிடம் பிரார்த்தித்து அவரது திருப்பாதங்களை எமது இதயத்தில் பதிக்கவேண்டும். அது ஒருவராலும் எடுக்கமுடியாத மாபெரும் பொக்கிஷம். நான் இறைவன் மீது நம்பிக்கை வைத்தால் எனது பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிடுமா? ஆம். ஆனால் எமக்கு விரும்பிய வாறல்ல. நாம் எதிர்பார்த்தவாறல்ல. அவர் எங்களுக்கு நன்மை பயப்பதை எங்களுக்குத் தேவையான தைத்தான் தருவார்.

உதாரணமாக எனது தசைகளைப் பெருப்பிக்க வேண்டுமாயின் அதற்கு பாரம் தூக்கி அப்பியாசம் கொடுக்க வேண்டும். அப்பியாசம் செய்யும்போது ஓரளவு வலிக்கும். ஆனால் பின்பு தசை வலுவடைந்துவிடும். இதைப்போலவே ஆண்டவனும் எங்களுக்கு சிறு துன்பத்தைத் தந்து எங்களை வலுப்படுத்துவார்.

இன்னுமொரு உதாரணம் : எனது 2 வயது மகளுக்குத் தடுப்பூசி போட வேண்டியிருந்தது. 3-4 மாதத்தில் போடும் போது ஒரு சின்ன அழுகை,அவ்வளவுதான். இப்போது 2 வயதில் வைத்தியருடைய அறைக்குள் நுழைய முன்பே அழத் தொடங்குவாள். என்னைக் கட்டிப்பிடிப்பாள். பெற்றோர் தன்னைக் காப்பாற்றுவரென்ற நம்பிக்கை. ஆனால் ஊசி போட்டு முடிந்தபின்பும் அழுகை தொடரும். திரும்பியும் ஊசி போடவேண்டுமா? அதற்கு என்ன சொல்வதென்று நான் திண்டாடுவேன். ஆனால் குழந்தை வளர்ந்தபின்பு தடுப்பூசியின் நன்மையைத் தெரிந்து மகிழ்ச்சியடையும்.

இதேமாதிரித்தான் நாமும் கடவுளைப் பார்த்து "உன்னை நம்பினேன். ஏன் ஏமாற்றிவிட்டாய்?" என்று கேட்போம். ஆனால் கடவுள் எமது நன்மைக்காக வலியையும் ஏமாற்றத்தையும் தந்துகொண்டேயிருப்பார்.

பெற்றோர் அன்பின்நிமித்தம் தானே பிள்ளையின் நன்மையைக் கருதித்தானே தடுப்பூசி போடச் செய்கிறார்கள். ஆண்டவரோ எம்மீது எவ்வளவு அன்பு வைத்துள்ளார். நாம் ஆன்மீக வளர்ச்சியடையும் போது முழுமையான விளக்கம் தெரியவரும்.

"நடப்பதெல்லாம் எமது நன்மைக்கே.நாம் ஆண்டவனுக்கு நன்றி மிக்கவராய் இருக்கவேண்டும்." இதுதான் பூரண சரணாகதி. இதுவே எமது பிரார்த்தனையாகவும் இருக்க வேண்டும்.

ஜெய் சாயிராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ. அமே தேஷ்பாண்டே, ஸ்ரீ. ரவிகுமார் -

## பஜனை விளக்கம். சத்சங்கம் -

திரு. அமே தேஷ்பாண்டேயும் திரு. ரவிக்குமாரும் இணைந்து பஜனையைப் பற்றி ஆழ்ந்த விளக்கம் தந்தார்கள். இவர்களை திரு. முரளீ (பொதுசன உறவு நிலதாரி) அறிமுகம் செய்தார். அப்போது அவர் கடவுளை அடைய இலேசான வழி சங்கீர்த்தனம் என்றும் சுவாமி சங்கீதப் பிரியன் என்றும் சொன்னார். நாம சங்கீர்த்தனம் பிரேமையின் பிரம்மாஸ்திரம் என்றும் குறிப்பிட்டார்.

சுவாமியின் வழிகாட்டலிலேயே வளர்ந்தவர்கள். எங்கள் முன்னிலையில் வந்து விளக்கம் தருவார்கள். இருவரும் குல்வந் மண்டபத்தில் பஜனை முன்பாடகர்களாக திகழ்பவர்கள்.

மூன்று ஓம்காரத்துடன் ஆரம்பித்தார்கள்.
சாயிபாபா கீத சுதா மதுரம் மதுரம் ஆனந்தம்
ஷீரடிபாபா கீத சுதா மதுரம் மதுரம் ஆனந்தம்
பர்த்திபாபா கீத சுதா மதுரம் மதுரம் ஆனந்தம் என்று பாடி சுவாமியின் ஆசியைப் பெற்றுத் தொடர்ந்தார்கள்.

மதிப்புக்குரிய பெரியோர்களே! சகோதர சகோதரிகளே! கடந்த மூன்று நாள்களாக சிறீ லங்காவினால் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் மிகவும் நன்றாக விருந்தன. பங்குபற்றியவர்களைப் பாராட்டி னார்கள். புட்டபர்த்தியில் ஏப்ரல், மே மாதங்கள் மிகவும் வெப்பமான மாதங்களாகும். சுவாமியின் அன்பு அசௌகரியங்கள் யாவற்றையும் சகித்துக்கொள்ளும் சக்தியைக் கொடுக்கும். பாடலில் சுதா என்ற பதம் துளியைக் குறிக்கிறது. சாதாரண துளியல்ல. அது அமிர்தத்துளி. அது எங்கள் நாவிலும், சுவாமியின் இருதயத்திலும் விழுந்து ஆனந்தத்தைக் கொடுக்கும்.

ஒரு நிகழ்வு : 2005 ஆம் ஆண்டு சுவாமி மாணவர்களுடன் கோடைக்கானல் சென்றிருந்தார். சுவாமி இரவுணவுக்கு முன்பு எங்களை பஜனை பாடச்சொன்னார். நாங்கள் முற்கூட்டியே தெரிந்து வைத்திருந்த ஐந்து பாடல்களைப் பாடினோம். இருபது நிமிடங்கள் போய்விட்டன. இரவு உணவுநேரம் 7.35 மணியும் கடந்து விட்டது. சுவாமி தொடர்ந்து பஜனை பாடச்சொன்னார். எமது கொப்பியில் எழுதிவைத்த பாடல்களில் தெரிந்தெடுத்துப் பாடினோம். நாலு பாடல்கள் முடிந்ததும். அங்கிருந்த பெரியவர்கள் சுவாமியின் உணவுநேரம் கடந்துவிட்டதே என்று எங்களை நிற்பாட்டும்படி சைகை காட்டினார்கள். சுவாமியோ தொடர்ந்து பாடும்படி சொன்னார்கள். குருவி பொருத்திய மணிக்கூடு 8.00 மணி என்று கூவிக்காட்டியது. சுவாமி எல்லோரையும் உணவு உண்ணத் தயாராகும்படி சொன்னார். அவர் "நான் உணவு உட் கொள்ளப் போவதில்லை. எனது இதயம் நிரம்பிவிட்டது." என்று சொல்லித் தனது அறைக்குள் பிரவேசித்தார். சாதாரணமாக நாம் ஒருவரின் இதயத்தைத் தொட வேண்டு மாகில் இரைப்பையை நிரப்ப வேண்டும் என்று சொல்லுவோம். இங்கு கடவுளின் இதயம் நிரம்ப, வயிறும் நிறைந்துவிட்டதென்பதை அனுபவித்தோம். இதுதான் பஜனையின் சக்தி என்பதை அறியவும். சுவாமி கானப்பிரியர். சங்கீதத்தினால் இதயத்தைத் தொடமுடியும். அவர் எவ்வளவு வேலைகள் இருந்தாலும் பஜனையைத் தவறவிடமாட்டார். பஜன் தொடங்கியதும் சுவாமி கதிரையில் அமர்ந்து விடுவார். அவர் பஜனையின்போது ஆனந்தத் துடனும் அமைதியுடனும் இருப்பார். நாமும் இதற்காகவே பஜனையைப் பாடுவோம். நாம் பாடும்போது மனஅழுத்தமோ இறுக்கமோ இருக்கக்கூடாது. எங்களில் சிலர் ஏன் பஜனைக்குப் போகவில்லை என்று கேட்டால் நேரமில்லை என்று சொல்வார்கள். ஆனால் சுவாமியோ எவ்வளவு வேலையிருந்தாலும் பஜனையைத் தவறவிடமாட்டார். நாம் சுவாமிக்கும் மேலாக வேலைப்பளுவுடன் இருக்கிறோமா?

சுவாமி சொல்லியுள்ளார் :
"முதலாவது ஓம்காரம் கேட்டதும் நான் புறப்பட ஆயத்தமாவேன்
இரண்டாவது ஓம்காரத்தின்போது நான் வந்துகொண்டேயிருப்பேன்,
மூன்றாவது ஓம்காரத்தின்போது கதிரையில் அமர்ந்துவிடுவேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஜனையை இனிமையாக்குவது, பாவம், இராகம், தாளம் ஆகிய மூன்றுமாகும். நாமம்தான் இனிமையைக் கொடுக்கின்றது. நாமத்துடன் உருவமும் சேர்ந்தால் இனிமை அதிகரிக்கின்றது. நாமம் மந்திரமாகும். ரூபம் யந்திரமாகும்.

நாம் சுவாமியை பல பவத்துடன் கண்டுகளித்திருக்கின்றோம். ஒவ்வொரு தேகமாற்றம், பவம் எல்லாம் படங்களாகவே இருக்கின்றன. இன்று உருவம் இல்லாவிட்டாலும் நாமத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வோம். இசை என்பது ஒரு மொழி. எல்லோரையும் இசை மகிழ்ச்சியுறச் செய்யும். அது இதய மொழி. அது பிரபஞ்சமொழி.

நாங்கள் மதுரம் மதுரம் மதுரம் என்று மூன்று முறை சொல்லிப் பாடினோம். முதலாவது மதுரம், நாமம் ரூபத்தை மனதில் இருத்துகிறது. இரண்டாவது மதுரம் பாடலை மனதில் வைக்கிறது. மூன்றாவது மதுரம் இசையை வெளிப்படுத்துகின்றது. இசையாகிய மொழி எங்களிலுள்ள உணர்ச் சியை வெளிப்படுத்துகிறது. உதாரணமாக நாம் பாடும் பாட்டில் என்ன உணர்ச்சியுள்ள தென்பதைச் சொல்லவும் :

"தயாகரோ தயாநிதே ஹே பகவான் "

இதில் சோக உணர்ச்சியுள்ளதென் பதை உணர்வோம். கருத்துத் தெரியா விட்டாலும் இசை உணர்ச்சியைத் தெரிய வைக்கும்.

அடுத்த பாடல் :
"ஜெய ஜெகதீச ஹரே! ஜெய கோவிந்த ஹரே!
நித்தியானந்தா பிரஹ்மானந்தா ஜெய கோபால ஹரே!
அருணாசல சிவ ஓ.ம்...."

இதில் அமைதியுடன் ஆனந்த உணர்ச்சி எழுகின்றது.

அடுத்த பாடல் :
"ஆனந்த சாகரா. முரளீதரா, நந்த யசோதா."

இதில் ஆனந்தம் பொங்கும் உணர்ச்சி வெளிப்படுகின்றது.

இந்த இசை, உலகிலுள்ள அனைவரையும் ஒன்று சேர்க்கின்றது. திருப்பதி பகவானைத் தரிசிக்க ஏழு கதவுகள் தாண்ட வேண்டும். சுவாமியைத் தரிசிக்க முதலாவது கதவு பஜனையேயாகும். 90 வீதமானோர் பஜனையினால் ஈர்க்கப்பட்டே சாயி நிலையங்களுக்கு வந்துள்ளார்கள். இரண்டாவது பாலவிகாஸ், மூன்று, நாலாவது, சேவா, மகிளா ஆகியவையாகும். எல்லாவற்றிற்கும் அத்திபாரம் பஜனையேயாகும். ஆகவே பஜனையை முன்னிருந்து பாடுபவர்களில் பெரிய பொறுப்புள்ளது. சாயி பஜனைகள் ஏனைய நிறுவனங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. உதாரணமாக ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்கள் பல பஜனைப் பாடல்களை எடுத்துப் பாடியுள்ளார்.

மேலும் டெல்லியில் பாரஊர்தி ஓட்டுபவர்கள் நாதபிரஹ்ம இறுவெட்டைப் போட்டே ஓட்டுகின்றார்கள். இதிலிருக்கும் பஜனை தங்களுக்கு நித்திரையோ, களைப்போ வராமல் பாதுகாத்துக்கொள்வதாகக் கூறியுள்ளார்கள். இவர்களுக்குச் சத்திய சாயி பாபாவைப் பற்றி தெரியாது. இதுதான் சாயி பஜனையின் சக்தி. சாயி பஜனையின் பரிணாமத்தைப் பார்ப்போம். இதற்கு சாயியின் வாழ்க்கைச் சரிதத்தைப் படிக்கவேண்டும்.

சிறுபிள்ளையாயிருந்தபோது (7,8 வயதுவரை) அயலிலுள்ள சிறுவர்களை இணைத்து "பண்டரி பஜன் குழுவை" உருவாக்கித் தெருக்களில் பஜனை பாடினார். 8 வயதளவில் அயல் கிராமங்களில் "கொலரா (Cholera)" நோய் பரவி அழிவை உண்டாக்கிய போதும், புட்டபர்த்தியைத் தாக்கவில்லை. இதை உணர்ந்த அயல்கிராமத்தவர்கள் பண்டரி பஜனைக் குழுவைத் தங்கள் கிராமங்களிலும் பாடக் கேட்டு பாலசாயியும் ஏற்றுக்கொண்டு பாடினார். இதனால் அந்நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. சுவாமி அவ்வயதில் அழகாகப் பாடி ஆடுவார். பின்பு 14ஆவது வயதில் தனது அவதாரத்தைப் பிரகடனம் செய்து முதற்பாடிய பஜன் "மானச பஜரே குரு சரணம்". 1960 இல் சாயி நிறுவனமே பஜனையினால் வளர்ச்சியடைந்தது. அக்காலத்தில் சுவாமியே பஜனை 2-3 மணித்தியாலங்களுக்குப் பாடுவார். அக்காலத்தில் சுவாமியே ஆற்றங்கரைக்கு வந்து அடியார்களை வரவேற்று அவர்களுக்கு வேண்டியதை ஒழுங்குசெய்து கொடுத்தார். அவர் நாமத்தையே நெடு நேரம் பாடுவார்.

1970 இல் சிவராத்திரியன்று மூவரே இரவு முழுதும் பாடுவார்கள். இவர்கள் தாங்கள் போன பின்பு யார் இரவு முழுதும் இருந்து பாடுவார்களென ஏங்கினார்கள். சுவாமி இவர்களுக்கு, தனது மாணவர்கள் பெருந்தொகையாக வந்து இரவு முழுதும் பாடுவார்களெனத் தெரிவித்தார். இச் செய்தி மிகவும் அற்புதமாகவே இருந்தது. சுவாமி சொன்னது இப்போது சரியாகி விட்டது. இப்போது அநேகருக்கு பாடச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

1980 இல் பஜனை முன்னிருந்து பாடுபவர்களை நேர்காணல் அறையில் வைத்து பரீட்சயம் செய்வார். அதன் பின்பு தான் மண்டபத்தில் பாடவிடுவார். ஒரு சம்பவம்: பக்க



புனித யாத்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்தியம் வாசிப்போர் குறைவு. ஒரு நாள் சுரேந்திர நாத்தைக் (10 ஆம் ஆண்டு மாணவன்) கூப்பிட்டு தபேலா வைக் காட்டி வாசிக்கச் சொன்னார். அவருக்கு அதன் பெயரே தெரியாது. சுவாமி, உனக்குக் கை தட்டத் தெரியும் தானே. அதே போல இதையும் தட்டு என்றார். சுரேந்திரநாத் அவர்கள் பின்பு விற்பன்னராகிப் பலருக்கு தபேலா வாசிக்கக் கற்றுக்கொடுத்தார். இதே மாதிரி இன்னொரு ஆசிரியருக்கு ஹார்மோனியம் வாசிக்கும்படி கட்டளையிட அவரும் பிற்காலத்தில் விற்பன்னராகினார்.

பஜனை பாடுவோர் ஒத்தாசையின்போது சுவாமி முன்னிலையில் பாடிப் பின்பு மண்டபத்திலும் சுவாமி முன்னிலையில் பாடும்போது பக்தர்கள் கடவுளைக் கிட்டு வார்கள். பாடும் மாணவர்கள் விடுமுறைக் காலத்தில் தங்கள் வீடுகளுக்குப் போகும்போது அங்கேயுள்ள பாடகர்களிடம் (பெயர்சொல்லி) போய்ப் பழகச் சொல்வார். பரிணாம வளர்ச்சியில் இப்போது எங்களையே பஜனையை ஆக்கச் சொல்லுகிறார். எத்தனையோ பாடல்கள் சுவாமியின் மாணவர்களால் உண்டாக்கப்பட்டுள்ளது. சுவாமி எங்களைச் சிறுவயதிலே கண்டெடுத்துப் பழக்கி பாடகராக்கிவிட்டார்.

இப்போது பஜனை பல மொழிகளில் ஆக்கப்பட்டு பல நாடுகளில் பாடப்படுகின்றது. இது ஒரு மாபெரும் வளர்ச்சி.

கீர்த்தனம் என்றால் ஒருவர் தனியே பாட மற்றவர்கள் கேட்பதும், சங்கீர்த்தனம் என்றால் கூட்டாகப் பாடுவதைக் குறிக்கிறது.

சங்கீர்த்தனத்தில் நான்கு வகையுண்டு :

1. குணசங்கீர்த்தனம் : ஆண்டவனுடைய குணங்களைச் சொல்லிப் பாடுவது.
   உ-ம் :
   ஜெய ஜெய ராமா, ஜெய ரகுராமா,
   தசரத நந்தன ராஜா ராமா
   அபயப் பிரதாயக ஆனந்த தாயக
   திரிபுவன மோஹன சீதா ராமா
   தானவ பஞ்சன தீனோத்தாரண
   பிரேம சாகரா சாயி ராமா

2. லீலா சங்கீர்த்தனம் :
   உ-ம் :
   கல்யாண கிருஷ்ணா! ரமனீய கிருஷ்ணா!
   காளிங்கமர்த்தன ஸ்ரீகிருஷ்ணா
   கோவர்த்தன கிரிதாரி முராரி கோபிமன சஞ்சாரி

3. பாவ சங்கீத்தனம் : உணர்ச்சியூட்டுதல்
   சாக்கியபக்தி, வத்சல பக்தி (உறவு கொள்ளல்)
   உ-ம் :
   மானச பஜரே குரு சரணம்
   சாயி நாமம் பிரணமாம்யகம்
   சத்திய சாயி சரணம் பிரணமாம்யகம்...

4. நாம சங்கீர்த்தனம்
   உ-ம் : ராதே கோவிந்தா கோபாலா
   ஜெய கோவிந்தா ராதே கோபாலா
   கிருஷ்ணா மதுசூதனா மதுசூதனா கிருஷ்ணா
   கோவிந்தா கோவிந்தா கோபாலா

இதுவே எல்லாவற்றிலும் சக்தி வாய்ந்தது. அத்வைதம் பரப்பிய ஆதி சங்கராச்சாரியாரும் துவைத நிலையில் நின்று நாம சங்கீர்த்தனம் இயற்றினார். இதை தான் செய்த பாபங்களில் ஒன்றாகக் கூறியுள்ளார்.

சங்கீர்த்தனத்தின் முக்கியத்துவத்தை சுவாமி 1982ஆம்ஆண்டு நிகழ்த்திய ஒரு அருளுரையில் குறித்துள்ளார். இதில் சுவாமி கொடுத்த வரைவிலக்கணம்,


"இறைநாமத்தை தொடர்ச்சியாக உரத்து இடையில் நிற்பாட்டாது மனத் தயக்க மின்றி பாடுவதே சங்கீர்த்தனம் ஆகும்."

சுவாமி விளக்கம் கொடுக்கின்றார் :

தனிவழியாக காரில் போகும் பொழுது மின்வெளிச்சம் தடைப்பட்டால் இருட்டில் போவது மிகவும் கஷ்டம். ஒரு குழுவாக பல கார்களுடன் சென்றால் முன்விளக்கு தெரியா விட்டாலும் ஏனைய கார்களின் வெளிச்சத்தில் பயணிக்கலாமல்லவா? இதே போல சங்கீர்த் தனத்தில் ஒருவருக்குப் பாட முடியாவிட்டாலும் ஏனையோருடன் சேர்ந்ததும் பாட முடியும். ஏனைய சாதனைகள் அனேகமாக தனிப்பட்ட ஒருவருக்கே பயனளிக்கிறது. சங்கீர்த்தனம் பலருக்கு ஒரே சமயத்தில் பயனளிக்கிறது. எல்லாவற்றிலும் பவ சங்கீர்த்தனமே இறைவனை நெகிழ்விக்கும்.

உ-ம் : சத்திய சாயி சரணம் பிரணமாம்யகம்

பகவானின் பாதங்களைக் கெட்டியாகப் பிடிக்க வேண்டும். இதற்காகக் கண்ணீர் விட வேண்டும். சங்கீர்த்தனத்திற்கு மிகவும் உகந்த நேரம் அதிகாலையாகும். இதற்காகத்தான் சுவாமி நகரசங்கீர்த்தனம் செய்யச் சொல் கிறார். மக்கள் துயில் விட்டு எழும்பும் போது இறை நாமம் காதில் கேட்க வேண்டும். ஆகவே






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தகுதியானவர்கள் பாடவேண்டும். இது இறைவனுக்கு அர்ப்பணிக்கும் ஒரு செயலாகும்.

ஒரு தின்பண்டத்திற்கு உப்பு எவ்வாறு ருசியைக் கொடுக்கிறதோ, பஜனைக்கு பாவம்தான் உப்பு. இதய உணர்வுடன் பாடவேண்டும். எப்படி பாவத்தைப் பலப்படுத்தலாம்?

1. முதலாவது பஜனைப் பாடலில் வரும் சொற்களின் கருத்தைத் தெளிவாக விளங்கவேண்டும்.
   பிறமொழிப் பாடல்கள் கருத்துத் தெரியாமல் பாடினால் முழுதும் எதிர் விளைவைத் தந்திடும்.
2. உச்சரிப்பைக் கவனிக்கவேண்டும்.
3. பஜனைப் பாடலுக்குள்ளே கற்பனை மூலம் ஒரு கதையை உண்டாக்கவேண்டும்.
   உ-ம் : ஒரு பணக்காரன். மாளிகையில் வசிக்கிறான். வாசலில் பயங்கர நாய் காவல் காக்கிறது. எப்படி எஜமானைச் சந்திப்பது? நாயுடன் சிநேகிதமாவது கஷ்டம். எஜமானை உரத்துக் கூப்பிட வேண்டும்.

அவர் கீழே இறங்கி வந்து உங்களை அழைத்துச் செல்லலாம். நாய் ஒன்றும் செய்யாது.

உ-ம் :

நந்தமுகுந்த கோவிந்தா!
கோகுல நந்தன கோபாலா!
கிருஷ்ண சிறிஹரி கிருஷ்ணா!
கிருஷ்ணா சிறிசாயி கிருஷ்ணா
சுவாமி கீழே இறங்கிவருவார்.

கடைசியாக ஒரு பஜனை பாடுவோம் :
கிருஷ்ணா ஸ்ரீ ஹரி கிருஷ்ணா - ஹே
கோவிந்தா கோபாலா கிருஷ்ணா கிருஷ்ணா
நந்தமுகுந்தா கோவிந்தா நவனீத சோரா கோபாலா,
கோவிந்தா கோபாலா கோகுல நந்தன கோபாலா
கிருஷ்ணா ஸ்ரீஹரி கிருஷ்ணா கிருஷ்ணா ஸ்ரீசாயி கிருஷ்ணா




கதையை உண்டாக்கி அதில் பாவத்தை வெளிப்படுத்தவும்.

சாயி பஜனையின் தாக்கம் என்ன?
எங்கள் கல்வி நிறுவனத்தின் ஆசிரியர் ஒருவருக்கு அன்ரி இருந்தார். அவருக்கு கதைக்கவோ, சாப்பிடவோ எழும்பி உலாவவோ மனமில்லை. இந்த Clinical Depression ஐ மாற்றுவதற்கு மனநோய் நிபுணர், மனோதத்துவ நிபுணர், நரம்பியல் நிபுணர் எல்லோராலும் முடியவில்லை. எங்களில் ஒருவர் அவரைப் பார்க்கச் சென்று சாயி பஜனை இறுவெட்டைப் போட்டார். சில மணித்தியாலத்தில் அவர் கதைக்கத் தொடங்கினார். வைத்தியர்களுக்குப் பெரும் ஆச்சரியம். இதுதான் பஜனையின் சக்தி.

பஜனையைப் பாடினார்கள்:
ஹரி நாராயணா ஹரி நாராயணா ஹரி நாராயண பஜோரே
ஷ்யாம சுந்தரா மதன கோபாலா
சத்சித்ஆனந்தா சாயி கோபாலா
கோபி கோபால நாம் கோபி கோபால நாம் கோபி கோபால நாம் பஜோரே
ஹரி நாராயணா பஜோரே
சாயி நாராயணா பஜோரே

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
சமஸ்த லோகா சுகினோ பவந்து!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஜெய் சாயிராம்.

குறிப்பு :
இவர்கள் கடைசிப் பாடல் பாடும்போது பிரசாந்தி நிலைய உத்தியோகத்தர் நிகழ்வை ஆவணப்படுத்துவதற்காக தனது கைத்தொலைபேசிமூலம் மேடையைப் படமெடுத்தார். படத்தைப் பார்த்த பொழுது வெறுமனேயிருந்த கதிரையில் சுவாமி சிவந்த அங்கியுடன் வீற்றிருப்பதைக் கண்டோம். அங்கிருந்தவர்கள் எல்லோரும் புகைப்படத்தைப் பார்த்து ஆனந்தத்தில் திளைத்தார்கள். சுவாமியினுடைய பிரேமை யின் வெளிப்பாடு இதுவாகும். அவருக்கு குவளையில் வைத்த நீரில் அரைவாசி குடித்திருப்பதை அடுத்த நாள் காலை அவதானிக்கப்பட்டது. எஞ்சிய நீரை பெரிய போத்தலினுள் நீருடன் கலந்து தீர்த்தமாக எல்லோருக்கும் கொடுக்கப்பட்டது.

ஜெய் சாயிராம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02.05.2018



# ஸ்ரீ. சாயி கிரிதர்

சிரேஸ்ட விரிவுரையாளர்,
சத்திய சாயி உயர் கல்வி நிலையம்

பிரார்த்தனையுடன் ஒரு சுலோகமும் சொல்லித் தொடங்கினார்.

எடுத்துக்கொண்ட தலையங்கம் "பிரேமையே ஸ்ரீ சத்திய சாயி பாபா". நான் பகவானிடம் "சுவாமி பக்தர்கள் ஸ்ரீலங்காவிலிருந்து வந்துள்ளார்கள் என்னத்தைப்பற்றி அவர்களுக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டேன். அதற்குத்தான் பகவான் மேலே சொன்ன தலையங்கத்தைச் சொன்னார். எனக்கு ஸ்ரீ சத்திய சாயி பிரேமையின் அவதாரம் என்று தெரியும். ஆனால் **பிரேமையே ஸ்ரீ சத்திய சாயி** பாபா என்பதைப் பற்றிப் பேசுமாறு பணித்துள்ளார். சுவாமியே இதன் விளக்கத்தையும் தருவார் என்பதில் நம்பிக்கை.


பிரேமையே இராமபிரானாக அவதரித்தது. அதாவது பிரேமையே இந்த உருவத்தை எடுத்துள்ளது. ஸ்ரீ இராமராகவும் ஸ்ரீ கிருஷ்ணராகவும் கலியுகத்தில் ஸ்ரீ சத்தியசாயி பாபாவாகவும் உருவம் எடுத்துள்ளது. இந்தப் பிரேமையை விளங்குவது கடினம். நாரதர் பக்திசூத்திரத்தில் பக்தி சொற்களுக்கு அப்பாற்பட்டதென்று சொல்லியுள்ளார். இந்தப் பேரன்பு சாதாரண மனிதர்களின் மனதிற்கப் பாற்பட்டது. எம்மால் விளங்கமுடியாதது. ஆகவேதான் அன்பு மனித உருவம் எடுத்து எங்களுக்கு அமிர்தமான அன்பைத் தந்துள்ளார். காட்டியுள்ளார்.

நாரதர் பக்திசூத்திரத்தில் 54 ஆவது சுலோகத்தில் இவ்வாறு கூறியுள்ளார்.
குணரகிதம் -
குணங்களுக்கு அப்பாற்பட்டது.
காமநாரகிதம் -
ஆசைகளற்றது.
பிரதிக்ஷணம் வர்த்தமானம் -
தொடர்ச்சியாக விரிவடைவது.
அவிச்சின்மை தொடர்ச்சியானது.
அனுபவரூபம் -
அனுபவத்தின் மூலமே விளங்கலாம்.

இப்படியான அன்பை பகவான் எவ்வாறு வெளிப்படுத்தினார் என்று பார்ப்போம். உலகரீதியில் நாங்கள் குணாதிசயங்களைத்தான் பார்ப்போம். விவாகத் திற்கு முன்னரும் சாதகங்கள் பொருந்துகின்றனவா என்று பார்ப்போம். மனிதன் குணாதிசயங்களைத்தான் கவனிப் பான். ஆனால் தெய்வீக அன்பிற்கோ குணாதிசயங்கள் இல்லை.

1960 ஆம் ஆண்டு பெங்களூர்க்கான கல்லூரியை ஸ்தாபிப்பதற்காக அனந்தபூர் சென்றிருந்தார். சென்னையில் வசித்த கிருஷ்ணமூர்த்தி (TGK) என்பவர் ஒரு தொழிலதிபர். நாஸ்திகன். எல்லாவிதமான தீய பழக்கங்களும் கொண்டவர். அவரது மைத்துனர் அனந்தபூரில் வசித்தவர். மைத்துனர் பகவான் பாபா எங்கள் வீட்டிற்கு விருந்தினராக வரவுள்ளார். நீரும் வந்து அவரைச் சந்திக்கலாமே என்று வரவழை த்தார். கிருஷ்ணமூர்த்தி "எத்தனையோ பாபாக்கள் உள்ளார்கள். எனக்கு நம்பிக்கை யில்லை." என்று சொன்னார். இவரிடம் வசதியான பெரிய கார் இருந்தது. மைத்துனர் நீர் நம்பா விட்டாலும் உமது சேவை தேவைப் படுகிறது. பாபாவைக் கூட்டிச் செல்லக் காரைக் கொண்டு வந்து உதவும்படி கேட்டார். வருவதற்கு சம்மதித்தார். வீட்டிற்குப்போய் சுவாமியிருந்த அறைக்குள் நுழையும்போது சுவாமி "DMK (டிஎம்கே) வா" என்றார். எப்படி யெல்லாம் தனது கொள்ளைகளைப் பற்றி பாபா தெரிந்துள்ளார்? மைத்துனரிடம் இதை யெல்லாம் சொன்னாயா? என்று கேட்க, மைத்துனர் இலை என்று சொன்னார். காரில் கூட்டித் திரியும்படி கேட்க தனக்கு அந்தப் பிரதேசத்திலுள்ள பாதைகள் ஒன்றும் தெரியா தென்று சொல்ல, தெரிந்தவர் ஒருவரை உதவிக்கு அனுப்புவதாக மைத்துனர் சொன்னார்.

ஒருநாள் சுவாமி கிருஷ்ண மூர்த்தியைக் காரை எடுக்கும்படி சொன்னார். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தனக்குப் பாதைகள் தெரியாதென்று சொல்ல, சுவாமி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குப் பாதைகள் எல்லாம் தெரியுமென்று சொல்லி காரை எடுத்து ஓட்டச்சொன்னார். கொஞ்சநேரத்தில் நகர எல்லையைக் கடந்து வனாந்தரமான இடத்தில் சென்றோம். சடுதியாக வலது பக்கம் திரும்பு என்றார். பாதைகளோ இல்லை. காரோ 6 மைல் வேகத்தில் ஓடியது. இருந்தாற் போல காரை நிற்பாட்டு என்றார். இனி சுவாமியின் வைபவம் நடைபெறப் போகிறது. தூரத்தில் மரத்தின் கீழ் ஒருவன் செருப்புத் தைத்துக் கொண்டிருந்தான். அந்தத் தொழிலாளி எழும்பி சுவாமி! சுவாமி! என்று கூப்பிட்டபடி ஓடி வந்தான். அவருக்கு எப்படி சுவாமியைத் தெரிந்தது? மிகவும் அபூர்வம். சுவாமி கதவுக் கண்ணாடியை கீழிறக்கி, தான் வீட்டைப் பார்க்க வேண்டு மென்று சொன்னார். சுவாமி இவ்வளவு தூரம் பயணித்து என்னுடைய குடிலைப் பார்க்கவா வந்துள்ளீர்கள். ஆம் என்று சொல்லி முன்னே ஓடிப்போக விட்டார். கொஞ்சத் தூரம் போன பின்பு காரை நிற்பாட்டி அந்தத் தொழிலாளியைக் காரில் ஏற்றிக் கொண்டார்.

வீட்டை அடைந்தோம். துர்நாற்றம் எங்கும். சேரியாகத் தென்பட்டது. தொழிலாளி குடிசைக்குள் புகுந்து கிழிந்த பாயொன்றை விரித்தான். சுவாமி ஆனந்தத்துடன் அமர்ந்தார். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எத்தனையோ அமைச்சர்கள், தொழிலதிபர்கள், பகவானைத்தேடிப் போய் தரிசிப்பார்கள். இங்கே ஒரு வறிய தொழிலாளியைத் தேடி இவ்வளவு சிரமப்பட்டு சுவாமி வந்துள்ளாரே என மிகவும் அதிசயப்பட்டார்.

செருப்புத் தொழிலாளி சுவாமி ஏதாவது குடிப்பீர்களா? என்று கேட்க எது என்றாலும் தா, நான் ஏற்றுக்கொள்வேன் என்றார். அவனது வீட்டில் ஒன்றுமில்லை. சிறிதளவு மோர்த் தண்ணீரை நெழிந்து கிடந்த அலுமினியக் குவளையில் கொடுத்தான். அங்கே நல்ல தண்ணீர் வசதி ஒன்றும் தென்படவில்லை. எந்த அசுத்தமான நீரை




சுவாமிக்குக் கொடுக்கிறானே அவருக்கு வயிற்றோட்டம் வந்துவிடும் என்று கிருஷ்ணமூர்த்தி நினைத்தார். தான் குடித்ததுமல்ல கிருஷ்ணமூர்த்தியையும் குடிக்கச் சொன்னார். பின்பு குடும்பத்தாரைக் கூப்பிட்டு தான் கொண்டு வந்த பொருள்களைக் கொடுத்தார். பின்பு கண்ணீருடன் பிரிவு ஏற்பட்டது. இப் பிரிவு உடல் ரீதியானது. ஆத்ம ரீதியாக அவர்கள் ஒன்றாகவே இருந்தார்கள். இச் சம்பவம் TGK ஐ ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. திரும்பி வரும் பொழுது ஒரு இடத்திலே காரை நிற்பாட்டி "சுவாமி உங்களிடம் சில கேள்விகள் கேட்கப்போகிறேன்" என்றார் TGK. கேள்விகளாவன :

1. ஏன் நீங்கள் தாராளமான பொருள்களைக் கொடுத்தீர்கள்?
2. நீங்கள் இருவரும் முன்னர் தெரியாமல் இருந்தும் இப்போது எப்படி ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டீர்கள்?
3. நீங்கள் விரும்பினால் எத்தனைபேர் அத் தொழிலாளியை உங்களிடம் கொண்டுவந்திருப்பார்கள். நீங்கள் ஏன் தேடி வந்தீர்கள்?

நான் இங்கே ஏன் தேடி வந்தேன்? அவன் முற்பிறவியில் மிகவும் பணிவான பக்தன். மூன்று வேளை உணவுகூட இல்லை. என்றாலும் ஒவ்வொரு நாளும் 15 கி.மீ. நடந்து தனது இஷ்ட தெய்வத்திற்கு சிறு கற்பூரம் காட்டிய பிறகே நாளாந்த வேலையைத் தொடங்கினான். எவ்வளவு பக்தி! அர்ப்பணிப்பு! தியாகம்! என்று பார். இப்படியான பக்தனை நான் இந்த அவதாரத்தில் ஒரு தடவைகூட வந்து பார்க்கத்தானே வேண்டும்.

பிரேமாவே சத்திய சாயி பாபா என்பதற்கு இதுவே உதாரணம். இதே போல முன்னைய அவதாரத்தில் கிருஷ்ண பகவான் குசேலர் என்ற பக்தனுக்கு என்னவெல்லாம் செய்தார்? குசேலரோ வறுமையில் வாழ்ந்தார். அயல் வீட்டில் சிறிதளவு அரிசி வாங்கி அவலாக்கி, கந்தையில் முடித்துக்கொண்டு கிருஷ்ணரைக் காணச் சென்றார். அரண்மனைக் காவலாளிகள் இவரது தோற்றத்தைப் பார்த்து உள்ளே போகவிடவில்லை. குசேலர், கிருஷ்ணா! கிருஷ்ணா! என்று கத்தினார். குரலைக் கேட்ட கிருஷ்ணர் உடுத்த உடுப்புடன் காலணியுமில்லாது ஓடோடி ஓடோடி வந்து குசேலரைத் தழுவிக்கொண்டார். அவரை உள்ளே கூட்டிச் சென்று குளிப்பாட்டி, உடை கொடுத்து பாதங்களைக் கழுவி ருக்மணியை உணவு சமைக்கச் சொன்னார். உணவை ஊட்டினார். குசேலர் கொண்டுவந்த அவலையும் மகிழ்ச்சியுடன் தான் உண்டார்.

இதுதான் இறைவனின் பேரன்பு. இந்த அவதாரத்தில் ஒரு சிறிய வித்தியாசம். முன்னைய அவதாரங்களில் பக்தர்கள் என்னைநோக்கி வந்தார்கள். இந்த அவதாரம் பக்தனை நோக்கிச் செல்கிறது" என்று சுவாமி சொல்லியுள்ளார். ஏன் தாராளமாகப் பொருள்கள் கொடுத்தீர்கள்? என்பது இரண்டாவது கேள்வி. இந்தத் தொழிலாளி தனது வேலைகள் அனைத்தையும் பிரார்த்தனையாக மாற்றிக் கொண்டான். அவரது செருப்புவேலை மிகவும் தரமானது. வாடிக்கையாளர்கள் எவ்வளவு கூலி என்றால், சுவாமியின் இஷ்டம் என்றே சொல்லுவான். அக்காலத்தில் கீழே உள்ளவர்கள் மேலே உள்ளவர்களைச் சுவாமி என்றே அழைப்பது வழக்கம். சிலர் கூலிக்கு மேலாகக் கொடுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்கள். சிலர் குறையாகக் கொடுத்தார்கள். அவர்கள் கொடுக்காத கூலியனைத்தையும் சேர்த்து நான் கொடுத்தேன். வேலையைப் பிரார்த்தனையாகச் செய்தான். மூன்றாவது கேள்வி, எவ்வாறு ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டீர்கள்? ஒவ்வொரு இரவும் கனவிலே நானும் அவனும் சம்பாஷிப்போம். அவன் தனது பிரச்சினைகள் எல்லாம் சொல்வான். "கனவில் நான் உனது அரிய நண்பன், எல்லோருக்கும் பிரச்சினைகள் உண்டு" என்று கனவில் சொன்ன பின்பு மிகவும் நம்பிக்கையுடனும் ஊக்கத்துடனும் வாழ்ந்தான். இவ்வளவு தான், நாம் ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டோம்.

"இறைவன் ஒவ்வொரு பக்தனுடனும் தனித்துவமான உறவை ஏற்படுத்துவார். இப்படியான உறவு நிலையானது" என்று சுவாமி சொன்னார். நாரதர் பக்தி சூத்திரத்தில் பிரேமை அமிர்தம் போன்றது. அது எல்லாவற்றிற்கும் கிடைக்கும். சுவாமி எங்களின் மனப்பாங்கைத்தான் கவனிப்பார். வேறு ஒரு அந்தஸ்த்தையும் பார்க்கமாட்டார். அதனால்தான் எங்கள் எல்லோரையும் "பிரேமை ஸ்வரூபலாரா" என்று அழைப்பார்.

குல்வந்த் மண்டபத்தில் மாணவர்களுடன் இருந்த பொழுது இலையான் ஒன்று பறந்துதிரிந்து மூக்கு நுனியில் அமர்ந்தது. அப்போது எங்களுடன் இருந்த பேராசிரியர் எழும்பி கலைக்க முற்பட்டார். அப்போது சுவாமி "அந்த இலையான் யாரிடத்தில் அடைக்கலம் புகலாம்? அது இருக்கட்டும்" என்று சொன்னார்.

பிருந்தாவனத்தில் தோட்டத்தில் ஒரு நாள் கைநிறையக் கடலை கொண்டுவந்து நீட்டினார். சுற்றிவரவுள்ள குரங்குகள் எல்லாம் வரிசையாக வந்து ஒவ்வொரு கடலையை மட்டும் எடுத்துச் சென்றன. இதுதான் தெய்வீக அன்பின் (பிரேமை) சக்தி. குரங்குகளில்கூட ஒழுங்கைக் கொண்டுவர முடிந்தது. இராம அவதாரத்தின்போது வானர சேனையை எவ்வாறு பெரிய போர் அணியாக மாற்றினார். பிரபஞ்சம் முழுவதுமே தெய்வீக அன்பிற்கு கட்டுப்படும் என்பதை அறியவும். 1999 இல் ஒருநாள் தான் பல்கலைக் கழக கேட்போர் கூடத்தில் உரை நிகழ்த்த வருவதாக மாணவர்களுக்குச் சொல்லி யிருந்தார். முதல்நாள் சுவாமியின் குரல் வரத் தடைப்பட்டது. யாரோ ஒரு பக்தனின் நோயை எடுத்துக்கொண்டார். அவர்மிகவும் பலவீன மடைந்தார். இரவு முழுவதும் குரலை மீட்பதற்குப் பாடுபட்டார். பல்கலைக்கழக துணைவேந்தர் சுவாமியை ஆறுதல் எடுக்கும்படி சொன்னார். தான் கொடுத்த வாக்கை மீற முடியாது. எப்படியும் வருவேன் என்று சொன்னார். கூறியபடி சுவாமி வளாகத்தினுள் வந்தார். மேளம், நாதஸ்வரம் அவரை வரவேற்றன. மாணவர்க்கு மிகவும் மகிழ்ச்சி. சுவாமி மேடையில் போய் அமர்ந்தார். சுவாமி வித்தியாசமாகத் தென்பட்டார். நடக்கும்பொழுது காலை இழுத்து நடந்தார். வழக்கத்தில் சிங்கம்போல காற்றில் மிதந்து வருவார். இன்று என்ன சங்கடம்? சுவாமி மேடையிலுள்ள ஒலிபெருக்கியைப் பிடித்து உரை நிகழ்த்த தெண்டித்தார். குரல் வரவேயில்லை. பேராசிரியர் அனில்குமார் அவர்கள் காதை வாய்க்குக் கிட்டவைத்து கேட்க முயன்றார். மெல்லிய சத்தம்.





"இறைவன் ஒலியின் ரூபமே" என்றுதான் சொன்னார். சுவாமியின் நிலையைப் பார்த்து மாணவர்கள் துக்கத்தில் ஆழ்ந்து கலங்கி னார்கள். கண்ணீர்விடத் தொடங்கினார்கள். விக்கியும் அழுதார்கள். சுவாமி நிமிர்ந்து பார்த்தார். உடனே தனது கைகளை மேசையில் 30 வினாடிகள் அழுத்தினார். பின்பு இடி முழக்கம்போல் குரல் எழுந்தது. எல்லோரும் ஆனந்தத்தில் கை தட்டினார்கள். சுவாமியே நடந்ததை விளக்கினார். பக்தன் ஒருவன் குரலில்லாமல் அவஸ்தைப்பட்டான். அதை நான் என்மீது எடுத்துக் கொண்டேன். இரவு முழுவதும் குரலை எழுப்பத் தெண்டித்தேன். முடியவில்லை. சொன்ன சொல்லைக் காப்பாற்ற இங்கு வந்தேன். இங்கே மாணவர்களின் கண்ணீரையும் அவர்களின் அன்பையும் உணர்ந்தவுடன் இயற்கையின் விதிகளை முறிக்க உறுதி பூண்டேன். உங்களின் அன்பே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின் விதியை மீற வைத்தது. இதுதான் இறையன்பு.

சுவாமி பக்தர்களுக்காகவே வாழ்ந்தார். பிருந்தாவனத்தில் நடந்த மூன்று நிகழ்வுகள் மூலம் நாம் இதை விளங்கிக் கொள்ளலாம்.

1. ஒருநாள் சுவாமி காருக்குள் ஏறி அமரும்போது மாணவன் அவசரத்தில் கார்க் கதவை மூடினான். கார் வாசலில் வெளியே போனதும் சுவாமி காரை நிற்பாட்டி கதவைத் திறந்து தனது காலை உள்ளே எடுத்தார். காரில் இருந்த மாணவன் "ஏன் சுவாமி உடனே சொல்லவில்லை. நாங்கள் உடனே காயத்திற்கு கட்டுப் போட்டிருக்கலாமே" என்று கேட்டான். அதற்கு சுவாமி நான் உடனே காரை நிற்பாட்டி காலை உள்ளே எடுத்தால் நடந்தது எல்லோருக்கும் தெரிய வந்து அந்த மாணவனை ஏசியிருப்பார்கள். மாணவனும் பெருந்துயர் அடைந்திருப்பான். நான் எவ்வாறு மற்றையவர்களுக்குத் துன்பத்தைக் கொடுக்க முடியும்" என்று பதிலளித்தார். இதுதான் சத்திய சாயி பாபாவின் பிரேமை.
2. பிருந்தாவனத்தில் வேலை செய்யும் மலசலகூடத் தொழிலாளி ராமப்பா என்பவர். அவரின் மகளுக்கு விவாகம் நிச்சயப்படுத்தப்பட்டுவிட்டது. சுவாமியிடமிருந்து ஆசீர்வாதம் பெறவேண்டுமென்று தரிசனத்தின் போது நின்றார். சுவாமி அவரைத் திரும்பியும் பார்க்கவில்லை. சுவாமி பெரியாட்களைத்தான் கவனிப்பார். எம்மைப் போல சாதாரண கூலியாளைக் கவனிப்பாரா? என்று ஏங்கினான். சுவாமி சிறிது நேரம் கழித்து தனது அறையிலிருந்து வெளியே வந்தார். கையிரண்டிலும் பைகள் நிறையச் சாமான்கள். ராமப்பாவிடம் நேரே சென்று பைகளைக் கொடுத்தார். ராமப்பாவை ஆசீர்வதித்து.
"நான் உன்னை மறந்துவிட்டேனென நினைத்தாயா? திங்கட்கிழமை 7.30



தொடங்கி 9.00 மணிவரை ராகுகாலமல்லவா. உனக்கு அதில் நம்பிக்கையுண்டு பவித்திரமான மங்கல காரியங்கள் அந்நேரம் செய்வது உனக்கு பிடிக்காதென நினைத்து ராகுகாலம் முடியவந்து உன்னை ஆசீர்வதித்தேன். பைகளில் தேவையான சீலைகள் வேட்டிகள் உள்ளன எடுத்துக் கொள்" என்று சொன்னார்.
3. ஒருமுறை தேசிய அரசியல்வாதி திரு. வாஜ்பாயி வந்தார். அவர் சுவாமியிடம், நான் எனக்கு அமைதி வேண்டிய நேரமெல்லாம் இங்கே வரலாமா? என்று கேட்க சுவாமி". இது உன்னுடைய தாயாரின் இருப்பிடம் எப்போது வேண்டு மானாலும் வரலாம். நீ ஒரு நாள் பிரதம மந்திரியாவாய்" என்று கூறினார். தனக்கு வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லாததால் அது நடவாதென நினைக் கிறேன் என்றார். காலம்போக அவர் பிரதம மந்திரியானார் சுவாமியைக் காண வந்தார். சுவாமி நேர் காணலுக்கு கூப்பிட்டார். அந்த அறையில் சுவாமியின் கதிரைக்குப் பக்கத்தில் இன்னொரு கதிரையும் போடப்பட்டிருந்தது. பிரதம மந்திரி கதிரையில் அமர்ந்ததும் அவரைப் பார்த்து நீர் என்ன பெரியவனா கதிரையில் இருப்பதற்கு? கீழே இறங்கியிரும் என்று சுவாமி சொன்னார். பிரதம மந்திரி மிகவும் பணிவானவர். உடனே கீழே இறங்கி உட்கார்ந்தார். சுவாமியும் அவர் பக்கத்திலே கீழே உட்கார்ந்தார். உனக்கு முழங்காலில் சரியான வலியுள்ளது என்று சொல்லி அவரது கால்களை வருடினார்.

இறையன்பு மிகவும் விரிவானது. அது எல்லாவற்றையும் உள்ளடக்கும். ஸ்ரீ லங்கா தூரத்தில் இருந்தாலும் புத்தபெருமானை வணங்கினாலும் அந்த வழிபாடு அவரைச் சென்றடையும். ஏனென்றால் அவர் பிரேம ஸ்வரூபம்.

"இந்த இறையன்பை நாம் உணரவேண்டும். இது எம்மிடம் இருப்பதை அனுபவிக்கவேண்டும். இந்த அன்பு எம்மூலமாக எல்லோரிடமும் பரவவேண்டும்." என்றே சுவாமியிடம் பிரார்த்திக்க வேண்டும்.

ஜெய் சாயிராம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ.சி.ஜி.சாயி பிரகாஷ்

ஓம் ஸ்ரீ சாயிராம்.

பகவானின் பாதத்தில் பணிவுடன் பிரணாம்ஸ். உங்கள் எல்லோருக்கும் சாயிராம்.
பேச எடுத்துக்கொண்ட விடயம் :
- பகவானை பிரார்த்திக்கவேண்டும்.
- எப்படிப் பிரார்த்திக்க வேண்டும்.
- எப்படி சுவாமியை தொடர்ச்சியாக அன்புடன் உணரவேண்டும்?

கீதா சுலோகத்தை உச்சரித்தார்.
பக்தர்களே என்னை எப்போதும் மனதில் வையுங்கள். நாமும் பகவானை எப்போதும் எண்ணிக்கோண்டே இருக்கிறோம்.

"மச் சித்தா மத்கதப்பிராண போதயந்த பரஸ்பரம்
சுத யந்தஸ்ச மாம் நித்யம், துஷ்யந்திச ரமந்தி ச"
(அத் கீதை 10 சுலோகம் 9)

சித்தத்தை என்பால் வைத்து, உயிரை எனக்குரிய தாக்கி ஒருவருக்கொருவர் என்னை விளக்கிக் கொண்டும் யாண்டும் என்னைப் புகழ்ந்து பேசியும். மனநிறை வடைந்தும் மகிழ்வடைந்து மிருக்கின்றனர்.

சுவாமி தனது அருளுரையில் எல்லோரும் பாரதியர்களே. கடவுளை நேசிப்பவர் பாரதியரே. இந்தியாவில் வசித்துக் கொண்டு கடவுளில் பற்று இல்லை யென்றால் பாரதியர் அல்ல.


ஆன்மீகத்தில் மூன்று பாதைகள் உள்ளன.
அவையாவன: அத்வைதம், விசிஷ்டத்வைதம், துவைதம் என்பனவேயாகும்.

சுவாமியிடம் வந்தபின்பு இதன்விளக்கம் தெளிவாகியது. முதலில் சுவாமியிடமிருந்து ஏதோ பெறு வதற்காக வந்தோம். இது துவைதநிலை.

சுவாமி சொன்ன கதை :
ஒரு மாணவன் பரீட்சையில் சித்தியடைவதற்காக சிவன் சிலையை வைத்துக் கும்பிட்டான். சித்தியடையவில்லை. சிவன் சரியில்லை யென்று சொல்லி அதை அலுமாரியில் வைத்துப் பூட்டிவிட்டு, சரஸ்வதி சிலையை வாங்கிப் பூசை செய்தார். பரீட்சையில் சித்தியடையவில்லை. அதையும் அலுமாரியில் வைத்துப் பூட்டினார். பிள்ளையாரைத்தானே முதலில் வணங்க வேண்டுமென்று. சிலையை வாங்கிப் பூசை செய்ய ஆரம்பித்தார். அப்போது சாம்பிராணிக் குச்சி கொளுத்தி வைத்தார். சாம்பிராணிப்புகை அலுமாரிக்குள் போவ தைக் கண்டார். எனக்கு உதவி செய்யாத சிலைகளுக்கு இப்புகை போகக்கூடாதென்று சொல்லி அச் சிலைகளின் கண்களைத் துணியால் மூடிக் கட்டினார். அப்போது சிவன், சரஸ்வதி பிரசன்னமாகினர். மாணவன் நீங்கள் நான் பூசைசெய்யும் பொழுது காட்சி தர வில்லை. கண்களைக் கட்டியதும் ஏன் காட்சி தருகிறீர்கள்". இப்பதான் நாங்கள் உயிர்ப்பான தெய்வங்கள் என்று நம்பிக்கை கொண்டாய். ஆகவே தான் தரிசனம் தருகிறோம்" என்று சொல்லி மறைந்து விட்டார்கள்.

நாம் பிரார்த்திக்கும்போது சிலையில் தெய்வம் இருப்பதை உணரவேண்டும். அதற்காக எனது தெய்வம் உனது தெய்வம் என்று விதவிதமான உருவங்களை வணங்கி முரண்பாடடையக்கூடாது.

விஷ்ணு, சிவா, பிரம்மா இவர்களின் தேவிமார் யார்? அவர்களின் உடை முதலிய வற்றை உண்மையாகக் கண்டீர்களா? இந்த உருவமெல்லாம் ரவிவர்மன் என்ற ஓர் சிறந்த ஓவியரால் வரையப்பட்டனவேயாகும்.
உ-ம் : மக்கள் நாகதேவதையைக் கும்பிடுகிறோம் என்று சொல்லி நாகபாம்பு உருவம் செய்து வழிபடுவார்கள். நாகதேவன் இவர்களின் பக்தியை உணர்ந்து தரிசனம் கொடுத்தார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் அல்லோலகல்லோலப்பட்டு அந்தப் பாம்பிற்கு கல்லெறிந்தார்கள். இங்கே எண்ணம், சொல், செயலில் ஒருமையும் தூய்மையும் இல்லை. 1991 இல் அருளிய கோடைக்கால மழையை வாசிக்க வேண்டும். விதையிலிருந்து பெரியமரம் வளர்ந்தது. பிரார்த்தனையின் பரிணாமத்தைப் பார்ப்போம். விஞ்ஞானம் எவ்வளவோ வளர்ச்சியடைந்தாலும் நீரை உண்டாக் கலாமா? கடவுளால் தான் ஐம்பூதங்களைச் சிருஷ்டிக்க முடியும். பின்பு சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் போன்றவை எழுந்தன. உருவ வழிபாட்டிற்கு முன்பு நாம வழிபாடு உருவாகியிருக்க வேண்டும். ஒளி ஆயிரம் சூரியன்களுக்கு சமமானவை. இருளை அல்லது அறியாமையை அகற்றும்.

கடவுளென்றால் என்ன என்று கற்பனை மூலம்கூட விளங்குவது கஷ்டம். இதில் நேரடியான தொடர்பு இல்லை. எமக்கு அனுபவம் ஏற்பட்டால்தான் எமக்கு நம்பிக்கை வரும். ஆகவேதான் ஒவ்வொருவருடனும் தொடர்பு கொள்ளவே அவதாரம் நிகழ்ந்தது.

ஒரு முறை எனது தந்தையார் புகையிரதத்தில் பயணம் செய்தார். கையிலே 1970ஆம் ஆண்டு சனாதனசாரதி சஞ்சிகையை வாசித்துக்கொண்டிருந்தார். அதிலே சுவாமியின் படம் இருந்தது. முன்னாலிருந்த முதியவர் "நீங்கள் இளம் வயதினர். ஒரு மனிதனைப் போய்க் கடவுளென்று வணங்குகிறீர்களே? கிருஷ்ணா தான் கடவுள். எனக்குக் கீதைச் சுலோகங்கள் எல்லாம் தெரியும்" என்று வசைமாரி பொழிந்தார். தந்தையார் "நான் ஒரு ஓவியன். எனக்கும் கிருஷ்ணரை வரைய விருப்பம் உண்டு. அவருடைய உயரம், உருவம் என்னஎன்று சொல்லுங்கள்" என்று கேட்டார். எனக்கு எப்படித் தெரியும் என்று அதிர்ச்சி யடைந்து சொன்னார். அவரைக் காணாமலே அவரைத் தெய்வம் என்று எப்படி நம்பலாம்? ஏன் அவரைக் காணவில்லை? என்று கேட்க




தனக்குத் தெரியாது என்று சொன்னார். நீர் அவரை உருவத்தில் காட்சி கொடுக்கப்பிரார்த்திக்கவில்லை. ஆகவே அவருக்கு அண்மையில் போக முடியவில்லை. சாயி பாபா அவதாரம் எடுத்து எங்களுக்கு அண்மையிலும் அருகாமையிலும் அனுபவங்களைத் தந்தார். அண்மையில் இருப்பது மாத்திரம் போதாது. தரிசனத்தின்போது ஒரு முறை, பகவான் முன் வந்து நின்றபோது முதியவர் ஒருவர் பாத நமஸ்காரம் எடுக்கவில்லை. பகவான் கடந்து சென்றதும் பகவான் மிதித்த மண்ணைத் தொட்டுக்கும்பிட்டார். மூன்றாவது வரிசையில் இருந்து கொண்டு எட்டிப் பாதத்தைத் தொட முயற்சிப்பார்கள். அப்படிச் செய்வதால் மட்டும் மோட்சம் கிடைக்குமா? எத்தனையோ பறவைகள், பூச்சிகள் பிரசாந்தி நிலையத்திலுள்ளன. அவைக்கெல்லாம் மோட்சம் கிடைத்துவிடுமா? அண்மையில் இருப்பதுடன் சுவாமியின் அன்புக்குப் பாத்திரமாகவேண்டும்.

நாம் இப்பொழுது பிரசாந்தி நிலையத்தில் உள்ளோம். அண்மையிலுள்ளோம். அருமையாகவுமிருக்க வேண்டும். எப்படி அருமை ஸ்தானத்தை அடையலாம்? முதல் அவரின் நாமத்தை தொடர்ச்சியாக உச்சரிக்கவேண்டும். அவரை இதயபூர்வமாக அழைத்தால் தென்படுவார். தடிமன் வந்தால் தொண்டையில் இருக்கும்படி இனிப்புத் துண்டை (Lozenge) நாம் விழுங்குவோம். இதேபோல சாயி நாமத்தின் மகிமை வாயிலிருந்து உடலெங்கும் பரவும்.

இதுமாத்திரம் போதாது. சுவாமியின் பணியிலும் ஈடுபடவேண்டும். சகல நன்மையான பணிகளும் இறைபணியேயாகும். ஒருமுறை எமது பேராசிரியருக்கு சுவாமி பொன்னால் செய்த பேனாவைக் கொடுத்தார். அடுத்தநாள் அது எங்கே? என்று கேட்டார். "நான் அதைப் பவித்திரமாக வைத்துள்ளேன். சுவாமியின் அருளுரைகளை எழுதும் போதுதான் அதைப் பாவிப்பேன்" என்று சொன்னார். சகலவேலைகளும் சுவாமியின் வேலையே என்று சொன்னார்.

விபீஷணனும் அனுமானும் :

விபீஷணன் :

நான் தொடர்ச்சியாக ராமநாமம் சொல்கிறேன். எனக்கு இராமர் உணர்வைத் தருகிறார் இல்லையே?" என்று கேட்டான்.

அனுமான் :

நீ இராமரின் பணியில் ஈடுபட்டாயா? சீதா பிராட்டியார் இலங்கையில்தானே இருந்தார். அவரை விடுவிக்க என்ன செய்தாய்" என்று அனுமான் சொன்னார்.

நாமத்துடன் இறைபணியிலும் ஈடுபடவேண்டும். நாங்கள் யாத்திரைசெல்லும்போது கடவுள்மீது நம்பிக்கை வைத்தே செல்கிறோம். எவ்வளவுதூரம் போய் வழிபட்டாலும் நான்தான் அங்கேயும் இருப்பேன்.

இராணி ஜாலா என்ற பெண்மணி, துழல ஐஸ்கிறீம் தொழிற்சாலை முகாமையாளரின் மகள். சிறுவயதில் சுவாமியுடன் விளையாடுவார். அவருக்கு உடல் ஊனம் இருந்தபடியால் சரியாக நடக்க முடிவதில்லை. அவருக்கு கைலாஷ் போகவேண்டு மென்று இறுக்கமான ஆசை. சுவாமியிடம் அனுமதி கேட்டுக் காரில் போனார். கார் சறுக்கி பள்ளத்தில் நீர் தேக்கத்தில் விழுந்துவிட்டது. சாரதி யன்னல் கண்ணாடியைத் தாழ்த்தி வெளியேறும்படி சொல்ல கண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியைப் பதித்தால் நீர் உள்ளிட்டு மற்றவர்களைப் பாதிக்கும் என்று நினைத்து மறுத்து விட்டார். ஆனால் சாயிராம், சாயிராம் என்ற நாமத்தை உரத்து உச்சரித்தார். என்ன ஆச்சரியம்? ஒரு பெரிய வாகனம் எங்கிருந்தோ வந்து காரை மேலே தூக்கி எடுத்தது. பின்பு பாதையிலே மண்சரிவு ஏற்பட்டது. பாதை போக முடியாதவாறு இருந்தது. அவர் இறை நாமத்தையே உரக்க உச்சரித்தார். சடுதியாக பெரிய வலிமையான ஷேர்ப்பா (Sherpa) வந்து தனது கையை இறுகப் பிடித்துக்கொண்டு தனது கால் அடையாளத்தில் காலை வைத்து வரச்சொல்லி கூட்டிச் சென்றார். மேலே சென்றடைந்ததும். இஞ்சித்தேனீர் வாங்கிக்கொடுத்து தனக்கு உதவியவருக்கு பணம் கொடுக்கத் திரும்பிப் பார்த்தபோது அவர் மறைந்துவிட்டார்.

வீடு வந்து தந்தையிடம் சுவாமிக்குப் போய் நன்றி கூறும்படி சொன்னார். சுவாமி, "அவர் ஒரு மூலையில் இருந்து என் நாமத்தைச் சொன்னபோது நான் போகத்தானே வேண்டும்." என்று சொன்னார். பகவத்கீதையில் 12ஆவது அத்தியாயத்தில் பக்தனுக்கு இருக்கவேண்டிய குணாதிசயங்களை கிருஷ்ணபகவான் கூறியுள்ளார். நான் வேறு கடவுள் வேறு என்ற நிலை துவைதநிலை. நான் இறைவனை எங்கும் கண்டால் அது விசிஷ்டத்வைதம். நானும் கடவுளும் வேறல்ல. எல்லாம் ஒன்று என்ற நிலை அத்வைதம். சுவாமி "தனது வாழ்வே தனது செய்தி" என்று சொல்லியுள்ளார். பக்தனில் இருக்கவேண்டிய குணாதிசயங்கள் அனைத்தையும் அவரின் வாழ்விலிருந்து அறிந்துகொள்ளலாம்.

அவர் ஒரு பிராணியிலும் வெறுப்புக் காட்டு வதில்லை. கோடைக்கானலில் ஒருமுறை சுவாமியின் சுவரில் கரப்பான் பூச்சி ஓடியது. இதைக்கண்டு அறையினுள் லக்ஷ்மன். ரேகை வரைந்தார்கள். சுவாமி அதெல்லா வற்றையும் நீக்கச் சொன்னார். அதுகள் எங்கும் ஓடித் திரியட்டும். நாம் அனைத்தையும் நேசிக்கவேண்டும் என்று சொன்னார்.


ஒருமுறை சுவாமி அறையிலிருந்து தரிசனம் கொடுக்கவந்தபோது, ஒரு இடத்தில் கொஞ்சநேரம் நின்றார். சிறிது நேரத்திற்குப் பின்பு நடந்துசென்றார். ஏன் அப்படிச் செய்தீர்கள் என்று கேட்டபோது: "அங்கே எறும்புகள் வரிசையில் போயின. நான் தாமதிக்காவிட்டால் பின்னால் வந்தவர்கள், எறும்புகளை கால்களால் மிதித் திருப்பார்கள்" என்று கூறினார். எல்லாவற்றிலும் இறைவனைக் காண வேண்டும். அடுத்தது எல்லோரிடமும் சிநேகிதமாக இருக்கவேண்டும். நாம் மாணவராயிருந்த போது, சுவாமியிடம் சிநேகிதபூர்வமாக பழகிநோம். எமது பிரச்சினைகளை சுவாமிக்கு கடிதத்தில் எழுதிக் கொடுப்போம். ஒருமுறை குஜராத் மாநிலத்திலிருந்து வந்த மாணவன் மிகவும் சோர்வுடன் இருந்தான். அவனை சுவாமிக்கு கடிதம் எழுதச் சொன்னோம். சுவாமி வார்டனைக் (றுயசனநெ) கூப்பிட்டு அந்தப் பையனுக்கு சோறு விருப்பமில்லை. அவனுக்கு சப்பாத்தி கொடுக்கச் சொன்னார். ஒரு சிநேகிதன் மனப்பூர்வமாக ஒருவனை நேசிக்கும்போதுதான் உண்மையான சிநேகிதனாவான்.

1991ஆம் ஆண்டு சுவாமி தன்னிருப்பிடத்தை பூர்ணசந்திர மண்டபத்திற்கு மாற்றினார். நாங்கள் 9ஆம் ஆண்டில் படித்தோம். நாமெல்லோரும் சுவாமியின் புதிய இடத்திற்கு ஏதாவது செய்து கொடுக்க வேண்டு மென்று தீர்மானித்தோம். கையாலே வரைந்து எழுதிய கலண்டர் தயாரித்தோம். அதில் சுவாமியே ஒவ்வொருநாளும் திகதியை மாற்றவேண்டும். நாங்கள் ஒரு சிறு டப்பாவில் கராம்பும், பேனை வைக்க ஒரு ஸ்ரான்டும் (Stand) செய்து எல்லாவற்றையும் சுவாமியிடம் அன்பளித் தோம். சுவாமி எப்படி இதை எங்களுக்குத் துலங்கினாரெனப் பார்ப்போம். சில மாதங் களுக்குப் பின்பு பிரதம மந்திரி தரிசிக்க வந்தார். சுவாமி தன் அறையிலுள்ள மேசையைத் துப்புரவு செய்யச் சொன்னார். அப்போது அந்தக் கலண்டரை ஒதுக்க வேண்டாமென்று சொன்னார். சுவாமியின் சிநேகித அன்புணர்வுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

கருணை என்ற அடுத்த குணாதி சயத்தைப் பார்ப்போம். இதில் பகவான் பலவிதமாகச் செயற்பட்டுள்ளார். சிலவற்றை அவரால்தான் செய்யமுடியும்.

உ-ம் : வால்டர் கேவானுக்கு (Walter Cowan) நடந்தது. இவர் சுவாமியின் அழைப்பினால், சென்னையில் நடந்த மகாநாட்டிற்கு அமெரிக் காவிலிருந்து வந்தார். அவர் ஹோட்டலில் ஒருஇரவு இருதய இறுக்கத் தினால் இறந்து போய்விட்டார். உடல் ஒரு வைத்தியசாலையில் வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருந்தது. சுவாமி அறைக்குள போய் "வால்டர் எழும்பு" என்று மூன்றுமுறை சொன்னார். இறந்தவர் கண்ணைத்திறந்து உயிர்பெற்றார். பின்னர் 6 மாதம் சுகமாக வாழ்ந்தார். ஏன் உயிர்ப்பித்தீர்கள் என்று கேட்ட போது அவரின் மனைவியாரின் மேல் உள்ள இரக்கத்தினால் செய்தேன். அவர் மனம் உடைந்து கஷ்டப் பட்டிருப்பார்.

மாணவன் ஒருவன் சுவாமியிடம் நாம் வருவதற்கு நாம் இப்பிறவியில் மாத்திரமல்ல






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முற்பிறவிகளிலும் செய்த புண்ணியமா? என்று கேட்டார். இமயமலையில் எத்தனையோ தபசிகள், எத்தனையோ வருடங்கள் தவமிருந்து சில விநாடிகள் தரிசனத்தைப் பெற்றார்கள். நீங்கள் எனது தரிசனத்தை மணித்தியாலக் கணக்கில் பெறுகிறீர்கள். இதற்கு எனது கருணையும் கிருபையும்தான் காரணம்.

சுவாமி எப்போதும் பற்றற்றவராகவே காணப்பட்டார். நாங்கள் உணவருந்தும்போது ஒரு மேசையிலேயே உட்கார்ந்து உணவருந்துவோம். எல்லோரும் ஒன்றாக உணவருந்தி ஒன்றாக வேலை செய்ய வேண்டும். சுவாமிக்கு எள்ளளவும் அகங்கார மில்லை. பிருந்தா வனத்தில் ஒருநாள் ஒரு விசேட விருந்தாளி வரவிருந்தார். அறையிலுள்ள மேசையை அரக்க வேண்டியிருந்தது. சேவாதாள் ஒருவரே இருந்தார். சேவாதாள் இன்னொருவரைக் கூட்டிவரவேண்டுமென்று சொன்னார். சுவாமி, "நான் இருக்கிறேன்" என்று சொல்லி மேசையைச் சேர்ந்து அரக்கினார்.

சமநிலையைப் பேணுவார். நாம் ஒருமுறை "சாயிமா, ஓ மா! ஓ மா! சாயி மா!
When we are happy you are happy
when we are sad you are sad" என்று பாடினோம்.

சுவாமி:
இல்லை இல்லை துக்கம் என்றால் என்ன? அதற்கு என்ன வடிவம்? மரண நிகழ்வையும் சாலச்சந்தோசம் என்றே சொல்வார். ஏனென்றால் அவர் எந்நேரமும் பரவசத்திலிருப்பார்.

மேற்கூறிய குணாதிசயங்களை அவதானிக்கும்போது நாம் தெய்வீகத்தை ஓரளவு அறிந்து கொள்ளலாம்.

ஒருமுறை ஹைதராபாத் (Hyderabad) இலிருந்து பெங்களூருக்கு விமானத்தில் வரும்போது ஒரு பத்திரிகை யாளன் சுவாமியை சில கேள்விகள் கேட்க வேண்டுமென்று வேண்டினான். ஆச்சிரமத்திற்கு வந்து பக்தர்களைப் பார். எனது தரிசனத்தைப் பார் என்றார். ஆச்சிரமத்தில் அவரை நேர்காணலுக்கு அழைத்தார். அறையிலே எல்லாக் கேள்விகளையும் பத்திரிகையாளர் மறந்துவிட்டார். சிறிது நேரம் பொறுத்து: "சுவாமி நீங்கள் அன்பினால் நிறைந்து ள்ளீர்கள். அப்படியிருக்க உங்களைப் பற்றிப் பிழையாக அப்பிப்பிராயம் கூறுகிறார்களே. உங்களுக்கு கோபம் வருவதில்லையா?"

சுவாமி:
"சிலர் என்னைச் சடையன் என்பார்கள். சிலர் மொட்டையன் என்பார்கள். ஒன்று உண்மை மற்றது உண்மையில்லை. நான் இரண்டையும் ஏற்றுக்கொள்வேன். அவர்களின் பிழையல்ல. அவர்களின் சிறிய வரையறைக்குட்பட்ட மனதினால் என்னை விளங்கிக்கொள்ள முயல்கிறார்கள். மனதிற்கப்பால் சென்று சுவாமியை நேசிக்கவும்" என்று சொன்னார்.
சுவாமியிடம் இருந்து கிடைத்த அரிய பரிசு என்ன?
"ஒரே கடவுள் வெளியிலும் உள்ளார். உள்ளேயும் உள்ளார். உள்ளேயும் வெளியேயும் இருப்பது ஒன்றே"
இந்த உண்மையை நாம் நேரடியாக அனுபவிக்கிறோம். நான் மாணவனாக இருந்தபோது நான் ஒரு மூலையில் போய் சுவர்க்கத்தைப் பற்றி தனியாக சிந்திப்பேன். சுவாமி வந்து "என்ன அந்த மூலையில் செய்கிறாய்?" என்று கேட்டார். சுவாமிக்கு எல்லாம் தெரியும் என்பதில் முழு நம்பிக்கை இருக்கவேண்டும்.

சுவாமி அன்பே வடிவானவர். அவருடைய நாமத்தையும் ரூபத்தையும் இறுகப் பிடிக்கவேண்டும். அப்போது அவர் அருகாமையில் இருப்பதை உணரலாம். இதை நாம் நாளாந்த அப்பியாசமாக்கினால் தெய்வீக அமிர்தத்தை சுவைக்கலாம். உங்கள் எல்லோருக்கும் நன்றி.

ஜெய் சாயிராம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ .முரளி

**பர்த்தி யாத்திரீகர்களுக்கு சத்சங்கம் நிகழ்த்திய அன்பர்களை பொதுஜன உறவு நிலதாரி அன்பர் முரளி அவர்கள் அறிமுகம் செய்துவைத்தார்.**

அறிமுகத்தின்போது அவர் மேற்கோள் காட்டியவை மனதில் பதிந்துள்ளன. அவற்றைச் சுருக்கமாக தொகுக்கப்பட்டு இங்கே தரப்படுகின்றன.

எமது தேசிய சபைத்தலைவர் திரு. வி.மனோகரன் காட்டிய ஆர்வத்தினால்தான் இச் சத்சங்கங்கள் நெறிப்படுத்தப்பட்டன. அவருக்கு எனது பாராட்டுக்கள். சுவாமி நேரத்திற்கே கதிரையில் வந்தமர்ந்திடுவார். ஆகவே பக்தர்களே நேரத்திற்கு வரவேண்டும். சத்சங்கம் - சத் என்றால் சத்தியம்,சங்கம் என்றால் சத்தியத்தைப் பற்றி அறிய பக்தர்கள் கூடும் நிகழ்வு

நீங்கள் கவனித்துப் பார்த்தால் சுவாமி இங்கு வருபவர்களை சோம்பலாக இருக்க விடமாட்டார். காலை 4.00 மணிக்கே ஓம்காரம், சுப்ரபாதம் பின்பு நகர சங்கீர்த்தனம் பின்னர் 8.00 மணிக்கு வேதம் ஓதுதல், பஜனை, தரிசனம். சிறிது இடைவேளைக்குப் பிறகு 10.30 மணிக்கு சத்சங்கம். இதற்குப் பின் சில மணித்தியாலங்கள் ஆறுதல் எடுக்கலாம். இங்கே காலையில் ஸ்மரணம், சங்கீர்த்தனம், சிரவணம், எல்லாம் நிகழ்கின்றன.

பாடிய பிரார்த்தனைப் பாடல் :
நமஸ்தே திவ்ய ரூபாய
நமஸ்தே சத்திய மூர்த்ததே
நமஸ்தே பர்த்தி வாசாய
சாயி பாபா நமோ ஸ்துதே

ஆன்மீகத்தில் அப்பியாசம் மிகவும் முக்கியம். அப்பியாசத்தின் அனுபவத்திலிருந்தே எமது அன்பர்கள் பேசுவார்கள்.

கம்பராமாயணத்திலிருந்து முதலாவது பாட்டை மேற்கோள் காட்டினார்:
"உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்
நிலை பெறுத் தலும், நீக்கலும் நீங்கிலா
அலகு இலா விளையாட்டு உடை யார் அவர்
தலைவர், அன்னவர்க்கே சரண் நாங்களே"

கம்பனின் இன்னுமொரு பாட்டை மேற்கோள் காட்டினார்.
"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாபமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே இரண்டு எழுத்தினால் (ராமா)"
இம்மையே சாயிராம் பதத்தினால் ராம நாமாவளியிலிருந்து மேற்கோள் காட்டினார்: (ராமர் என்று பெயர் வைத்தவர் வசிஷ்ட முனிவரேயாவார்.)

ராமாய ராம பத்ராய
ராமச் சந்திராய வேதசே
ரகுநாதாய நாதாய நமஹ
சீதா பதயே நமஹ
சாயி நாதாய நமஹ
இராமரை யார் யார் எவ்வாறு அழைத்தார்கள்

| | |
|---|---|
| தசரதர் | - ராம பத்ராய |
| கௌசல்யா | - ராம சந்திராய |
| ரிஷிகள் | - வேதசே |
| மக்கள் | - ரகுநாதாய |
| சீதா | - நாதாய |
| ஜனகர் | - சீதா பதயே |

இன்னுமொரு பிரார்த்தனை :
"சர்வ ரூப தரம் சாந்தம்
சர்வ நாம தரம் சிவம்
சத் சித் ஆனந்தரூபம், அத்வைதம்
சத்தியம் சிவம் சுந்தரம்
சாத பாவமை சாந்தி பிரேம சொரூபம்
பரம் சத்குரும் சாயி நாதம் பஜேகம்"

மாணிக்க வாசகரின் திருவாசகத்திலிருந்து மேற்கோள் காட்டினார் :
திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்.
"பால் நினைந்தூட்டும் தாயினும் சால
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவ பெருமானே!
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே!"

இப்பாட்டு பகவானுக்காகப் பாடியது போல் உள்ளது.

ஜெய் சாயிராம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாயி பிரசாந்த்

இவர் பள்ளிப்படிப்பை சுவாமியின் பள்ளிக்கூடத்தில் படித்து பொறியியல் பட்டத்தை வேறு பல்கலைக்கழகத்தில் முடித்து திரும்பவும் சுவாமியின் பல்கலைக்கழகத்தில் MBA (வணிக முகாமைத்துவம்) பட்டத்தை 2008 ஆம் ஆண்டு பெற்றார். அன்றுமுதல் இன்றுவரை சுவாமியின் சேவையை வைற்பீல்ட் (Whitefield) வைத்தியசாலையிலும் பிரசாந்தி நிலையத்திலும் கணக்காளராகப் பணிபுரிகின்றார். சென்னையில் நடமாடும் வைத்தியசாலையின் இணைப்பாளராகவும் சேவாதள் இணைப்பாளராகவும் சத்திய சாயி சேவா நிறுவனத்தில் பணி புரிகின்றார். (அவர் 29.4.2018, 4.5.2018 ஆகிய திகதிகளில் ஆற்றிய உரையின் சாராம்சம்)

ஓம் ஸ்ரீ சாயிராம்!

நாம் எல்லோரும் இங்கு வந்ததும் ஒருவரை ஒருவர் சந்திப்பதும் இப்படியான சத்சங்கத்தில் கலந்து கொள்வதும் சுவாமியின் சங்கல்ப்பமேயாகும். நாம் ஒரு அடி எடுத்து வைத்தால் அவர் மிக விரைவில் 10 அடிகள் எடுத்துவைப்பார். இப்படியான நடமாடும் தெய்வத்துடன் தொடர்பு ஏற்படுவது நாம் பல ஜென்மங்களில் செய்த புண்ணிய பலனேயாகும். சுவாமியிடம் வந்தயாரும் தங்களுக்குக் கஷ்டம் வந்தது என்று சொல்வதில்லை. சுவாமிக்கு கர்மவினையையும் மாற்றலாம். தலைவிதியையும் மாற்றலாம். உதாரணம் : டொக்டர் அல்ரேஜா (Dr. Alreja) என்பவர் பிரசாந்தி நிலையத்திலுள்ள பொது வைத்தியசாலைக்கு பணிப்பாளராகக் கடமையாற்றினார். வீடு மனைவி, மக்கள் என்று கவலை கொள்ளலாமல் 24 மணி நேரமும் பணி புரிந்தார். இவர் சுவாமியிடம் நேரடியாகக் கதைப்பார். ஒரு நாள் ஓடிப்போய் பாதநமஸ்காரம் கேட்டார். அவருக்கு 76 வயது. ஏன் அவசரம் என்று சுவாமி கேட்க தனது பிறந்தநாளென்றும் ஜோதிடம் தனக்கு இது கடைசி வருடமென்றும் சொல்லியுள்ளார்களெனத் தெரிவித்தார். அவர் 80 ஆவது வயது பிறந்தநாளும் போய் பாதநமஸ்காரம் எடுத்த பொழுது "நீ இன்னும் இருக்கிறாயா? உனது வயதை நூறு வயது வரை நீட்டியுள்ளேன். ஜோதிடரை நம்புகிறாயா? என்னை நம்புகிறாயா? என்று சுவாமி சொன்னார்.

டாக்டர் 101 வயது வரை ஜீவித்தார். சுவாமி அதற்கு முன்னரே மகா சமாதியடைந்துவிட்டார். சுவாமி அடிக்கடி "நீ எனது பணியைச் செய்தால் நான் உனது வேலையைப் பார்ப்பேன்" என்று சொல்வார். தான் அனைத்தையும் கவனித்துக் கொண்டேயிருப்பேன் என்றும் சொல்லியுள்ளார். மாணவர்கள் விடுதலையின்போது தங்கள் வீடுகளுக்குப்போய் திரும்பி வந்தபிறகு, விடுதலையின்போது செய்த அனைத்தையும் சொல்லுவார். இதனால் எமக்கு எங்களைச் சுவாமி எந்நேரமும் கவனித்துக்கொள்கிறார் என்பதை வலுவூட்டியுள்ளார்.

நான் MBA முடித்து வெளியேதான் போகவேண்டுமா என்று நினைத்த பொழுது "நீ எங்கேயும் போகவேண்டாம். என்னுடனேயே இரு" என்று சொன்னார். அவருடனேயே இன்னும் என்றும் இருக்கிறேன். எப்பவும் இருப்பேன். அவர் வசதி, செல்வம், அந்தஸ்தைப் பார்ப்பதில்லை. எமது இதயத் தூய்மையைத்தான் பார்ப்பார்.

- சுவாமி அந்தர்யாமி என்பதை சதா மனதில் இருத்தவேண்டும்.
- நாம் எதையும் செய்யமுன்பு இது சுவாமிக்குப் பிடிக்குமா, பிடிக்காதா என ஆராய வேண்டும். இவ்விரண்டையும் செயற்படுத்தினாலே பக்தனாகிவிடுவாய்.
- எப்போது சேவைக்கென சந்தர்ப்பம் தருவாரெனத் தயாராக எப்போதும் இருந்து செய்யவேண்டும்.

செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவருக்கு நிகழ்ந்ததைப் பார்ப்போம். பங்களூரில் பெரிய செல்வந்தர் இருந்தார். அவரின் வீட்டிற்கு சுவாமி வருவாரென ஆயத்தங்கள் செய்யப்பட்டன. ஒருவரிடம் செருப்புத் தொழிலாளி என்ன விசேடம்? அந்த வீட்டில் பெரிய அமளி என்று கேட்க, சுவாமி அங்கே இன்று வருவார் எனத் தெரிவித்தார்.

ஆமாம், சுவாமி செல்வந்தர் வீட்டிற்குத்தானே போவார். எங்கள் வீடுகளுக்கு ஏன் வரப்போகிறார் என்று மனதுள் நினைத்தான். செருப்புத் தைப்பிக்க வந்தவருக்கும் சொன்னான். காரில் வந்தபோது சுவாமி செல்வந்தரின்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டைத் தாண்டி சிறிது தூரம் காரை ஓட்டச் சொன்னார். அங்கே செருப்புத் தைக்கும் கொட்டிலுக்குக் கிட்ட நிற்பாட்டி தொழிலாளியைப் பார்த்து "உங்கட வீட்டிற்குத்தான் போகிறேன். என்னுடன் வந்து வழியைக் காட்டு" என்றார். அவன் மிகவும் பணிவுடன் காரில் உட்கார்ந்தான். வீட்டை அடைந்ததும் சுவாமி கீழே இறங்கி அவனது வீட்டிற்குள் புகுந்தார். அது மிகவும் சிறிய குடிசை. சேரியில் அமைந்து ள்ளது. எங்கும் துர்நாற்றம், தொழிலாளி ஓடிப்போய் கிளிந்த பாயை விரித்தான். தனது வீட்டுக் காரரைக் (மனைவியுடன் 4 பெண்பிள்ளைகள்) கூப்பிட்டு சுவாமியை வரவேற்கச் சொன்னான். சுவாமி தனக்கு ஏதாவது சாப்பிடத் தருமாறு கேட்டார். தொழிலாளி இருப்பதோ பழஞ்சோறும், கஞ்சியுமே. எவ்வாறு சுவாமிக்குத் தருவது என்று பரிதாபத்துடன் சொன்னார். சுவாமி எல்லோரையும் இருக்கச் சொல்லி சோற்றைப் பிசைந்து உருட்டி எல்லோ ருக்கும் பகிர்ந்து கொடுத்து தானும் விழுங்கினார். சுவாமி போகும்போது தான் இதய சுத்தியைத் தான் பார்ப்பதாகச் சொன்னார். "நீ என்னையே நம்பினாய். அதனால் கைவிடமாட்டேன். உனது கஷ்டம் நஷ்டம் எல்லாம் நாளையுடன் நீங்கிவிடும்" என்று ஆசீர்வதித்துச் சென்றார். தொழிலாளி செருப்புகள் உற்பத்தி செய்யும் ஆலையை உண்டாக்கி பணக்காரனாக மாறினார்.

சுவாமியை ஏனைய மகான்கள் என்ன நிலையில் ஏற்றுள்ளார்கள் என்று பார்ப்போம். காஞ்சிப் பெரியவர் எமது வம்சாவளிக் குரு. அவரைத் தரிசிக்க குடும்பமாய் அடிக்கடி செல்வோம். ஒருமுறை சென்றபொழுது (எனக்கு 5 வயதிருக்கும்) மகா பெரியார் எனக்கு ஏன் இன்னும் உபநயனம் செய்யவில்லை என்று கேட்டார். மக்கள் சத்திய சாயி பாடசாலையில் படிக்கிறார்கள். சாயி பாபாவே உபநயனம் செய்வார் என்று கூறினோம். "நீங்கள் நினைத்தபடி நடக்கும்" என்று மகா பெரியவர் கூறினார். நாங்கள் பர்த்திக்குத் திரும்பியதும் சுவாமி உபநயனம் செய்வதற்குத் தயாராகும்படி சொன்னார். வேண்டிய பொருள்கள் யாவும் தானே தருவதாகவும் சொன்னார். எனக்கும் அண்ணனுக்கும் காதிலே காயத்திரி மந்திரம் ஓதி உபநயனத்தைச் சுவாமி முடித்துவைத்தார். பின்பு எங்களை வணங்கச் சொன்னார். எனது இடுப்புத் துணி அவிழ்ந்தபடியால் சரியாக வணங்கமுடியவில்லை. இரண்டுகைகளாலும் வணங்கச் சொல்லி பின்னால் வந்து துணியைப் பிடிக்குமாப் போல் பாசாங்கு செய்து கீழே நழுவவிட்டார். பின் எல்லோருக்கும் சொல்லி நகைத்தார். சுவாமி குழந்தைகளுடன் குழந்தையாக விளையாடுவார். இரண்டு மாதத்திற்குப் பின்பு பாடசாலை விடுதலை தொடங்கியது. காஞ்சி மகா பெரியவரைப் பார்க்கச் சென்றோம். அவர் படுக்கையில் படுத்திருந்தார். அம்மா, அப்பா உள்ளே சென்றார்கள். நான் உள்ளே சென்றபொழுது மகா பெரியவர் உடனே உட்கார்ந்து கண்ணை மூடி, வாயால் "டிக் டிக்" என்று ஓசை எழுப்பினார். அம்மா, அப்பாவுக்கு விபூதி கொடுத்தார். வழக்கமாக எனக்குக் கற்கண்டு கொடுப்பார். ஆனால் அன்று கொடுக்கவில்லை. ஏன் கற்கண்டு தரவில்லை யென்று கேட்க "நீ மிகவும் அதிஷ்டக்காரக் குழந்தை. பிரம்மனே பிரம்ம உபதேசம் செய்து உபநயனம் செய்துள்ளார். இதைவிட இந்த ஜென்மத்தில் உனக்கு என்ன வேண்டும். உனக்கு எதுவும் கொடுக்கமாட்டேன்." என்று சொல்லி



அனுப்பிவைத்தார். மகா **பெரியவரே எனது சுவாமியைப் பரப்பிரம்மம்** என்று கூறியுள்ளார்.

இப்போதுள்ள பீடாதிபதியான விஜயேந்திர சரஸ்வதி அவர்களைச் சந்திக்கப் போனோம். அங்கே 4 குடும்பங்கள் சூழ இருந்தார்கள். நானும் போய் கீழே உட்கார்ந்தேன். மகா பெரியவர் நான் சுவாமியின் மாணவன். இப்போது சேவையில் ஈடுபட்டுள்ளார் என்று அங்கே உள்ள வர்களுக்கு அறிமுகம் செய்தார். அங்கே வந்தவர்கள் "சத்தி சாயி பாபாவைப் பற்றிக் கேள்விப் படுகிறோம். நீங்கள் அவரைப் பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளீர்கள்" எனக் கேட்டார்கள். மகா பீடாதிபதி: "நாங்கள் எல்லோரும் தபசிகள். மடாதிபதிகள், அவர் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர். நாம் எனது கலாசாரத்தைப் பின்பற்றி வந்திருக்கிறோம். **அவர் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர்.**" என்று சொன்னார்.

சுவாமி குழந்தைகளிடத்தில் குழந்தை யாகவும் ஆண்களிடத்தில் ஆணாகவும் பெண்களிடத்தில் பெண்ணாகவும் கல்வி மான்களிடத்தில் கல்விமானாகவும் செயற் படுவார். சிலருக்கு இதைப் பார்த்து இவர் மனிதனா? தெய்வமா? என்ற சந்தேகம் எழலாம்.

ஒரு முறை புட்டபர்த்தியில் சர்வதேச இளைஞர் மகாநாடு நடந்தது. என்னுடைய சிநேகிதன் சுவாமியின் பக்தனல்ல. வந்திருந்தான். அவன் என்னிடம் "சுவாமிக்கு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வந்திருப்பது தெரியுமா? நீ தானே அவர் கடவுள் என்கிறாய்? என்று பகிடி மனப் பான்மையுடன் சொன்னான். பிரசாந்தி நிலையத்திற்குள் சுவாமியின் அனுமதி இல்லாது ஒருவரும் வரமுடியாது. ஆகவே நீயும் சுவாமியின் அனுமதியுடன்தான் வந்துள்ளாய் என்று சொன்னேன். சுவாமி எங்கள் பக்கம் வந்ததும் அவனைப் பார்த்து இங்கே வா என்கிறார். அங்குள்ளவர்கள் நானா? நானா? என்று கலக்கமடைய தமிழ்ச்செல்வன் வா என்று கூப்பிட்டார். அவன் சுவாமிக்குக் கிட்ட வந்தான். நீ தமிழ்ச்செல்வனா? என்று சுவாமி கேட்க, "ஆமாம் சார்" என்று சொன்னான். சுவாமியை சுவாமியென்று ஏற்கவில்லை. "நீ வந்தது எனக்குத் தெரியுமே, வேறு ஏதாவது சொல்லவேண்டுமா?" என்று சுவாமி கேட்டார். என்னைப் பற்றி பிரசாந் உங்களுக்குச் சொல்லியிருப்பாரே என்ற சந்தேகம் சார் என்றான். அவனுக்கும் உனக்கும் தெரியாததைச் சொல்லவா? என்று சுவாமி கேட்டார். "நீ இரண்டு மாதத்தில் இறந்துவிடுவாய்" என்று சுவாமி சொல்ல "என்ன ஆதாரம்" என்று கேட்டான். சுவாமி கையை அசைத்து ஒரு X -ray படம் எடுத்து அவனின் இருதயம் நோய் வாய்ப்பட்டிருப் பதைக் காட்டினார்.

மண்டபத்தில் இருந்த இருதய வியாதி நிபுணனைக் கூப்பிட்டு X - ray ஐ பற்றி அந்த மாணவனுக்குச் சொல்லச் சொன்னார். டாக்டர் இரண்டு மாதத்திற்குள்ளே இறந்து விடுவாரென்று சொன்னார். இந்தப் பையன் விக்கி விக்கி அழத்தொடங்கினான். இப்ப என்னை நம்புகிறாயா? அவன் தான் என்ன செய்ய வேண்டு மென்று கேட்டான். "நீங்கள் தான் பார்த்துக்கொள்ளவேண்டும்" என்றான். சுவாமி விபூதி சிருஷ்டித்து அவனைச் சாப்பிடச் சொன்னார்.

சில நிமிடங்கள் கழித்து இன்னொரு குட்டி X - ray எடுத்தார். அதை டாக்டரிடம் காட்டினார். டாக்டர் அதிசயித்து இப்போ இருதயம் நல்லா இருக்கிறது என்றார். அவன் அப்போது "இப்போது நான் பரிபூரணமாக கடவுள்தான் என்று நம்புகிறேன் சுவாமி" என்றான். நம்பிக்கையிருந்தால் நல்லது நடக்கும் "உனக்கு ஆயுள் தரப்பட்டுள்ளது" என்று சுவாமி சொன்னார். சுவாமியே கூப்பிட்டுத் தன்னில் முழு நம்பிக்கை வரச்செய்தார். இதுதான் நமது அன்புத் தெய்வம்.




எப்படித் தனது அடியார்களைக் கவனிப்பாரென எனது அனுபவம் ஒன்றைச் சொல்கிறேன். சுவாமியின் வேலையாக அபுதாபி (Abu Dhabi) என்ற மத்திய கிழக்கு நாட்டிற்குப் போயிருந்தேன். என்னை ஒரு ஹோட்டலில் தங்கவைத்தார்கள். எனக்குத் தந்த அறை தனிமையான இடம். ஒரு காவல்காரனும் இருந்தார். அவனுக்கு 70 வயது. அவர் இரவு 10.00 மணிக்குத் தூங்கிவிடுவார். எனக்கு சைவ உணவுமில்லை. குடிக்கப் பசுப்பாலுமில்லை. எனக்குக் கவலையாயிருந்தது. சுவாமியிடம் முறையிட்டேன். நான் அடுத்தநாள் பயிற்சி முகாமிற்குப் போனேன். சாப்பிட்டேனா என்று கேட்க, ஊர் திரும்பும்வரை விரதம் என்று சொன்னேன். நான் அறைக்குத் திரும்பி வந்தபோது மேசையில் 4 அடுக்குள்ள சாப்பாடு காவும் பாத்திரம் இருந்தது. அதில் இட்டலி, சாம்பார், பசுப்பால் எல்லாம் இருந்தது. யார் வைத்தார்கள்? இப்படியே ஒவ்வொருநாளும் நல்ல சாப்பாடு எங்கிருந்தோ வந்தது. இரண்டாவது நாள் காவல்காரன் "நீர் என்ன மந்திரவாதியா? யாரோ ஒருவர் மின்னல் வேகத்தில் உள்ளே வந்து சாப்பாட்டை வைத்துவிட்டு உடனேயே போய் விடுகிறார். பூட்டியிருக்கும் கதவு வழியே வந்துபோகிறாரா?" என்று கேட்டேன். தெரியாதென்று சொன்னாலும் சுவாமியின் வேலையென்று எனக்குத் தெரியும். மூன்றாம் நாள் இரவு சத்தம் போட்டான். போய்ப் பார்த்தபொழுது "அந்த ஆள் எனது வாயை மூடி தலையில் இறுக்கிக்குட்டி கடமைநேரத்தில் நித்திரையா என்று பேசிவிட்டுப் போயுள்ளார்" இப்படி நீள அங்கி அணிந்திருந்தார்." என்று முறையிட்டான். எனக்கு சுவாமியின் விளையாட்டுத்தான் என்று தெரிந்தது. போன பயிற்சிப் பட்டறை முடிந்து புட்டபர்த்திக்கு வந்திட்டேன். தரிசனத்தின்போது சுவாமி எப்ப வந்தாய்? சாப்பாடு எப்படி? காவலாளி என்ன சொன்னான்? என்றெல்லாம் கேட்டார். "உன்னை அனுப்பிவிட்டு நான் வருத்தப்பட வேண்டி யிருந்தது." என்று சுவாமி சொன்னார்.

நான் ஊதியம் இல்லாமல் ஊழியம் செய்கிறேன். சுவாமியே ஏன் உன்னுடைய செலவிற்கு சிறு தொகையாவது சம்பளமாகப் பெற்றுக்கொள்ளலாமே என்று பல தடவை கேட்டபோதும் எனக்கு ஒரு ஊதியமும் வேண்டாம். சுவாமிதான் வேண்டும் என்பேன். அவர் என்னைத் தன் உள்ளங்கைகளில் வைத்திருக்கிறார். நாம் சேவை செய்தால் எமது கர்மம் அழியும். நாங்கள் சாயி பக்தராக இருக்கவேண்டுமாகில் ஒரு தப்பும் செய்யப்படாது. நாங்கள் சேவை செய்தால் அதன்புகழும் பலனும் சுவாமியையே சாரும். நாங்கள் பூச்சியங்கள். கடவுள் என்ற ஒன்றை முன்னால் வைத்தால் பூச்சியத்தின் மதிப்புப் பெருகும்.

குடும்பத்தையும் சேவையையும் 50:50 ஆகப் பிரிக்க வேண்டும். ஒன்றை ஒன்றுக்காகக் கைவிடவேண்டாம். நேரம் வீணானால் வாழ்க்கையே வீணாகிவிடும். ஒருமுறை சுவாமி ராமபிரம்மம் அவர்களைக் கூப்பிட்டார். அவருடைய கையிலிருந்த நீர்ச் சாடியை கொண்டுபோய் வைத்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். சுவாமி கதைக்கவில்லை. ஏன் சுவாமி கதைக்க வில்லையென்று கேட்டபொழுது தான் கூப்பிட்டதும் ஏன் வரவில்லையென்று கேட்டார். போன நேரம் திரும்பிவராது. இளமையில் வேலை செய்யவேண்டும். சுவாமி தரும் சந்தர்ப்பங்களையெல்லாம் பயன்படுத்தவேண்டும்.

கிருஷ்ண பரமாத்மாவுக்கு பஞ்சபாண்டவர்கள் சேவை செய்தார்கள். இராமபிரானுக்கு சகோதரர்கள் இருந்தார்கள். இயேசு பிரானுக்கு சீடர்கள் இருந்தார்கள். எனக்கோ எனது பக்தர்களும் மாணவர்களும்தான் உள்ளார்கள் என்று சுவாமி சொல்லியுள்ளார். சுவாமி தனது உடலை நீத்தாலும் எப்போதும் பக்தர்களைப் பற்றிய சிந்தனையிலேயே இருப்பேன் என்றார்.

என்னை யாராவது உரை நிகழ்த்தக் கேட்டால் போகவா விடவா என்று சுவாமியிடம் கேட்பேன். சுவாமியே என்ன பேசவேண்டுமென்றும் சொல்லித் தருவார். முடிந்ததும். அங்கே நடந்ததெல்லாம் சொல்லுவார். சுவாமி அங்கேயும் இருப்பார்.

சுவாமி நேரம் செல்லச் சிலவேளைகளில் வந்தால், எங்கே போனேன் என்று தெரியுமா என்று கேட்பார். சில நேரத்திற்கு பின்பு U.K. கனடா போய் வந்தேன் என்பார். நாங்கள் என்ன ஆதாரம் என்று நினைத்தவுடனேயே, விமானப் பயணச் சீட்டு முதலியன வகுத்துக் காட்டுவார்.

சுவாமி பகலில் தூங்குவதில்லை. இரவில் அறையில் நடந்து திரிவார். சாப்பிடுவதோ மிகவும் கொஞ்சம். சுவாமி சாப்பிட்ட பிரசாதத்திற்காக நாம் காத்திருப்போம். கடிதங்கள் சுவாமி எடுக்கிறார். எல்லாவற்றையும் வாசிப்பாரா என்பதில் சிலருக்குச் சந்தேகம் எழும். ஒரு மாணவன் 10விதமான தனக்குத் தேவையானவற்றை எழுதி சுவாமி வந்தபோது கொடுத்தான். சுவாமி உடனே எல்லாம் எழுதினாயா? என்று கேட்டு, முக்கிய ஒன்றைவிட்டு விட்டாய். உனது தாயார் வீடு விற்பதற்காகச் சுவாமியிடம் கேட்கச் சொன்னார். நீ மறந்துவிட்டாயே என்றார். நான் கடிதம் வாங்க முந்தியே என்ன எழுதப் போகிறீர்கள். என்ன எழுதியுள்ளீர்கள் எல்லாம் எனக்குத் தெரியும். சுவாமியை விட்டுவிட்டு ஒரு கணமேனும் எங்களால் இருக்கமுடியாது. அவர் இப்போது அருவ நிலையில் எங்கும் வியாபித்திருக்கிறார்.

இப்போது சமாதியைப் பார்க்கும்போது சுவாமி ஸ்தூல நிலையில் இல்லையே என்ற உணர்வு வரும். ஆனால் அவர் எங்கும் நிறைந்துள்ளார். சுவாமி போல இன்னொரு அவதாரத்தைப் பார்க்கமுடியாது. நாம் அவருடன் நேரிலே நெருங்கப் பழகிவிட்டோம். சுவாமியினுடைய செய்தியைப் பரப்ப வேண்டும். சுவாமியின் அனுக்கிரகம் இருந்தால் உங்கள் முன்னி லையில் திரும்பவும் பேசுவேன்.

ஜெய்சாயிராம்.

**04.05.2018**

ஓம் ஸ்ரீ சாயிராம்.

ஒருமுறை திருவண்ணாமலைக்குப் போயிருந்தோம். அங்கே அண்ணாமலை ஆச்சிரமத்திற்கு முன்பாக இன்னொரு ஆச்சிரமம். அங்கே யோகராம் சுரத்குமார் என்ற ஞானி வசிக்கிறார். அவரோ குளிக்காமல் ஊத்தை உடம்புடன் மயிர் முடிச்சு முடிச்சாக இருந்தது. சுருட்டும் குடிப்பார். இவரைத் தரிசிக்கவேண்டும் என்ற அம்மாவைக் கடிந்தேன். அவர் வெளியில் வந்தால் நீங்கள் கும்பிடுங்க. நான் கும்பிட மாட்டேன் என்று அம்மாவிடம் சொன்னேன். அண்ணா, அப்பா, அம்மா மூவரும் ஞானி வெளியே வந்தபோது கும்பிட்டார்கள். அவர் நேராக நான் நிற்கும் இடத்திற்கு வந்தார். அவர் "சாயி ஷியாம் என்ன செய்கிறார்?" என்று கேட்டார். நாம் அவரை சாயிராம் என்றுதான் சொல்வோம். சாயி ஷியாம் என்று சொல்வதில்லை என்றேன். அவரின் லீலைகளைப் பார்த்தால் அவர் கிருஷ்ணர் மாதிரியல்லவா, இராமர் மாதிரி இல்லையே என்று ஞானி சொன்னார். நானும் உடனே விழுந்து கும்பிட்டேன்.


நாம் எல்லோரும் திருச்செந்தூரி லுள்ள நாமக்கல் என்ற இடத்தில் அர்த்த நாரீஸ்வரர் ஆலயம் உண்டு. அங்கே போய்க் கும்பிடச் சென்றோம். போய்ச் சேரும்போது பி.ப. 3.00 மணியிருக்கும். 4.00 மணிக்கே கதவு திறக்கப்பட்டது. மூலஸ்தானத்திலுள்ள விக்கிர கத்தை எல்லோரும் வணங்கினோம். எனக்கு அங்கே சுவாமி இடுப்பில் கைவைத்து அபயம் தரும் ரூபமே தெரிந்தது. மிகவும் உன்னிப் பாகத் திரும்பத் திரும்பப் பார்த்தேன். சுவாமியின் காட்சிதான். மற்றையவர்களைத் தரிசனம் எப்படியென்று கேட்டேன். எல்லோரும் அர்த்தநாரீஸ்வரரின் தரிசனம் அழகாகக் கிடைத்தது என்றார்கள். ஏன் சுவாமி இங்கு வந்தார்? நாங்கள் புட்டபர்த்திக்குச் சென்றோம். நான் மாணவர்களுடன் தரிசனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்காக இருந்தேன். சுவாமி நேரே வந்தார். எனக்கு முன்னால் நின்று பாதநமஸ்காரம் எடுக்கச் சொன்னார். குனிந்து பார்த்தபோது பாதங்களைக் காணவில்லை. மறுதரம் பார்த்தேன். பாதங்கள் இல்லை. சுவாமியிடம் சொன்னேன். பாதங்கள் இல்லாமல் தான் எப்படி நிற்க முடியுமென்று சொல்லி அருகில் இருந்த மாணவரைத் தனது பாதங்கள் தெரிகிறதா எனக் கேட்டார். அம் மாணவன் நன்றாகத் தெரிகிறது என்றான். சுவாமி இவனுக்கு கண்ணில் கற்றராக்ட் போல இவனுக்குப் பாதங்கள் தெரியவில்லையாமே என்று அங்கிருந்த கண்வைத்தியரைக் கூப்பிட்டு என் கண்களைப் பரிசோதிக்கச் சொன்னார். என் கண்களில் ஒரு குறையு மில்லை என்று டாக்டருக்குச் சொன்னேன். எனக்கு அப்போது 18 வயதுதான். எப்படி கண்புரை வியாதி வரும் என்று நான் நினைத்தேன். டாக்டர் கண்ணில் ஒரு பிழையு மில்லையென்று சுவாமியிடம் சொன்னார். திரும்பவும் பாதநமஸ்காரம் எடுக்கச் சொன்னார். பாதங்களைக் காணவில்லை. அங்கியைக் கொஞ்சம் மேலே தூக்கிப் பார்க்கச் சொன்னார். அப்போது ஒரு காலில் தண்டமும் மறுகாலில் கொலுசு, மெட்டி முதலியன அணிந்திருந்தார். நமஸ்காரம் செய்தேன். அங்கேயும் பார்த்தாயா? அதுவும் நானே என்று சொல்லிவிட்டு நகர்ந்தார். நடக்கும் போது சதங்கைஒலி கேட்டது. நான் தான் எல்லா ரூபங்கள் என்று காட்டியுள்ளார். எமது தெய்வம் சர்வதர்ம சொரூபம்.

எமக்குத் தெரிந்த மலையாளக் குடும்பம் இருந்தது. அவர்களின் மகன் எனது வகுப்பு மாணவன். எனது சிநேகிதனுமாவான். அவர்கள் கிருஷ்ணரைத்தான் வழிபடுவார்கள். நாங்கள் ஏன் மனித உருவில் இருக்கும் ஒருவரை வணங்குகிறோம் என்று விளங்கவில்லை. எமது வீட்டில் பஜனை நடந்தாலும் கலந்துகொள்ளமாட்டார்கள். அந்த அம்மாவிற்குக் கனவில் ஒருவர் வந்து "நான் புட்டபர்த்தியிலிருந்து கோயம்பத்



தூருக்கு வந்துள்ளேன். என்னிடம் பைசா இல்லை. எனக்கு 250 ரூபாய் கொடுப்பாயா? புட்டபர்த்திக்கு வரும்போது நான் தந்திடுவேன்" என்று கேட்டார். அம்மாவும் யோசித்துவிட்டு பணத்தைக் கொடுத்தார். அவர் போகும்போது கைகளைப் பின்னால் கட்டி நீள அங்கி அணிந்து சென்றதை அவதானித்தார்.

அவர் தனது மகனை எங்கள் வீட்டிற்கு வரச்சொல்லி எங்கள் வீட்டில் வந்திருந்தார். அங்கே சிவரில் சுவாமியின் பல்வேறு படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. அவற்றுள் ஒன்று கனவில் வந்த அந்த உருவம் மாதிரி இருந்தது. அந்த அம்மா எனது அம்மாவைக் கூப்பிட்டு நடந்ததைச் சொல்லி எங்களுடன் புட்டபர்த்திக்குச் செல்லவேண்டுமென்று சொன்னார். நாமெல்லோரும் புட்டபர்த்திக்குச் சென்றோம். சுவாமி தரிசனத்தின்போது அந்த அம்மாவை நோக்கிச் சென்றார். அவர் சிறுபிள்ளைக் கிருஷ்ணராக குழலுடனும் கிரீடத்துடனும் ஓடிவருவதைக் கண்டார். அதில் பிரமித்துக் கொண்டிருக்கும் போது சுவாமி முன்னால் நின்று தோளில் தட்டினார். அவர் உடனே " கிருஷ்ணரைக் கண்டேன், கிருஷ்ணரைக் கண்டேன்" என்று உரக்கச் சொன்னார். சுவாமியிடம் தனது தப்பான எண்ணத்திற்கு மன்னிப்புக்கேட்டு சுவாமி தான் கிருஷ்ணரும் என்று சொன்னார். சுவாமி கையை அசைத்து தான் கனவில் வாங்கிய 250 ரூபாயைத் திருப்பிக் கொடுத்தார். சுவாமி இந்த அம்மாவுடன் மலையாளத்தில் கதைத்தார். கிருஷ்ணரும் எங்கள் சுவாமியேதான்.

ஒரு நாள் மாணவன் ஒருவன் பிந்திப் போகாமலிருக்க அவசர அவசரமாகப் புறப்பட்டு தரிசனத்திற்காக வந்திருந்தான். சுவாமி அவனிடம் போய் நீ வரும் பொழுது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைப்பை சரியாக மூடவில்லை. போய் பூட்டிவிட்டு வா என்றார். மாணவன் போய்ப் பார்த்தால் வாளியிலும் நீர் நிரம்பி வெளியே ஓடிக்கொண்டிருந்தது. அவன் இறுக்கிப் பூட்டி விட்டு திரும்பி வந்தான். சுவாமி அவனிடம், மிகவும் இறுக்கமாக பைப்பை மூடிவிட்டாய். திறப்பது கஷ்டமாயிருக்கப் போகிறது என்று சொன்னார். இது சுவாமியின் எங்கும் உள்ளவர், எல்லாம் அறிந்தவர் என்பதை விளக்குகிறது.

எங்களுக்கு விடுதியில் உணவில் பன்னீர் போடுவது ஒரே ஒரு கரண்டி மட்டுமே. அதில் எங்களுக்குச் சரியான விருப்பம். ஒரு மாணவன் உணவுத்தட்டை சுவாமியின் படத்திற்கு முன்னால் கொண்டு போய் எங்களுக்குக் கூட பன்னீர் தரவேண்டும் என்று பிரார்த்தித்து விட்டு சாப்பிட்டான். பின்னேரம் தரிசனத்திற்குச் சென்றோம். சுவாமி இந்த மாணவனைக் கூப்பிட்டு, விடுதி வார்டனைக் கூட்டிவரச் சொன்னார். வார்டனும் ஓடிவந்து சுவாமி என்று பணிவுடன் முழங்காலில் இருந்தார். சுவாமி "ஏன் என்னுடைய பையன்களுக்கு போதியளவு சாப்பாடு கொடுப்பதில்லை. போதுமான அளவு கொடுக்கவேண்டும். நான் எல்லாம் பார்த்துக்கொள்வேன். தரிசனம் முடிந்து எல்லோரும் விடுதிக்கு வந்தோம். வார்டன் மாணவனைக் கூப்பிட்டு "ஏதாவது குறையிருந்தால் என்னிடம் நேரடியாகச் சொல்லலாமே, ஏன் போய் சுவாமியிடம் சொன்னாய்?" என்று கேட்டார். மாணவன் சொன்னான் "சேர் நான் அவரது படத்திற்கு முன் தான் சொன்னேன்" என்றான். சரி இனிமேல் படத்திற்கு முன்பும் சொல்ல வேண்டாம் என்று சொல்லி அனுப்பினார். எமது பிரார்த்தனையைக் கேட்கிறார். எமது தேவைகளைக் கவனிக்கிறார் எமது தெய்வம்.

நான் பொறியியல் கல்லூரியில் படிக்கும்போது சகமாணவன் ஒருவன் சுவாமி மீது ஒரு நம்பிக்கையுமில்லை. ஆனாலும் என்னுடன் பர்த்திக்கு வந்தான். அவன் சுவாமியின் தரிசனத்திற்குப் போகாமல் சுற்றித் திரிந்து கடைகளில் கொண்டுவந்த பணம் முடியும் வரை சாமான்களை வாங்கினான். நாங்கள் புறப்படுவதற்கு முதல்நாள் அவனைத் தரிசனத்திற்கு வரும்படி வற்புறுத்தினேன். என்னிடம் அவரில் நம்பிக்கை வருவதற்கு நான் எனக்கு வேண்டியதைக் கடிதத்தில் எழுதிக் கொடுப்பேன். அதைச் செய்தாரேயானால் கடவுள் என்று ஏற்றுக் கொள்வேன் என்று சொன்னான். கடிதமும் எழுதி தரிசனத்திற்குப் போனோம். நான் முதல் வரிசையில் இருந்தேன். அவன் பின் வரிசையில் இருந்தான். சுவாமி வந்தார். இவன் கடிதத்தை நீட்டினான். சுவாமி எடுக்கவில்லை. "இவர் என்ன கடவுளா? கடிதத்தை நீட்டினாலும் எடுக்கமாட்டாராம்" என்று சொல்லிப் புறுபுறுத்தான். சுவாமி தரிசனம் முடிந்து நேர்காணல்கள் வேலையையும் முடித்துவிட்டு திரும்பவும் தரிசனம் தந்தார். இம்முறை நேரே வந்து அந்த மாணவனின் கடிதத்தை வாங்கி உடனே அவனது மடியில் போட்டார். அவன் இன்னும் கோபங்கொண்டு கடிதத்தை வாசிக்கவுமில்லை, எறிந்து விட்டுப் போகிறாரே என்று சொன்னான். அப்போது அந்தக் கடித உறையிலிருந்து ஒரு ரூபா நாணயம் விழுந்தது. "நீ என்ன கடவுளுடன் சேட்டை விடுகிறாயா? பணம் கொடுத்துப் பார்க்கிறாயா? என்று ஏசிவிட்டு கடிதத்தை திறந்து பார்க்கச் சொன்னேன். திறந்தால் உள்ளே ஆயிரம் ரூபாய் நோட்டு இருந்தது. மாணவனுக்கு தூக்கிவாரிப் போட்டது. அவன் கடிதத்தில் 1000 ரூபாயும் ஒரு ரூபா நாணயமும்தான் கேட்டு எழுதியிருந்தான். வாசிக்காமல் இவருக்கு எல்லாம் தெரியும். கேட்டதையும் கொடுத்துவிட்டார் என்று அழுது கொண்டு சொன்னான். கடிதம் எழுதத் தொடங்கும் பொழுதே சுவாமிக்குத் தெரிந்து விடும்.

புட்டபர்த்தியில் மாநாடு நடந்தது. நாங்கள் சேவையிலீடுபட்டோம். எனது சக மாணவனும் வந்தான். அவனுக்கு யஜுர் மந்திரில் நடுவிலே சேவை கொடுக்கப் பட்டது. அங்குள்ள கம்பளத்தைத் துப்புரவு செய்து அருகில் உள்ள பூச் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றி சுவாமி வரும்பொழுது பணிவாக இருக்கவேண்டும் என்று சொல்லிக் கொடுக்கப்பட்டது. அவன் தான் கூலி வேலை செய்ய வரவில்லையென்று மனமில்லாமல் சேவையிலீடுபட்டான். சுவாமி என்னிடம் "நீ அவனுக்கு ஒன்றும் சொல்லவேண்டாம்" என்று சொன்னார். கடைசிநாள், சுவாமி அங்கே வந்த IT கம்பனி உயர் அதிகாரியைக் கூப்பிட்டு இந்தப் பையனின் விவரங்களை எடுக்கச் சொன்னார். இவனைக் கூப்பிட்டு உனக்கு எவ்வளவு சம்பளம் வேண்டும். மௌனமாயிருக்க உயர் அதிகாரியிடம் மாதம் ஒரு லட்சம் கொடுப்பாயா? என்று கேட்க தாங்கள் ஒன்றரை லட்சம் கொடுப்போம் என்றார். அப்போ கொடு என்று சுவாமி சொன்னார். சேவை முடிந்து போகும்வேளை சுவாமி ஒரு கோவைகள் வைக்கும் அழகான பை ஒன்றைக் கொடுத்து இது உனது ஐந்து சகோதரிகளையும் திருமணம் செய்துவைக்க உதவும் என்றார். திருமணங்கள் நன்றே நிறைவேறின. இவனுக்கும் உத்தியோக உயர்வு கிடைத்தது. புட்டபர்த்திக்கு வந்தார். தரிசனம் கிடைத்தது. சுவாமி நேரடியாகக் கதைக்கவில்லை. கொஞ்சம் தள்ளிப்போய் திரும்பிப் பார்த்து அவனுடைய தந்தை தனது முதல் அவதாரத்தில் ஒருவேளை உணவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தார். அக்கடனை தான் தீர்த்து விட்டதாகவும் எப்போதும் பக்தர்களைக் கவனிப்பதாகவும் சொல்லிச் சென்றார். நாம் செய்யும் சிறிய நற்செயலுக்கு பன்மடங்கு மேலாகத் தெய்வம் செய்யும்.

ஒரு வெளிநாட்டவருக்கு சுவாமி மோதிரம் சிருஷ்டித்துக் கொடுத்தார். அவர் அதைத் தனது நாட்டில் பல பரிசோத னைகளுக்கு உட்படுத்தியும் உண்மையான பவுணா? செயற்கைப் பவுணா? என்று அறியமுடியவில்லை. சுவாமி அவரை ஒருநாள் கூப்பிட்டு நான் தருவதெல்லாம் சாதாரண நகைக் கடையிலிருந்து வருவதல்ல. தெய்வ லோகத்திலிருந்து விரலுக்கு சரியானதாக செய்யப்பட்டு வருவது என்று சொன்னார்.

இன்னொரு வெளிநாட்டவர், சுவாமியின் தலைமயிர் இயற்கையா? செயற்கையா? என அறிய ஆவல் கொண்டார். சுவாமி தனது தலைமயிரைப் பிடித்துப் பார்க்கச் சொன்னார். இயற்கையான மயிர் தான் என்று அறிந்ததும் சுவாமி இன்னும் உன்னிப்பாகக் கவனிக்கச் சொன்னார். அப்போது தலையிலே முழுப் பிரபஞ்சமும் தெரிந்தது. முழுப் பிரபஞ்சமும் எமது தெய்வத்தின் தலையிலேயே உள்ளது.

சுவாமிக்குத் தேவையானதை அவருடனிருந்து சேவை செய்பவர் சத்தியாஜித் என்பவராவார். ஒருநாள் இருவரும் அறையில் தூங்கும்பொழுது சுவாமி கட்டிலில் இல்லாததை உணர்ந்தார். இரண்டு மணித்தியாலம் சென்றுவிட்டது. பின்பு பார்த்தால் சுவாமி சேலையுடனும் விரித்த தலை மயிருடனும் கொலுசு, மெட்டி எல்லாவற்றுடனும் உறங்குவதைக் கண்டார். மௌனமாக இருந்தார். அடுத்த நாள் காலையுணவு பரிமாறும்பொழுது சுவாமி, சுவாமி என்று மூன்றுதடவை ஆரம்பிக்க, ஒன்றும் கதையாதே என்று சுவாமி சொன்னார். பின்பு நேற்றிரவு நடந்ததைக் கேட்கிறாயா?




அது, ஒரு பக்தன் கடைசித் தறுவாயில் காமாட்சி அம்மனின் காட்சி வேண்டு மென்று பிரார்த்தித்தான். நான் போய்க் காட்சி கொடுத்துப் பின் களைப்பு மிகுதியால் அப்படியே வந்து படுத்துவிட்டேன் என்று சொன்னார்.

M.S. சுப்புலட்சுமி, காஞ்சி மகா பெரியவரிடம் போய் தனது மகளின் நோயைப் பற்றிச் சொல்லி கவலைப்பட்டார். வைத்தியத் தினால் ஒன்றும் செய்யமுடியவில்லை. மூட்டுக்கள் வீங்கி உடலை ஊனப்படுத்தி விட்டன. மகா பெரியார் புட்டபர்த்திக்குப் போ, அவ மகளைக் காப்பாற்றுவார் என்று கூறி அனுப்பினார். புட்டபர்த்தி சென்று பின்பு வைற்பீல்ட்டுக்குப் போனார். சுவாமி இவரைக் கண்டதும் சுபலட்சுமி வா என்று அழைத்தார். ஒரு பாட்டுப் பாடுவியா என்று கேட்டார். சுவாமி எனக்கு இப்போது பாடும் நிலையிலில்லை. மகள் காரில் இருக்கிறார் உடல் ஊனமாகி விட்டது. வைத்தியம் செய்தும் பிரயோசன மில்லை. சுவாமி கார் இருக்கும் இடத்திற்குப் போய் விபூதி சிருஷ்டித்து மகளின் உடலில் பூசினார். எல்லாம் சரியாகிவிடும், போ என்று சொன்னார். மகளும் குணமடைந்தார். ஒரு மாதத்திற்குப் பின்பு காஞ்சி மகா பெரியாரிடம் போனார்கள். புட்ட பர்த்திக்குப் போய் எல்லாம் சுகமா? என்று கேட்டார். எல்லாம் சுகம் மகா பெரியாரே ஒரு விளக்கம் தேவை. நீங்கள் சத்திய சாயி பாபாவை அவர் என்று சொல்லாமல் ஏன் அவவிடம் போ என்று சொன்னீர்கள் என்று கேட்டார். ஓகோ அதுவா?! சத்திய சாயி பாபா சாட்சாத் காமாட்சி. இங்கே இருப்பது காமாட்சி விக்கிரகம். புட்டபர்த்தியிலேயே நடமாடும் காமாட்சியல்லாவா இருக்கிறார். எமது சுவாமியைப் பற்றி ஏனைய மகான்கள் இவர் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவரென சொல்லி யுள்ளார்கள்.

ஒரு முறை காரில் போகும் போது வீதி விபத்தினால் ஒருவன் வீதியில் கிடந்ததைக் கண்டேன். உடனே அவரை காரில் தூக்கிஏற்றி மருத்துவமனைக்குக் கொண்டு சென்று, பொலிஸ் நிலையத்திற்கும் தகவல் கொடுத்து பங்களூரிலுள்ள எனது அறைக்குச் சென்றபோது இரவு ஒரு மணியாகிவிட்டது. எனக்கோ அகோரப் பசி. கடைகளும் பூட்டு, செய்வது அறியாது அறைக்குள் சென்றபொழுது அங்கே தட்டில் சுடச்சுட 4 தோசைகளும் தக்காளிச் சட்னியும் இருந்தது. இதை யார் செய்தது? எம்பெருமான்தான் செய்துள்ளார். நாம் உதவி செய்யும்பொழுது. அவன் எம்மைக் கடவுளாகப் பார்க்கவேண்டும். எமது செயலும் அப்படியே இருக்கவேண்டும். சுவாமி தன்கையில் இன்னும் மா இருப்பதைப் படத்தில் பார் என்றார்.

2003ஆம் ஆண்டு தந்தையார் கோவாவில் வேலை செய்தார். நான் அங்கு விடுமுறைக்குப் போயிருந்தேன். எங்கே சேவை செய்யலாமென்று தேடி 40 நிமிடம் காரில் பயணித்தபின்பு இடத்தைக் கண்டுபித்தேன். ஒருநாள் இரவு போகும்பொழுது தனிமையான இடத்தில் கார் நின்றுவிட்டது. எனது பொறியியல் அறிவைப் பாவித்து எல்லாம் செய்துபார்த்தேன். பகவானிடம் பிரார்த்தித்தேன். சடுதியாக மற்றப் பக்கத்தில் வாகனம் வந்துநின்றது. இறங்கியவர் தான் மோட்டார் போக்குவரத்து வார்டன் என்று சொன்னார். அவர் என்னைக் கீழே இறங்கச் சொல்லி, உள்ளே ஏறி சுவிட்சைப் போட்டவுடன் கார் இயங்கத் தொடங்கியது. அவருக்கு நன்றி கூற ஆயத்தம் செய்ய அவர் மறைந்துவிட்டார். புட்டபர்த்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசனத்தின்போது என்ன கோவாப் பயணம் எப்படி? அந்த வாகனப் போக்குவரத்து ஆள் என்ன சொன்னார்? எல்லாம் சுவாமியின் திருவிளையாடல் என்று சொன்னேன். கடவுள் எந்த ரூபத்திலும் வருவார்.

பிரசாந்தி நிலையத்தில் "சாந்தி பவான்" உள்ளது. பிரமுகர்கள் வந்து தங்குவார்கள். அங்கு பணிபுரியும் ஐயாவுக்கு 98 வயது. அவர் தரிசனத்திற்குப் போகமாட்டார். சேவை சேவை என்று சொல்லி சேவையிலேயே ஈடுபடுவார். சுவாமி இவரைப் பற்றிச் சொல்லுகையில் இந்த ஒரு பக்தன்தான் என்னிடம் ஒன்றும் கேட்பதில்லை. சுவாமியின் செய்தியைப் பின்பற்றவேண்டும்.

ஒருமுறை தரிசனத்தின்போது பக்தன் ஒருவர் சடுதியாக எழும்பிப் போய் ஏதோ அலுவலக வேலை செய்துவிட்டு வந்தார். சுவாமி சொன்னார். அக்காலத்தில் ரிஷிகள் எத்தனையோ வருடங்கள் தவம் இருந்து சில நிமிடங்கள் தெய்வக் காட்சியைப் பெற்றார்கள். நீங்களோ இலேசாக மணித்தியாலக் கணக்கில் தெய்வ தரிசனம் பெறுகிறீர்கள். கடவுள் உங்கள் முன்னிலையில் வந்து நிற்பதை உணர்வதில்லை.

ஒருமுறை எனது சக மாணவனின் தாயார் சிக்கிம் என்ற மாநிலத்தில் சுகமில்லாமல் இருக்கிறார் என்று அம் மாணவனிடம் சொல்லும்படி செய்தி வந்தது. தரிசனத்தின்போது மாணவன் சுவாமியின் கால்களைக் கெட்டியாகப் பிடித்து தாயாரைக் காப்பாற்றும்படி வேண்டினான். சுவாமி தான் பார்க்கிறேன் என்று சொன்னார். பின்பு தரிசனத்தின்போது அம்மா எப்படி என்று சுவாமியிடம் கேட்டான். நீ அம்மாவைப் பார்க்கப் போகிறாயா? எனது கையைப் பார். அங்கே சினிமாப் படம் ஓடுவதுபோல அவரது வீடு, அறைகள் எல்லாம் தெரிந்தன. அம்மா அறையில் இல்லை. சிறிது நேரத்தில் குளியல் அறையிலிருந்து வந்து மகனுடன் கதைத்தார் தாயார். சுவாமியின் படத்தில் சரமாரியாக வந்த விபூதியைச் சாப்பிட்டு சுகமானேன் என்று சொன்னார். இப்ப திருப்தியா? என்று கேட்டு தாயாருக்கு பாதநமஸ்காரம் கொடுத்தார்.

சுப்பிரமணியச் செட்டியாரின் மகள் மூட்டுவாத நோயினால் அவஸ்தைப் பட்டார். சுவாமியிடம் சுகப்படுத்தக் கேட்டபொழுது அவளின் கர்மாஇதனுடன் முடிந்துவிடும், நான் சுகப்படுத்தினால் இன்னொரு ஜென்மம் எடுத்து அனுபவிக்கவேண்டும். செட்டியார் சுவாமி சொன்னபடியே ஆகட்டும் என்றார்.

ஒருமுறை சிங்கப்பூர் போயிருந்தேன். விமான நிலையத்தில் சோதித்தார்கள். சோதிப்பவர் எனது கையில் இருந்த மணிக்கூட்டைப் பார்த்து "நீர் ஒரு சாயி பக்தனா?" என்று கேட்டார். ஆம் என்றதும் உம்மைச் சோதிக்கத் தேவையில்லை. ஏனென்றால் சாயிபாபா பக்தர்கள் ஒருபோதும் பிழை செய்யமாட்டார்கள். அந்த உத்தியோகத்தர் பக்தனல்ல. அவரின் தமையனார் மதுவுக்கு அடிமையாகி வில்லங்கத்தில் மாட்டிக்கொண்டார். சாயி பாபாவினால் உன்னதமானவனாக மாற்றப்பட்டுள் ளாரெனச் சொன்னார். சுவாமி யின் பெயருக்கு மகிமை ஊட்டவேண்டும். களங்கம் ஏற்படுத்தக் கூடாது.



- சுவாமி எப்போதும் நல்லதையே சொல்லி நல்லதையே செய்வார்.
- அவரின் செய்தியைப் பின்பற்றி அவரின் மகிமையை எங்கும் பரப்பவேண்டும்.
- அவரின் சேவைமூலமாகவே அவரின் செய்தியைப் பரப்பலாம்.
- சுவாமி எல்லாம் செய்கிறார். ஆகவே நாம் சேவை செய்யத்தான் வேண்டும்.
- சுவாமிக்காக வாழவேண்டும்.

ஒரு அடி எடுத்துவைத்தால் 10 அடிகள் எடுத்துவைப்பார். சாயி என்று கூப்பிட்டால் ஓய் என்று ஓடிவருவார்.

ஜெய் சாயிராம்

சுவாமி சங்கல்ப்பித்தால் ஸ்ரீ லங்காவுக்கு வருவேன். டாக்டர் சிவகோணேசன், சாயி பிரசாந் அவர்களுக்கு நன்றி கூறுவதை விட சுவாமிக்கு நன்றி கூறவேண்டும் என்றார். மீண்டும் மீண்டும் இவரின் சத்சங்கம் கிடைக்க வேண்டும் என்று சுவாமியிடம் பிரார்த் திப்போம் என்று கூறி முடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி மார்க்கம் - சாயி சமுத்திரம்

சாயி ஆனந்த ஆழ் கடலில் மூழ்கியவர்கள் அள்ளிக்கொண்ட முத்துக் குவியல் சாயி பகவான் சற்குரு சாயி பாபா ஆன்மீக உரையின்பொழுது குறிப்பிடுவார்.

"கூச்சலும் குழப்பமும் கடலின் மேல்மட்டத்தில்தான். அமைதியும் ஆனந்தமும் ஆழ்கடலில்தான்." சாயி என்னும் ஆனந்தக் கடல் "பிரசாந்தி நிலையத்திற்கு", "சாயி நிலையத்திற்கு" சென்று வந்தவர்கள் அள்ளிக் கொண்டு வந்த முத்துக் குவியல். ஆழமாகக் கற்றுக் கொண்ட போதனைகள், நேரில் கண்டு மெய்சிலிர்த்த காட்சிகள், அன்பு நடமாடுவதைக் கண்டோம். அன்பு "சேவை" என்னும் பெயரில் செயல் புரிவதைக் கண்டோம். அந்த அன்பு எங்கும் வியாபித்து விஸ்வரூபம் கொள்வதைக் கண்டோம்.

நாங்களும் அள்ளிக் கொண்ட முத்துக் குவியல்! எல்லா மதங்களும் புனிதமானவை. கடவுள் ஒருவரே! அவருக்கு பல நாமம். எல்லா நாமங்களும் அந்த ஒரே கடவுளின் நாமமே. எவரும் மதம் மாற வேண்டிய அவசியமில்லை. ஒரு கடவுளைத் தவிர வேறு யாரால் இவ்வாறு கூறமுடியும். அவ்வாறாயின் சத்திய சாயியின் அவதாரச் செய்தி என்ன? சாயி மார்க்கம் என்பது புதிய மதமா? புதுமையான மதம். எவரும் மதம் மாறக்கூடாது. நீங்கள் பிறந்த மதம் மிகவும் சிறந்தது. என்று கூறும் அற்புதமதம்.

சாயி என்னும் ஆனந்தக் கடலில் மூழ்கியவர்கள். இந்து சமயத்தில் பிறந்தால் மேலும் சிறந்த இந்து சமயத்தவனாக மாறவேண்டும். ஒரு கிறிஸ்தவன் மேலும் சிறந்த கிறிஸ்தவ சமயத்தவனாக மாறவேண்டும். புத்த சமயத்தில் பிறந்தால் மேலும் சிறந்த புத்த சமயத்வனாக மாற வேண்டும். குருவை (ஆசிரியரை) வணங்கு, மாதா, பிதா (பெற்றோர்) எமது முதற் கடவுள். கண்கண்ட தெய்வம். இந்த முத்துக் குவியலில் மிகவும் கவர்ந்து கொண்டது கடவுள் ஒருவரே. எல்லாமதமும் புனிதமானவை என்பதேயாகும். யார் நீ ? நான் கடவுள். நீயும் கடவுள்தான். கடவுளின் அம்சம். உலகமே கடவுளின் விம்பம். எல்லாம் கடவுள். எனவே கடவுளை மிகவும் வேகமாக நெருங்கிவிட்டோம்.




"எல்லோரிடத்தும் அன்பு வைப்போம்.
எல்லோருக்கும் சேவை செய்வோம்."
எல்லாவற்றையும் கடவுளாகக் காணுகின்ற சாயி முத்துக்குவியல். இந்த அன்பெனும் அமுத மழையில் ஒரு கன்னத்தில் அடிவாங்கியபின் மறுகன்னத்தையும் காட்டுகின்ற உயர்நிலையில் தன்னை மறந்தான். தன் நாமத்தையும் மறந்தான்.

"அவனின்றி அணுவும் அசையாது" என்பதை உணர ஆரம்பித்தான். "அவன் அசைந்தால் அசையும் அகிலமெல்லாம். அறிவால் மனிதா! உன் ஆணவம் பெரிதா! அன்பெனும் அகண்ட ஜோதியில் ஆணவம் பொசுங்கியது. அந்த ஆண்டவனின் அன்பு எல்லாவற்றையும் கவர்ந்திருக்கின்றது. எல்லாம்அன்பு மயம். "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார். அன்பே சிவமாவது யாரும் அறிகிலார். அன்பே சிவம் என்று யாரும் அறிந்த பின்பு அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே!"

இந்த அன்புக் குவியலை எங்கே அடையலாம். பிரசாந்தியில்தான்! மனித குலத்திற்கே பொதுவான இந்த பிரசாந்தி நிலையம்! உலக மக்கள் அனைவரையும் உயர் மனமாற்றம் செய்யவே நிறுவப்பட்டது. இங்கு எல்லோரும் சுவாமியால் அரவணைக்கப்படுகின்றார்கள். நல்லவர்கள் என்று நாங்கள் பார்ப்பவர்களை மட்டுமல்லாமல் தீயவர்கள் என்று நாம் நினைப்பவர்களையும் மட்டுமல்லாமல் தீயவர்கள் என்று நாம் நினைப்பவர்களையும் அன்போடு அரவணைத்து உயர் மனமாற்றம் செய்து நல்வழிகாட்டுகின்றார். இறைவனுக்குத் தெரியாமல் எவரும் எதையும் செய்யவும் முடியாது. மறைக்கவும் முடியாது.

சாயி என்னும் தெய்வீகக் கடலில் அவனருளாலே உட்புகுந்து அள்ளிக்கொண்ட முத்துக்குவியல் இந்து சமயத்தில் அளப்பெரிய பொக்கிஷம் "காயத்திரி மந்திரம்" இந்துவாகப் பிறந்த எனக்கு காயத்திரீ மந்திரம் பற்றித் தெரியாது. சத்திய சாயி பாபாவின் கருணையினால் இன்று உலகம் முழுவதுமே ஓதப்படுகின்றது. அதன் உட்பொருளையும் உணர்ந்து ஓதுகின்றனர். இறைவனின் நாமத்தின் மகிமை அளப்பெரியது. பிரார்த்தனையின் சக்தி அதைவிட உயர்ந்தது.

திரு.வேணுகோபால் அவர்களின் அனுபவத்தைப் பார்ப்போம். "பிரார்த்தனை செய்யுங்கள், சுவாமி வருவார்!" ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதுகளின் நடுவில் நாங்கள் முதன்முதலாக மும்பையிலிருந்து புட்டபர்த்திக்குப் போனோம். அங்கே போனால் சுவாமி பிருந்தாவனுக்குப் (பெங்களூர்) போயிருப்பதாகக் கூறினார்கள். நாங்கள் புதியவர்கள் என்பதால் சுவாமி பெங்களூருவில் சிலகாலம் தங்குவதுண்டு என்பதை அறிந்திருக்கவில்லை. சுவாமி எப்போது திரும்பி வருவார் என்று சேவாதளத் தொண்டரை என் தந்தை கேட்டார். ஒரு மாதம் கூட ஆகலாம். அங்கேயே போய் தரிசியுங்கள் என்று அவர் அறிவுரை கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவுக்கு மிகவும் ஏமாற்றம். "என்ன இது? நாம் மும்பையிலிருந்து வந்திருக்கிறோம்" என்றார். இதுதான் மனித இயல்பு. ஏதோ நாம் மிகவும் பிரயத்தனம் செய்ததாக நாமே நினைத்துக்கொண்டு விடுகிறோம். இன்றைக்கு யோசித்தால் அது அசட்டுத்தனமாகத் தோன்றுகின்றது. அந்த நிலைமை மற்றும் சுவாமியின் மீது அவருக்கு எரிச்சல். பேராசிரியர் கஸ்தூரி என்ற மாபெரும் மனிதர் அங்கே வசிப்பதாகக் கேள்விப் பட்டோம். அப்போது அவர் படுத்த படுக்கையாக இருந்தார். இப்போதிருக்கும் தென்னிந்திய கேண்டீனுக்கு எதிரில் ஓர் அறையில் அவர் இருந்தார். என் தந்தையார் அவர் எழுதிய புத்தகங்களைப் படித்திருந்தார். நாங்கள் எல்லோரும் பேராசிரியர் கஸ்தூரியைப் பார்க்கப் போனோம். "ஐயா, நாங்கள் பாம்பேயிலிருந்து வந்திருக்கிறோம். பகவான் இங்கில்லை. எங்களுக்குப் பெருத்த ஏமாற்றம்"என்று அப்பா கூறினார். "பிரார்த்தனை செய்யுங்கள், யார் கண்டது, சுவாமி உங்கள் பிரார்த்தனையைக் கேட்டு இங்கே வந்து தரிசனம் தரலாம்" என்றார் கஸ்தூரி. நாங்கள் எல்லோரும் சிரித்தோம். வேடிக்கைப் பேச்சாகத்தான் அதை அப்போது எண்ணினோம். ஆசிரமத்துக்கு வெளியே வந்தோம். அந்தக் காலத்தில் என் தந்தையார் விடாமல் சிகரெட் பிடிப்பவராக இருந்தார். ஒருநாளில் 15 பக்கெட்டுகள் கூடப் பிடித்துவிடுவார்! கணேஷ் கேட்டுக்கு எதிரே ஒரு பீடாக் கடை இருந்தது. எங்களுடன் வந்த பிரபாகரனுக்கு வெற்றிலை போடும் பழக்கம் இருந்தது. அவர் விளையாட்டாக என் தந்தையிடம் "சர்மாஜி, பாபா வரும் வரை நீங்கள் சிகரெட் பிடித்துக்கொண்டிருங்கள். நான் பீடா மென்றபடி இருக்கிறேன்" என்று கூறினார். அதற்கு என் தந்தையார், "இப்போது பாபா வரட்டும், நான் சிகரெட் பழக்கத்தையே விட்டுவிடுகிறேன்!" என்றார். கையிலிருந்த சிகரெட்டை வாயில் வைத்து ஒரே ஒரு முறைதான் புகையை இழுத்திருப்பார். 2, 3 நிமிடங்களில் சுவாமியின் சிவப்புக் கார் அங்கே வந்தது!

கோபுரம் கேட்டுக்கு எதிரே சுவாமி காரை நிறுத்தி ஜன்னல் கண்ணாடியைக் கீழிறக்கி எங்களைப் புன்னகையோடு பார்த்து கைகளை உயர்த்தி அபயஹஸ்தமாக ஆசீர்வதித்தார். அப்பாவின் விரல்களிலிருந்து சிகரெட் கீழே விழுந்தது. அவர் சிகரெட்டைத் தொட்டது அதுதான் கடைசித்தடவை. அந்தத் தரிசனம் எத்தனை சக்தி வாய்ந்த தென்றால், அந்தக் கணத்திலிருந்து வாழ்க்கையில் அதற்கு முன்னர் ஒருபோதும் தான் சிகரெட் பிடித்த நினைவுகூட இருக்க வில்லை என்று அப்பா கூறினார். இதுவும் பிரசாந்தி நிலையத்தில் அள்ளிக்கொண்ட சுவாமியின் தர்சன முத்துக் குவியல்.

கேட்டதைக் கொடுப்பவனே கிருஸ்ணா! கிருருஸ்ணா! ஆனால் மனம் கேளாதே, கேளாதே! ஒரு காலத்தில் காஞ்சிபுரத்தில் ஸ்ரீவத்சாங்கர் என்றொரு கிராம நிர்வாகி இருந்தார். அந்தக் கிராமத்தினர் அவரைக் கூரேசர் என்றழைத்தனர். கூரேசர் ராமானுஜா சார்யர் மீது பெருமதிப்பு வைத்திருந்தார். ஸ்ரீராமானுஜரின் சீடராகி அவருக்குச் சேவை செய்வதே கூரேசரின் வாழ் நாள் விருப்பமாக இருந்தது. திடீரென்று ஒருநாள் தனது பதவி, செல்வம், நிலபுலன்களை எல்லாம் துறந்து, ஸ்ரீராமானுஜர் வசித்த ஸ்ரீரங்கத்துக்குப் புறப்பட்டார். கூரேசர், அவருடைய துணைவி யாரான ஆண்டாளும் அவரோடு கிளம்பினாள்.

அடர்ந்த காட்டின் வழியே அவர்கள் போக நேர்ந்தது. "இங்கே கள்ளர்கள் இருப்பார்களோ? என்று மனைவி அவரிடம் பயத்தோடு கேட்டாள். "நம்மிடம் திருடுவதற்கு ஒன்றுமில்லாத போது நாம் ஏன் அஞ்ச வேண்டும்?" என்று கேட்டார் கூரேசர். நடுங்கும் குரலில் அவள், "நீங்கள் வழக்கமாகத் தண்ணீர் பருகும் பொன்னாலான வட்டிலை மட்டும் எடுத்து வந்திருக்கிறேன்" என்றாள் அவள். "அதைக்கொடு, நான் தூர எறிகிறேன்" எனக் கூறி, அதை வாங்கி வீசியெறிந்தார் கூரேசர்.

மூன்று நாள்களுக்குப் பிறகு, இருவரும் ஸ்ரீரங்கத்தை அடைந்தனர். ஸ்ரீரங்கம் கோவிலை அடுத்திருந்த சத்திரம் ஒன்றை அடைந்தனர். பயணம் மிகக் கடினமானதாக இருந்தது. அவர்கள் உணவுகூட எதுவும் கொண்டு வரவில்லை. மனைவியாரின் மடியில் தலை வைத்துக் கூரேசர் படுத்திருந்தார். மனைவி ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள். ரங்க நாதருக்கு நைவேத்தியம் படைப்பதற்கான காலம் வந்ததை அறிவிக்கக் கோவில்மணி அடித்தது. "இங்கே உன் தாசர் பட்டினி கிடக்கிறார், அங்கே நீர் உயர்ந்த உணவை உண்ணத் தயாராகிறீர்! இப்படிச் செய்வது உமக்கே சரியாக இருக்கிறதா? என்று மனதுக்கு ள்ளே அவள் பிரார்த்தித்தாள்.

சற்று நேரத்தில் கோவிலிலிருந்து ஊர்வலமாக ஒரு கூட்டம் சத்திரத்துக்கு வந்தது. மேளதாளத்துடன் பட்டர்களும் பண்டிதர்களும் அணிவகுத்து வந்தனர். அவர்கள் நிவேதனத்தை அவள்முன் வைத்து சத்திரத்திலிருக்கும் என் பிரியத்துக்குரிய பக்தனுக்குக் கொடு என்று ஸ்ரீரங்கநாதரே எமக்கு ஆணையிட்டார் என்று கூறினர். கூரேசர் எழுந்து உட்கார்ந்து சுற்றுமுற்றும் பார்த்தார். இது கனவோ என்று ஆச்சரியப்பட்டார். வகைவகையான சுவையான உணவுகள் தன்முன்னே வைக்கப்பட்டிருப் பதைக் கண்டார்.

எதையும் கேளாதே!

ஆனால் கேட்டுக் கொண்டே இரு: நான் யார், நான் யார்? பிறந்த உடனே குழந்தை, "சோஹம், சோஹம்?" (நான் யார்? நான் யார்?) என்று அழும் மனிதன் உலக விஷயங்களை அறிய ஆவல் கொண்டு செய்தித்தாள்களை விழுந்து விழுந்து படிக்கிறான். ஆனால் தான் யார் என்பதை அறிய முயற்சி செய்வதில்லை. சாக்ரடீஸ் ஒரு கிரேக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவ ஞானி. தன் உடல் எப்படி ஏற்பட்டது. தான் உண்மையில் யார் என்கிற விசாரணையில் அவர் பெரும்பாலும் ஈடுபட்டிருந்தார். ஒருநாள் சாலைவழியே நடந்து போகும்போதும் இதிலேயே அவரது மனம் ஆழ்ந்திருந்தது. அதனால் தவறுதலாக எதிரே வந்த ஓர் அதிகாரியின்மீது மோதிவிட்டார். அவர் கோபமாக, "யார் நீங்கள்?" என்று கேட்டார். தனது தவறுக்கு முதலில் மன்னிப்புக் கேட்டபின், "இத்தனை நாள்களாக "நான் யார்?" என்ற கேள்வியைத்தான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். தயவுசெய்து நீங்களாவது நான் யாரென்பதைச் சொல்லுங்கள் ஐயா" என்று கூறினார் சாக்ரடீஸ். நீயாரென்பதை உனக்கு வேறொருவருமே சொல்லமுடியாது. சாத்திரங்களோ, குருவோ உன் சுயத்தை இன்னதென்று உறுதிப் படுத்த முடியாது. வெளியே தேடினாலும் அதனால் பயன் விளையாது. கூர்ந்து கவனித்தும், சுயவிசாரணை செய்தும்தான் உண்மையைக் கண்டடையவேண்டும். சாயி மார்க்க ஆனந்தக் கடலில் நான் யார்? என்னும் விசாரணை முத்துக் குவியலை அள்ளிக்கொண்டோம்.

நான் யார்?
நான் உடம்பல்ல.
அவ்வாறாயின் நான் யார்? நான் நீயா? பரம் பொருளின் ஒருசிறு துளியா? நான் கடவுளா? கடவுளின் பிரதிவிம்பமா? நான் யார்? விசாரணை! விசாரணை! விசாரணை மூலமே அறிந்து கொள்ள முடியும். இந்த விசாரணைக்கு உறுதுணையாய் நிற்பவை. தியானம், சேவை, நாமஸ்மரணை. எல்லோரும் கடவுளின் அம்சமே என்பதை மனதில் ஆழமாகப் பதித்து, அதுவாக நினைத்து, அன்புடன் பணிசெய்துவா.


பிரசாந்தியில் அள்ளிக்கொண்ட "சுவாமியின்" போதனைகள் என்னும் முத்துக் குவியலை அள்ளிச்சென்று நாமும் பருகி மற்றவர்களுக்கும் ஆனந்தமாகக் கொடுத்து பேரானந்தத்தைப் பெற்று பெருவாழ்வு வாழ சுவாமியின் கருவியாவோம்!

ஓம் ஸ்ரீ சாயிராம்

செ.ஈஸ்வரலிங்கம்,
யாழ்ப்பாணம்.




# பிறவாமை வேண்டும்



**இறைவனிடம் பிரார்த்தனை..........**

- இறைவா! மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்.
- உன்னடி என் மனத்தே என்றும் வழுவாதிருக்க வரம் தர வேண்டும்.
- உன் நாமம் என் நாவில் எப்போதும் ஒலிக்கவேண்டும்.
- எல்லோருக்கும் உதவி செய்பவனாக இருக்கவேண்டும். எடுப்பவனாக இருக்கக்கூடாது.
- பெற்றோரை கண்கண்ட தெய்வமாக மதித்து அவர்களுக்கு இறுதிக் காலம் வரை தொண்டனாக இருக்கவேண்டும்.
- கல்வி அறிவுள்ளவனாக இருக்கவேண்டும்.
- நற்பண்புகள் நிறைந்த நல்ல மனிதனாக வாழவேண்டும்.
- உலகியல் இன்பத்திற்கு அடிமைப்படாதவனாக வாழ வேண்டும்.
- நல்லோர் சேர்க்கை வேண்டும்.
- அடியார்க்கு அடியவனாக இருக்க வேண்டும்.
- மிகவும் பணிவுடன் எல்லோருக்கும் தொண்டு செய்பவனாக இருக்க வேண்டும்.
- தலைவனாக இருக்க ஆசைப்படக் கூடாது.
- தேவையான அளவு பணத்தை நேர்மையாக உழைத்து வாழ வேண்டும்.
- எவருடைய மனமும் புண்படாமல் பேசுபவனாக இருக்க வேண்டும்.
- எல்லா உயிரினங்களையும் நேசிப்பவனாக இருக்கவேண்டும்.

**இறைவா!**

- எல்லாப் பிறவிகளிலும் நல்ல மனிதனாக வாழ வழிநடத்த வேண்டியது உங்களுடைய பொறுப்பே! உங்கள் பாதக் கமலங்களை சரண் அடைகின்றேன்
- எல்லா சோதனைகளையும் வேதனைகளையும் சாதனையாக்க வேண்டும். அது உன் திருவருளாலே வெற்றிகரமாக நிறைவேறும்.
- சாதனையும் உன் திருவருளாலே நிறைவேறும்.

"அவனருளாலே அவன்தாள் வணங்கி"

அவன் இன்றி அணுவும் அசையாது.

"சற்குரு சாயி தேவா உன் பாதம் பணிந்தேன். அன்புகூர்ந்து அருள்மழை பொழியுங்கள்.

ஜெய் சாயிராம்
செ.ஈஸ்வரலிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறங்கள் ஓர் ஐந்துடையாய்



மணிவாசகர் சிவபெருமானை நேரில் தரிசிக்கும் வாய்ப்புப் பெற்றவர். இந்த அனுபவங்களை வைத்து "திருவாசகம் எனும் தேனை" வழங்கியுள்ளார். அவருடைய சிவபுராணத்தில் வரும் ஒரு வர்ணனைதான் "நிறங்களோர் ஐந்துடையாய்" என்பது அந்த ஐந்து நிறங்கள் எவை என்பதை அறியக் கிடைக்கவில்லை.

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா அவர்களின் வரலாறுகளை வாசிக்கும் போது ரஷ்ய நாட்டைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானி பகவான் பாபாவை சந்திக்க வந்த சம்பவம் சொல்லப் படுகிறது. இவர்தான் "கிர்லின் போட்டோகிறாபி" என்ற ஒருவகை கமராவைக் கண்டுபிடித்தவர். இதன்மூலம் ஒரு மனிதனைப் படம் எடுக்கும் போது அவரைச் சுற்றி அவரது சக்திகளையும் உணர்வு வெளிப்பாடுகளையும் படமெடுக்க முடியும்.

அவர் கூறுகிறார், கோபம் ஒரு மனிதனில் அதிகமாக இருந்தால் அவனிடம் சிவப்பு வர்ணம் வெளிப்படுமென்றும் நீல நிறம் வெளிப்பட்டால் ஆழ்ந்த அனபு உள்ளவர் என்றும் (கிருஷ்ணருடைய நிறம்) எல்லா உயிர்களிடமும் அன்பு இருந்தால் செம்மஞ்சள் நிறம் வெளிப்படும் என்றும் வெள்ளை நிறம் தூய்மையைக் குறிக்குமெனவும் கூறியுள்ளார்.

அவர் உலகெங்கும் பிரயாணம் செய்து தனது கமராமூலம் படம் பிடித்து ஞானிகள், துறவிகளின் ஒளிவட்டத்தை ஆராய்ந்தார். அவர்களுடைய ஒளிவட்டங்கள் இரண்டு அல்லது மூன்று அங்குலம் வெளிப்போந்து தெரிந்தது. பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவைப் பற்றி ஒருவர் தெரிவித்தார். அவரையும் ஆராயலாம் என புட்டபர்த்தி வந்து சேர்ந்தார். சுவாமியை கண்டமாத்திரத்தே அவர் அசந்து போய்விட்டார். வெற்றுக் கண்களாலேயே அவருடைய ஒளி வட்டம் தெளிவாகத் தெரிந்தது. அன்பைக் குறிக்கும் செம்மஞ்சள் ஒளிக்கதிர்கள் பல அடிதூரத்திற்கு விரிந்து இருந்தது. ஆழ்ந்த அன்பைக் குறிக்கும் நீல நிறம் வானம் வரை பரந்து இருந்தது. கட்டடங்களையும் ஊடுருவிப் பரந்தது. வெள்ளை ஒளி தூய்மையைக் குறிக்கிறது. இது பிரசாந்தி நிலையம் முழுவதும் பரவி இருந்தது. அதைத்தவிர வெள்ளிநிறம், பொன்நிறம் ஆகிய ஐந்து நிறங்கள் அவரிடம் இருந்து வெளிப்பட்டதாகவும் வெள்ளி, பொன்நிறக் கதிர்களுக்கான விளக்கம் தனக்குத் தெரியவில்லை என்றும் கூறியுள்ளார்.

ஜெய் சாயிராம்

S.R. சரவணபவன்
தாவடி

## தேசிய சேவைத் திட்டம்




**சத்திய சாயி முதியோர் இல்லம் - மீகொட - கொழும்பு**

**இது 32 கி.மீ கொழும்பிலிருந்து அமைந்துள்ளது. ஆரம்பத்தில் 20 பெண்களும் 20 ஆண்களும் பராமரிப்பதென திட்டமிடப்பட்டு கட்டிடத்திற்கான பூமி பூஜை 28.05.2015 இல் மேற்கொள்ளப்பட்டது. இந்த முதியோர் இல்ல கட்டிடம் 2017.04.30 திகதியன்று இலங்கை அரசின் சபாநாயகர் கௌரவ கரு ஜெயசூரியா அவர்களால் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. இச் சேவைப்பணியிலும் நீங்கள் இணைந்து கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 0094 112687014, 0094 777316935



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு வாரமும் - அன்புவார ஒன்றுகூடல் விழாவும்

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவினால் உலக அமைதிக்கு அன்பை அடிப்படையாகக் கொண்ட மனித மேம்பாட்டுக் கல்வி முறையே தீர்வு என்பதை அடிப்படையாகக் கொண்டு அன்பு பற்றிய ஓர் விளக்கத்தினை மாணவர்கள் மூலமாக சமூகத்திற்கு எடுத்துச் செல்லும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதே அன்பு வார நிகழ்வாகும். ஆண்டு தோறும் அக்டோபர் மாத இறுதி வாரத்தில் திங்கள் தொடக்கம் ஞாயிறுவரையான ஏழு நாட்களையும் காருண்ய உணர்வுகள் நிறைந்த அன்புவாரமாக 2001 ஆம் ஆண்டில் இருந்து அனுஸ்டிக்கப்பட்டு வருகிறது.

1. இவ்வாரத்தில் பாடசாலை மாணவர்கள் அன்பை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு தலைப்புக்களில் கட்டுரை, கவிதை, கதை, சித்திரம் ஆகிய போட்டிகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இப் போட்டிகளில் வடமாகாணத் தைச் சேர்ந்த பெரும்பாலான பாடசாலைகள் பங்கு கொள்கின்றன. பாடசாலை அதிபர்களிற்கு மாணவர்களை உற்சாகப்படுத்தி அன்புவார நிகழ்வுகளில் பங்கு கொள்ள செய்வதற்காக அன்பு பற்றிய இந்து, கிறிஸ்தவ, பௌத்த, இஸ்லாமிய பெரியார்களின் வாசகங்கள் தயாரித்து அனுப்பப்படுகிறது. அத்தோடு அதிபர், ஆசிரியர் ஒருவர் அல்லது சத்திய சாயி நிறுவன கல்விப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் "அன்பு" பற்றி இவ்வாரத்தில் உரை நிகழ்த்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

2. வடமாகாணத்திலுள்ள நிறுவனங்களான வைத்திய சாலைகள், சிறுவர் - முதியோர் இல்லங்கள், அரச திணைக்களங்கள் அனைத்திற்கும் அன்பு வாரத்தில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய செயற் பாடுகள் பற்றிய செய்திகளும், பெரியார் வாசகங்களும் அனுப்பி வைக்கப் படுகிறது. இவை இவ்வாரத்தில் அவர்களால் நடை முறைப்படுத்தப்படவேண்டுமென எதிர் பார்க்கப்படுகிறது. இக்காலப்பகுதியிலும் தொடர்ந்தும் அவர்களது நடத்தை அன்பை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென்று வேண்டுகிறோம்.

3. வடக்கு மற்றும் வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள 40 இற்கு மேற்பட்ட சத்திய சாயி நிலையங்களைச் சேர்ந்தவர்கள் இவ்வாரத்தில் தமது இல்லங்களில் சமூகத்தில், தாம் பணி புரியும் நிறுவனங்களில் தமது பணிகள் ஒவ்வொன்றிலும் அன்புணர்வை வெளிப்படுத்தி சமூகத்தில் ஓர் அன்பு மயமான மாற்றத்தினை ஏற்படுத்துமாறு கேட்கப்படுகின்றனர்.

அன்புவார காலத்தில் ஏற்படுகின்ற உணர்வு மாற்றம் தொடர்ந்தும் எமது வவாழ்வில் ஓர் அடித்தளத்தை ஏற்படுத்தி நாட்டில் அமைதி தோன்றிட வழி செய்யும் ஓர் முயற்சியாகவே இவ்வாரம் கொண்டாடப்படுகிறது.

மேற்படி அன்புவார நிகழ்வுகளில் பங்கு கொள்கின்ற மாணவர்களை யாழ்ப்பாணத்தில் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்திய சாயி சேவா நிலையத்திலும், வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களை கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும் அழைத்து "அன்புவார ஒன்று கூடல்" விழா கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் அன்பு பற்றிய செய்திகளை பகிர்ந்து பரிசில்களும், ஆறுதல் பரிசில்களும் , சான்றிதழ்களும் வழங்கி அன்புவார ஒன்றுகூடல் விழாவினைக் கொண்டாடுகிறோம்.

இவ்விழாவில் மாணவர்களது ஆக்கங்கள் காட்சிப் படுத்தப்படுகின்றது. அத்தோடு மாணவர்கள் தங்களது அன்பு பற்றிய ஆக்கங்களை மற்ற மாணவர்களோடு பகிர்ந்து கொள்ளக்கூடிய நிகழ்வுகளும் இடம் பெறு கின்றன. இந் நிகழ்வுகளில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி துறை சார் பெரியோர்கள் கலந்து கொள்கின்றனர்.

**மாணவர்களது பரிசு பெற்ற ஆக்கங்கள்**
**இந்த இதழில் பிரசுரிக்கப் படுகிறது.**

ஜெய் சாயிராம்

K.V.சிவநேசன்
தலைவர், வடபிராந்திய இணைப்புக்குழு.

| ஆண்டு | பங்கு பற்றிய | | |
|---|---|---|---|
| | பாடசாலைகள் | நிறுவனங்கள் | மாணவர்கள் |
| 2001 | 180 | 140 | 538 |
| 2002 | 260 | 160 | 650 |
| 2003 | 410 | 135 | 838 |
| 2004 | 380 | 170 | 1039 |
| 2005 | 400 | 170 | 2209 |
| 2006 | 280 | 70 | 900 |
| 2007 | 280 | 70 | 860 |
| 2008 | வடமாகாணத்தில் உள்நாட்டு குழப்பம் இடம்பெற்ற காலம் | | |
| 2009 | | | |
| 2010 | | | |
| 2011 | 210 | 70 | 1100 |
| 2012 | 210 | 70 | 1281 |
| 2013 | 280 | 80 | 1056 |
| 2014 | 280 | 80 | 1535 |
| 2015 | 250 | 80 | 1576 |
| 2016 | 163 | 80 | 1580 |
| 2017 | 270 | 80 | 870 |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2017 ஆம் ஆண்டு அன்புவார நிகழ்வில் பங்கு பற்றிய மாணவர்களது ஆக்கங்கள்

# அம்மாவின் அன்பு

"அன்னையிற் சிறந்த கோயிலுமில்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை"

எனும் கூற்றிற்கிணங்க அன்னைக்கு மேலான உலகம் இங்கு எதுவுமே இல்லை. அன்னையின் உள்ளம் ஒரு சிறந்த கோயிலாகும். தன்னலம் கருதாது தமது பிள்ளைகளின் நலனுக்காக பாடுபடும் பெரிய உள்ளமே தாய் உள்ளமாகும். "மாதா பிதா குரு தெய்வம்" என்ற கருத்திலும் மாதாவான அன்னையே முதலில் போற்றப்படுகிறார். மனிதர்களில் மட்டுமல்லாது விலங்குகள், பறவைகள் அனைத்து உயிர்களிலும் அம்மா எனும் உறவானது உயர்வாக மதிக்கப்படுகிறது. ஏனெனில் என்றும் மாறாததும் முடிவிலாததுமாக அம்மா எனும் உறவின் அன்பே சொல்லப்படுகிறது. அம்மா எனும் உறவு இறைவனுக்கும் மேலாக போற்றப்படுகிறது. ஒரு அன்னையானவள் ஒரு தெய்வமாக ஒரு ஆசிரியராக ஒரு வைத்தியராக ஒரு நண்பராக என அனைத்து உறவினர்களாகவும் எனக்காக அன்பையும் அரவணைப்பையும் அக்கறையும் காட்டுகிறார். ஒரு அன்னையானவள் தன் குழந்தையை கருவில் சுமந்ததிலிருந்து வளர்ந்து பெரியவனாகியும் தன் சிறு குழந்தையாகவே பார்க்கிறாள். இறைவன்கூட நாம் தவறு செய்யும் இடத்தில் எம்மை வழிநடத்திச் செல்வதற்காக தண்டனை எனும் பிரதியீட்டினைக் கொடுக்கிறார் ஆனால் ஒரு அன்னை யானவள் நாம் செய்யும் தவறுகளை மன்னித்து தண்டனையை அன்பான அறிவுரைகள்மூலம் கொடுத்து எம்மைத் தட்டிக்கொடுக்கிறாள். ஒரு தாயானவள் தன் குழந்தை தவறான வழியில் செல்லவிடாது தன்பிள்ளை செல்லும்வழியில் குறுக்கிடும் துன்பம், துயரம், கஷ்டம் என்பவற்றை தகர்த்தெறிந்து தன் பிள்ளையின் வாழ்வை சிறந்தவழியில் செல்ல மாற்றுகிறாள். ஆயினும் இந்த உலகில் அனைத்து தாயின் உள்ளங்களும் ஒரே எண்ணத்துடன் தன் குழந்தையின் நல்லதை மட்டுமே எண்ணுகின்றது. ஆனால் அதே சமயம் அனைத்து குழந்தைகளும் தத்தமது தாயின் நலன்பற்றி எண்ணம் கொண்டதா? எனும் வினாவிற்கு பதில் சொல்வது ஐயமாகவே உள்ளது. அதனால்தான் என்னமோ தாய் உள்ளம் உயர்வாக போற்றப்படுகிறது. எமது தாயின் குழந்தைகளான நாம் என்றும் எம் நலனில் அக்கறையுடன் நமக்காக வாழும் எம் அம்மாவின் நலனுக்காக நம் எண்ணங்களை சிறந்த வழியில் மாற்றி எமக்காக உயிர்கொடுத்த எம் அம்மாவின் அன்புடன் நம் வாழ்வின் ஒவ்வொரு படிகளிலும் ஒழுக்கத்துடன் ஒவ்வொரு தாயின் ஆசைகளுடனும் நாம் எம் உலகிற்கு கொடுத்த எம் அன்னையரை உயர்வாகப் போற்றி வாழ்வோமாக.

ச.துளசிகா, தரம் 07,
வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்,
புத்தூர்

(கட்டுரை 1ஆம் பிரிவு - முதலாம் இடம்).

# அன்பு ஓர் மகாசக்தி

"அன்பிற்கு உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கண்ணீர் பூசல் தரும்" என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க, யாராலும் அடைத்து வைக்க முடியாத அன்பு ஓர் மகா சக்தி. எமது சமயங்கள் கூறும் விழுமியங்களில் முக்கிய விழுமியங்களாக கடமை, வாய்மை, அன்புடைமை, பிறரை மதித்தல், ஒழுக்க முடைமை, செந்நன்றி மறவாமை, உயிர்களி டத்தில் கருணை காட்டுதல் என்பன காணப் படுகின்றன. அதைவிட சைவசமயம் வலியுறுத்தும் முக்கிய அறமாக அன்பு அமைகிறது. மனித விழுமியங்களில் முதன்மை யானதும் அடிப்படையானதும் அன்பே ஆகும். அன்பிற்கு மாபெரும் ஆற்றல் உண்டு. அதனாலே உலகத்தின் மகாசக்தி என அன்பு போற்றப்படுகிறது. அன்பை அடிப் படையாகக் கொண்டு எழும் எல்லாச் செயலும் மேம்பாடு உடையதாக அமையும் எனப் பெரியோர்கள் கூறுவார்கள்.

அன்பை அடிப்படையாக கொண்ட தொரு வாழ்க்கைநெறியே சைவசமயம்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்.
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே!

என்பது திருமூலர் திருமொழி. அன்பை மறுப்பவன் சிவத்தை மறுக்கிறான் எனக் கொள்ளப்படும். கடவுள்வழிபாடு அன்பினை அடிப்படையாகக் கொண்டது. அதனால் அன்பினை உள்ளத்திலிருத்தி அதனை எப்பொழுதும் நினைத்துச் செயற்படுதல் என்பது கடமை யாகும். அன்பை மலராகவும் ஆர்வத்தை நீராகவும் கொண்டு வழிபாடு செய்யும்போது கடவுள் நம்பிக்கை பிறக்கிறது. இதனை வைத்துப் பார்க்கும் போது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எல்லோரிடமும் அன்பு வைத்து வாழவேண்டும் என்பது புலனாகிறது.

"அன்பின் வழியது உயர்நிலை அஃ திலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு" என்கிறார். வள்ளுவர். அதாவது, அன்புள்ள உடம்பே உயிருள்ள உடம்பாகும். அன்பில்லாதவர் உடம்பு எலும்பைத் தோலால் போர்த்த உயிரற்ற உடம்பாகும். மனிதர் மட்டுமன்றி உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்தும் அன்பினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. பிற உயிர்களுக்கு அன்பு காட்டுதல், பேணுதல் என்பன அன்பே வடிவான சிவபெருமானை கருணாமூர்த்தி, ஜீவகாருண்யன், தயாபரன் எனவெல்லாம் திருமுறைகள் போற்றுகின்றன. மாணிக்க வாசகர் "அன்பினில் விளைந்த ஆரமுதே" என திருவாசகத்தில் குறிப்பிடு கின்றார்.

அன்பு நெறியே சைவநெறி என்றும் அன்பு வாழ்வுதான் சைவசமய வாழ்வு என்றும் அன்பினால் ஆகாதது ஒன்று மில்லை என்றும் ஆன்றோர்கள் குறிப்பிட்டுள்ளனர். "எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும் நன் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே" எனத் தாயுமானவர் வேண்டுகிறார். உலகிலுள்ள அனைத்து உயிர்களிலும் கடவுள் நிறைந்து இருப்பதனால் எல்லா உயிர்களிடத்தும் அன்பு, கருணை காட்டுதல் அவசியமாகும். "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" உயர்ந்த அறமாகும். அந்த மனநிலை அன்பினால் உண்டாகிறது எனலாம். பசித்து வந்தோருக்கு அவர்களின் தேவையை உணர்ந்து உதவுதல் தார்மீகக் கடமையாகும். "யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி" என திருமூலர் குறிப்பிடுவது அன்பினால் விளைந்த ஜீவகாருண்யத்தைக் காட்டுவதாக உள்ளது. இவ்வாறு உலகில் உள்ள அனைவரும் அன்புடன் வாழ்வதன்மூலம் சண்டைகள், சச்சரவுகளை ஏற்படாமல் தவிர்க்க முடியும்.

அன்பிற்காகவே வாழ்ந்த எத்தனையோ பெரியோர்களை நாம்






குறிப்பிடலாம். பௌத்த தர்மத்தை நிலைநாட்டிய புத்த பகவான், "வெகுளியை அன்பால் வெல்க
தீமையை நன்மையால் வெல்க" என்கிறார்.

இவர் பல அன்பு தொடர்பான போதனைகளை மக்களிடம் சேரததிருக்கிறார். உலகளாவிய ரீதியில் சத்தியத்தை வலியுறுத்திய சத்திய சாயி பாபா உலகிலுள்ள எத்தனையோ வலுவிழந்தவர்களை, தீயவர்களை அன்பினால் நல்வழிக்குக் கொண்டுவந்தார். அந்தளவு மகா சக்தி அன்பிற்கு உண்டு.

ஆகையால் இவ்வுலகில் உள்ள அனைவரும் ஒற்றுமையாய் வாழ்வதற்கு அன்பு எனும் மகா சக்தி உதவுகிறது. உலகிலுள்ள அனைவரும் அன்பினைக் கடைப் பிடிப்பதால் யாருக்கும் எவ்வித இழப்பும் ஏற்படாது. இன்றைய சமுதாயத்தில் வீட்டிலிருக்கும் தாய் தந்தையிடமும் அயலில் இருக்கும் உறவினர்களிடமும் அன்பு காட்டாமையினாலேயே சிறு பிரச்சினைகளாய் உருவெடுத்து உலகப் போர்களாக வளர்ந்து நிற்கின்றன. நாம் அவற்றைத் தவிர்க்க வேண்டுமானால் அன்பு எனும் மகா சக்தியை நாம் அனைவரும் வளர்க்கவேண்டும். எப்பொழுதெல்லாம் துன்பப் படுபவனைக் கண்டு உதவ வேண்டும் என்ற மனநிலை ஏற்படுகிறதோ ஆதரவற்றோரை அரவணைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறதோ அப்பொழுது அன்பு ஊற்றெடுத்து விடுகிறது.

தாய் தன் குழந்தைமீதும் பிள்ளை தன் பெற்றோர் மீதும் மாணவன் தன் ஆசான் மீதும் ஒருவன் தன்நாட்டின் மீதும் அன்பு கொள்ளும்போதே பூரணமான மனித சமூகம் உருவாகிறது. "அன்பே இன்ப ஊற்று, இதய ஆசையுடன் அதைப் போற்று" என்பதற்கிணங்க நாம் அன்பினை அனைவரிலும் மிளிரவிட்டு நல்லுலகினை படைப்போமாக.

சத்தியா சுதேகந்தராசா
- தரம் 10
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
கட்டுரை 2ஆம் பிரிவு - முதலாம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு ஓர் மகாசக்தி

உலகின் தலைசிறந்த மானிட பண்பாக விளங்கும் அன்பு உலக மகா சக்தியாக காணப்படுகிறது. பூமியின் நிலைத்திருப்பிற்கு அத்தியாவசியமான இப் பண்பு உலக மக்களால் பின்பற்றப்படவேண்டிய தலைசிறந்த பண்பாக விளங்குகிறது.

வைத்தியம் செய்யும் வைத்தியரிடமும் சரி, கல்வி கற்பிக்கும் ஆசிரியரிடமும் சரி, கல்வி கற்கும் மாணவர்களிடமும் சரி மற்றும் ஏனைய சகல துறைகளிலும் உள்ள மனிதர்களிடமும் சரி அன்பு கட்டாயமாக இருக்கவேண்டும்.

எல்லையற்ற இப் பிரபஞ்சத்தை காக்கும் உரு ஆபூர்வ சக்தி அன்பேயாகும். அன்று காட்டு வாசியாகவும், வேடவராகவும் வாழ்ந்த மனிதன் விஞ்ஞான துறையில் இந்தளவு வளர்ச்சியடைய காரணமாக இருந்த மனித முயற்சிக்கு அடித்தளமிட்டது மக்கள் ஒவ்வொருவரதும் மனதில் இருந்த அன்பேயாகும். அன்பானது ஒரு மனிதன் மனதில் நிரந்தரமாக குடிகொண்டுவிட்டால் தீய பழக்கங்களை அகற்றிவிடும் அதேநேரத்தில் நல்ல பண்புகள் பலவற்றை மனதில் நிரந்தரமாக குடிகொள்ள செய்துவிடும்.

அன்று அன்பின்மையால் ஜப்பானை அணுகுண்டால் தாக்கியபோது ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாகி நகரங்கள் முற்றாக அழிந்துபோயின. அத் தாக்குதலின்பின் இன்றும் அந்நாட்டில் குழந்தைகள் ஊனமாக பிறந்தாலும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது இன்று புகழ்பெற்ற நாடாக விளங்குவதற்கும் அடிப்படை காரணமாக விளங்குவது மக்கள் ஒவ்வொருவரதும் மனதில் இருந்த அன்பும் அவர்கள் நாட்டின் மீது வைத்திருந்த அளவற்ற அன்புமேயாகும். ஒரு நாடானது முன்னேற்றம் அடைவதற்குக்கூட இவ் அன்பு பெரும் பங்காற்றுகின்றது.

குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவரது மனதில் அன்பிருந்தால் குடும்பத்தில் அன்பு நிலவியிருக்கும். குடும்பங்களுக்கிடையில் அன்பிருந்தால் சமுதாயத்தில் அன்பு நிலவியிருக்கும். சமுதாயங்களுக்கிடையில் அன்பிருந்தால் நாடு முழுவதும் அன்பு நிலவியிருக்கும். நாடுகளுக்கிடையில் அன்பிருந்தால் உலகம் முழுவதும் அன்பினால் நிரம்பியிருக்கும்.

தனிநபர் ஒருவரால் இச் சமுதாயம் உருவாகுதெனில் தனிநபர் ஒவ்வொருவரது மனதில் உள்ள அன்பினாலும் சமுதாயத்தில் அன்பை பேணமுடியும். ஒருவன் பெரும் பணக்காரனாக இருந்தாலும் அவனிடம் அன்பு இல்லாவிடில் அவன் மனிதனாக மதிக்கப்படமாட்டான். அது மட்டுமன்றி மற்றவர்கள்மீது அன்பு இல்லாத ஒருவனுக்கு மனநிம்மதி கிடைப்பதும் மிகவும் அரிது. ஆனால் தற்கால மனிதர்களிடமும் அன்பு என்பது சிறுதுளியும் காணப்படுவதில்லை. ஒரு தொழிலுக்குச் செல்லும் தாய் பிள்ளைகளிடம் சுதந்திரமாக கதைத்து மகிழக்கூட முடியாத இக் காலகட்டத்தில்தாய்க்கும் பிள்ளைகளுக்கு மிடையில் அன்பு இல்லாத ஒரு காரணத் தினால்தான் இன்று பல முதியோர் இல்லங்களும் சிறுவர் இல்லங்களும் உலகில் தோன்றியுள்ளன. ஒரு தாயின் அன்புக்கு உரித்தாகாதவன் தாய் நாட்டின் அன்பிற்கும் உரித்தாக மாட்டான். எப்போது தாய், தந்தை, பிள்ளைகளுக்கிடையில் அன்பு ஏற்படுகிறதோ அன்றுதான் உலகின் பல்வேறு இடங்களில் உள்ள சிறுவர் இல்லங்களும் முதியோர் இல்லங்களும் நிரந்தரமாக மூடப்படும்.


ஐந்தறிவு படைத்த மிருகங்கள், பறவைகள் ஒவ்வொன்றிடமும் உள்ள அன்புகூட மனித நெஞ்சங்களில் ஏன்தான் இல்லை? ஆகாரம் இல்லாமல் ஒரு மனிதன் வாழ்ந்துவிட முடிந்தாலும் அன்பு இல்லாமல் ஒருமனிதனாலும் வாழ முடியாது. அறிவு மற்றும் பணம் உள்ள ஒருவன் சாதிக்க முடியாததொன்றை அன்பு உள்ளவன் சுலபமாக சாதித்துவிடுவான். ஒருவனிடம் முயற்சி இருந்தாலும் அன்பு இல்லாதவிடத்து ஒரு காரியத்தை செய்ய நினைத்தானானால் அக் காரியத்தை பூர்த்தி செய்யமாட்டான்.

இன்று நாட்டுக்கும் சரி, வீட்டிற்கும் சரி கலவரம் நடக்க காரணம் மனிதர்கள் அன்பை மனதில் நிறுத்துவதற்கு பதிலாக அகங் காரத்தை மனதில் நிறுத்துகிறார்கள். இவ் அகங்காரம் வாழ்க்கையில் எவரையும் நல்லவழிக்கு இட்டுச் செல்லாது. மாறாக அன்பே ஒருவனை சிறந்த நல்ல வழிக்கு இட்டுச் செல்கிறது.

இவ் உலகத்தில் பணத்துக்காக ஏங்கும் உள்ளங்களை விட தாய், தந்தை, சகோதர அன்பிற்கு ஏங்கும் உள்ளங்கள் பல நம் பூமியில் உள்ளன. அன்பு பணம் கொடுத்து வாங்கமுடியாததொன்று ஆகும். ஒருவர் எவ்வளவுதான் துன்பத்தில் இருந்தாலும் அத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கையில் அன்பு

ஞாயிற்றுத் தொகுதியிலே உயிரினங்களின் நிலைத்திருப்பிற்கு ஏற்ற வகையிலே அமைந்த கோள புவி விரிந்தது போல வயல் வெளிகளும் அழகிய நீர் நிலைகளும் பச்சைக் கம்பளத்தை விரித்தது போல வயல் வெளிகளும் அழகிய நீர் நிலைகளும் இயற்கை தாவரங்களும் உயிருள்ள ஜீவராசிகளும் கொண்டு இயற்கையில் இறைவனால் படைக்கப்பட்ட படைப்பே இதுவாகும். மானிடப் பிறவிகளாக படைக்கப்பட்ட நாங்கள் அனைவருமே இயற்கை மீது அன்பு செலுத்துதல் வேண்டும்.

இறைவனால் படைக்கப்பட்ட இவ் இயற்கை அம்சங்கள் மீது நாம் அனைவருமே அன்பு கொள்ளுதல் வேண்டும். இதனாலேயே வள்ளுவர் பெருந்தகை ஸூஅன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ், ஆர்வலர் புன்கண்ணில் பூசல் தரும்" என்று கூறியுள்ளார். நாம் அனைவருமே ஒருவர் மீது ஒருவர் அன்பாக இருக்க வேண்டும். அதே போலவே இறைவனால் படைக்கப்பட்ட இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து உயிருள்ள உயிரற்ற கூறுகள் மீதும் அன்பு செலுத்துதல் வேண்டும்.

இப்பூவுலகிலே அன்பே ஒரு மாபெரும் சக்தியாகும். அன்பு இல்லையேல் இவ்வையகம் இல்லை. அன்பு என்பதை யேசுநாதர் இவ்வாறு கூறுகின்றார். "அன்பு பொறுமையுள்ளது. அன்பு நன்மை செய்யும். அன்பு பொறாமை கொள்ளாது. அன்பு தன்னலம் நாடாது அன்பு தீங்கு நினைக்காது அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்" என்று யேசுநாதர் தன்னுடைய பைபிளிலே மிக அழகான முறையில் கூறியுள்ளார். அவ்வாறு நாம் அனைவரும் அனைவர் மீதும் அன்பு செலுத்துதல் வேண்டும்.

தற்காலத்திலே இயற்கை மீது அன்பு செலுத்துதல் என்ற எண்ணக்கருவே தற்சமயம் இல்லாமல் இருக்கின்றது. இயற்கை என்பது இறைவனால் எமக்கு அளித்த அரிய ஒரு கொடையாகும். ஆனால் அவற்றை நாம் நல்ல முறையிலே பயன் படுத்துவதில்லை. அவற்றை அதாவது இயற்கையாக இறைவனால் படைக்கப்பட்ட இந்த நீர் நிலைகளை நோக்குவோமானால் இப்பொழுது அதிக கழிவுகளை கொண்டுள்ள குப்பைத் தொட்டியாக மாறி விட்டது. காடுகளை மனிதர்கள் அழித்து வருகின்றனர். காரணம் தற்காலத்தில் சனத்தொகை அதிகரிப்பு காரணமாக வீடுகள் அமைப்பதற்கு காடுகள் அழிக்கப்படுகின்றது. உலகில் அமேசன் காடு மிக வேகமாக அழிவடைந்து வருவதை காணலாம். இதே போல உயிரினங்களை அழித்தும் வருகின்றனர். இவற்றால் மனிதர்களுக்கு அதிகமான தீங்கே ஏற்பட்டு வருகிறது. இதன் காரணமாக அதிக வரட்சி எல்நினோ போன்ற செயற்பாடுகளுக்கு மனிதர்களாகிய நாம் ஆளாகி வருகின்றோம். இவற்றை குறைத்து எமது அரிய கொடையான இயற்கையில் அன்பு செலுத்துவோம்.

"பகைமையை இவ்வுலகில் பகைமையாலே வெல்ல துன்பத்தை மாற்றியமைக்கக்கூடியது அன்பு ஒன்று மட்டும்தான். நட்பு ஒன்று உருவாவதற்கு காரணமாக உள்ள ஒரு சக்தியும் அன்பாகும்.

மகாத்மா காந்தி நாட்டின் மீதும் நாட்டு மக்கள் மீதும் அன்பு வைத்திருந்த ஒரேஒரு காரணத்தினால்தான் அஹிம்சை வழியில் நின்று போராடி நாட்டிற்கு சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்தார். இவ்வாறு பல அறிஞர்கள் அன்பினால் அகிலத்தையே வென்றுள்ளனர்.

எனவே நாட்டில் இன, மத பேதங்களை காரணம்காட்டி சண்டையிடுவதை தவிர்த்து அன்பின் பெயரில் ஒற்றுமையாக வாழ்வோமாக.


"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்  
ஆர்வலர்  
புன் கண்ணீர் பூசல்தரும்"

க.கஜிதா  
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை,  
பருத்தித்துறை.  
கட்டுரை 3ஆம் பிரிவு - முதலாம் இடம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முடியாது. அன்பினாலேயே பகைமையை வெல்ல முடியும்.ளூ என்ற கூற்றை புத்த பெருமான் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு நாம் இயற்கை மீது பகை கொள்ளாது அன்பாலேயே அவற்றை பாதுகாக்க வேண்டும். இயற்கையில்லேயேல் நாம் இல்லை. இவ்வுலகிலுள்ள இயற்கைப் பொருட்களை பாதுகாப்போம். இயற்கை கொடைகளை நாம் அழித்தல் கூடாது. அவற்றால் எமக்கு நன்மையே கிடைக்கும். நாம் உயிர் வாழ்வதற்கும் நிலைத்திருப்பதற்கும் நீர் நிலைகள் காடுகள் உயிரினங்கள் அனைத்துமே நிலைத்திருக்க வேண்டும்.

இயற்கையை பாதுகாப்பதற்காக உலகிலே பல அபிவிருத்தித் திட்டற்களை மேற்கொண்டு வருகின்றனர். அதாவது 1992 ஆம் ஆண்டு றியோ உடன்படிக்கையும், 1972 ஆம் ஆண்டு ரம்சா உடன்படிக்கையும், பாரிஸ் உடன்படிக்கை, போன்ற பல உடன்படிக்கையையும் மேற்கொண்டு வருகின்றது. இலங்கையும் 1990 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. 2016 - 2050 ஆண்டு வரை நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியும் போன்ற பல அமைப்புக்கள் இயற்கை அழிவுற்று வருதலை தடுத்து அபிவிருத்தியை மேற்கொண்டு வருகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையும் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை மேற்கொண்டு வருகின்றனர். இலங்கையிலும் நீலப்பசுமை, போன்ற பல திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இயற்கை வளங்கள் எமது அன்றாட வாழ்க்கைக்கு முக்கியமான வளங்கள் ஆகும். அவற்றை அழிவு நிலைக்கு இட்டுச் செல்வதே மனிதர்களாகிய எமது அபிவிருத்தி செயலினாலே ஆகும். இதனை குறைக்க வேண்டும். இயற்கை மீது அன்பு வைத்து அவற்றை பேணிப் பாதுகாப்பது நாம் ஒவ்வொருவருடைய கடமையாகும். எமது எதிர்காலத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். இதனால் இயற்கை வளத்தை அனைவரும் ஒன்று சேர்ந்து பாதுகாக்க வேண்டும். இயற்கையை அன்பு செய் இவ்வுலகிலே வாழ்வாங்கு வளமுடன் வாழ்ந்திடுக. இயற்கையை பாதுகாப்போம் இன்பமுடன் இவ் வையகத்தில் வாழ்ந்திடுவோம்.

உ.கௌதமி
தரம் 13 (2018)
கிளி - வேரவில் இந்து மகா வித்தியாலயம்

# அம்மாவின் அன்பு

அம்மா பல உயிர்களைப் பெற்றெடுக்கும் தாய் ஆவார். பத்து மாதம் சுமந்து பெற்றெடுக்கும் மாதா. இவர் எம்மை பெற்றெடுப்பதற்காக பல துன்பங்களை அனுபவிக்கின்றார். அம்மா எம்மை தாலாட்டி தூக்கி வளர்க்கின்றார். பல கஸ்டங்களைத் தாண்டி எம்மை வளர்க்கின்றார். அம்மாவின் மீது பாசமாக இருத்தல் ஒரு நல்ல செயலாகும். அவர் எம்மை கண்களைக் காக்கும் இமைபோல பாதுகாக்கின்றார்.

தாய் எங்களது கல்வியிற்காகவும், சாப்பாட்டிற்காகவும் தாமே வேலைக்குச் சென்று உழைக்கின்றார். வீட்டிற்கு வந்து குருவைப்போன்று பாடம் சொல்லித் தருவதுடன் நற்பண்புகளை சொல்லித் தருகிறார். அவர் எம்மில் ஒரு உலகத்தையே காண்கின்றார். எங்களது அறிவும், பழக்க வழக்கங்களும் , நல்ல பண்புகள். இரக்கக் குணங்கள் மற்றும் சுட்டித் தனங்களையும் கண்டு சந்தோசப்படுகின்றார். அவர்களது அன்பால் நாம் எம்மையே மறக்கின்றோம். அவர் எங்களை நகமும் சதையும் போல் ஒற்றுமையாக வாழ வேண்டும் என வளர்க்கின்றார்.

அதேபோல நாம் செய்யும் தவறுகளாலும் மனம் வருத்தமடைகின்றது. அவையாவன பொய் சொல்லுதல், சொற்களை கேட்காமலிருத்தல், கள் உண்ணல், புகைப்பிடிததல், களவெடுத்தல், என்பவற்றால் துன்பப் படுகின்றார். நாம் எதிர்காலத்தில் நல்ல நிலையை அடைய வேண்டும் என்பது அவரது சவாலும் விருப்பமுமாகும். அதற்காக எம்மை சிறுவயதிலிருந்து பெரியவனாக வளரும் வரைக்கும் பாடசாலைக்கு கூட்டிச் சென்று விடுகின்றார். அவர் பாடசாலை செல்லும் போது பல நற்குணங்களைக் கூறுவார். அதாவது உண்மை பேசுதல், நல்லவனாக இருத்தல், பிறர் மனம் புண்படும் வண்ணம் பேசாதிருத்தல், அன்பாக இருத்தல், ஒற்றுமையாக இருத்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியரின் சொற்களை கேட்டு நடத்தல் என்பனவாகும். பஞ்சமாபாதங்களை தவிர்த்து நல்லவராக வாழ வேண்டும் என்று கூறுவார்.

நாம் பெரியவராக வளர்ந்ததும் எமது தாய் முதியவராக போய் விடுவார். அவர் எம்மை எவ்வாறு பக்குவமாக வளர்த்தாரோ அதே போல அவரது வயதான காலத்தில் அவரைப் பக்குவமாக பராமரிக்க வேண்டும். இளமைக் காலத்தில் எமது பிள்ளைகள் நல்லா இருக்க வேண்டும் என்று கோயிலுக்குச் சென்று வழி படுவாரோ அதே போல் எனது தாய் நல்லா இருக்க வேண்டும் என்று வழிபட வேண்டும். தாய் என்பவள் கடவுளுக்கு சமனானவள் ஆவார்.

ஆ.கீர்த்திகா
தரம் 7
கிளி - முருகானந்தா கல்லூரி
(கட்டுரை 1ஆம் பிரிவு - முதலாம் இடம்).

# அன்பு

ஆண்டவன் அருளிய வேதம்
அம்மா என்னும் வடிவம்
அனைத்து உயிர்களின் ஆன்மீக நாதம்
அழித்தால் உயிர் இருந்தும் ஜடம்

அன்பு ஒரு நதி
இடம் பொருள் அறியா விதி
எங்கும் செல்லும் வழி
தடை இருப்பின் உள்ளத்தின் வலி

உலக அமைதியின் ஆதாரம்
இப்போது உலகில் இதுவே குறைவாகும்
இதனால் துன்பம் மிகையாகும்
உணர்ந்தால் பூமி அமைதி காணும்

இ.பிரியதர்சினி
2018 கலைப்பிரிவு
கிளி- இராமநாதபுரம் ம.வி

# அன்பு

அன்பு ஒன்றை நாம் அறிந்து
கொள்ளக் கூடுமேல்
துன்பம் என்ற யாவையும்
தூர ஓடிப் போகுமே
வம்பு, வாது வார்த்தை யாவும்
வழக்கிழந்து போகுமே
சாதி பேத சண்டையும்
சமய பேத கொடுமையும்
மோதி மோதி மக்கள் தம்மை
மூடராக்கும் மடமையும்
நாதியற்று போகுமிந்த
நானிலத்தின் மீதிலே

த.ஜானகி.
யா/அத்தியார் இந்துக் கல்லூரி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அன்பு

நெய்தலும் மருதமும் ஒருங்கே இணையப்பெற்ற மாதகல் எனும் கிராமத்தில் கந்தையாவுக்கும் சிவகாமிக்கும் மகளாக அனுசா பிறந்தாள். ஓலைக் குடிலில் காணப்பட்ட அவளது வீட்டின் தோற்றம் வீட்டில் குடும்பத் தலைவனாக காணப்படவேண்டிய அவளின் தந்தையோ மதுபோதையில் மூழ்கி தெருவோரங்களில் வீழ்ந்துகிடக்கின்ற அவலம். அவளது தாயார் கூலி வேலைக்காக சென்று குடும்பத் தலைவனைப் போல வீட்டைக் காப்பவளாக காணப்படுகின்றாள். அவளின் கதை பின்வருமாறு,

தினமும் மதுவை அருந்திவிட்டு வீட்டில் வேலைக்களைப்புடன் காணப்படும் தாயை வந்து துன்புறுத்துவதே கந்தையாவின் நடத்தையாக காணப்பட்டது. அதனைப் பார்த்து தனது கல்வி நடவடிக்கையை மேற்கொள்ளமுடியாமல் தவித்தாள் அனுசா. இதனை பார்த்த சிவகாமி தன்னைப் போல தனது பிள்ளையும் இனிவரும் காலங்களில் கஷ்டப்படக்கூடாது என எண்ணி பிரதேச செயலகத்தின்ஊடாக "அன்பின் சகோதரர்கள் இல்லம்" எனும் இல்லத்தில் சேர்த்தாள்.

அனுசா சிறுவர் இல்லத்திலிருந்து கொண்டும் அவளது தாயின் நினைவாகவே காணப்பட்டாள். அழுது புலம்பியவாறு காணப்பட்டாள். இதனைப் பார்த்த அந்த அன்புச் சகோதரிகளில் ஒருவர் அவளை அழைத்து அவளின் மன உளைச்சலைத் தீர்க்க ஓர் முடிவு எடுக்கலாம் எனும் நோக்குடன் காணப்பட்டார். அவளிடம் விசாரிக்கும்போது அவள் கூறியதாவது. "அம்மா காலை எழுந்து என்னை படிக்க 4.00 மணிக்கு எழும்பி படிக்கவிட்டு தான் நேனீர் வைத்துத் தருவார். பின்பு தான் சென்று காலை, மதிய உணவு சமைத்துவிட்டு எனக்கு தலைகோலிவிடுவார். பின்பு எங்களுக்கு உணவை எடுத்து உண்ணும்படியாக கூறிவிட்டு கடற்கரைக்குச் சென்றுவிடுவார். அங்கேசென்று மீன் தெரித்துவிட்டு நூறு ரூபாய் காசு பெற்றுக்கொண்டு ஓர் பெரிய அழகான வீட்டிற்குச் சென்று வீட்டைப்பெருக்கி சமைத்து அவர்களின் ஆடை துவைத்து அவர்களின் கொடிய துன்புறுத்தல்களையும் தாங்கித்தான் வீட்டிற்கு வருவார். ஆனால் எனது தந்தையோ வந்ததும் வராததுமாக அம்மாவை மதுவிற்காக நூறு ரூபா காசு கொடு என அடித்து துன்புறுத்துவார். களையும் பசியுமாக வந்தவள் அந்த நூறு ரூபாவை எடுத்துக் கொடுப்பார். அதையும் வாங்கிச் சென்று தந்தை குடித்துவிட்டு வருவார். எனது அம்மாவுக்கு ஓர் ஆறுதலாக நான் மட்டும்தான் காணப்படுவேன். ஆனால் இப்போது நான் இங்கு இருப்பதனால் எனது தாயார் என்ன செய்வார் எனத் தெரியவில்லை. எனது தாயைப் பார்க்கணும் போல இருக்குது," என்று அனுசா கூறினாள்.

கூறிய அனுசாவை நோக்கி அன்புச் சகோதரி கூறினாள் உங்கள் நிலைமை எங்களுக்கும் புரிகிறது. இந்த துன்பத்தை போக்க வேண்டுமானால் நீங்கள் நன்றாகப் படித்து உங்களுக்கென்று ஓர் சொந்தமான காலில் நின்று உழைக்கவேண்டும். எனவே நீங்களும் இங்கு இருப்பவர்களுடன் சந்தோசமாக இருந்து உங்கள் கல்வியில் மிகுந்த ஈடுபாடு காட்டவேண்டும் என்று கூறினார். நீங்கள் சந்தோசமாக இருந்தால் உங்கள் அம்மா அதைக் கேட்டு சந்தோசப்படுவார் என்றார்.

அந்தச் சகோதரி கூறிய அன்பு வார்த்தையானது அவளது மனதில் ஓர் தைரியத்தைக் கொடுத்தது. அவள் தனது க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறு பேற்றைப் பெற்று அகில இலங்கையில் முதலாவது இடம் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து தனது கல்வியை நிறுத்தாது, உயர்தரம் கற்று அதிலும் சிறந்த பெறுபேற்றைப் பெற்றாள். பின்பு ஓர் வைத்தியசாலையில் அவளுக்கு நியமனக் கடிதம் கிடைத்தது. அப்போது அவள் தனது கடவுளை நோக்கி என்னை கண்கலங்காது ஏழ்மையிலும் அன்பாகப் பார்த்த அன்னைக்கும் அன்புச் சகோதரிகளுக்கும் நன்றி என மனதுக்குள் நினைத்தாள்.

தனது முதல் சம்பளத்தில் அரைவாசியை அன்புச் சகோதரிகள் இல்லத்துக்கும் அரைவாசியை தாயாருக்கும் அன்பாகக் கொடுத்தாள். பின் தனது தாயை ஓர் துன்பம் அறியாதது போல கண்ணை இமை காப்பதுபோல காத்து வந்தாள்.

அன்பால் எதையும் வெல்லலாம் என்பதை அன்புச் சகோதரியே உணரவைத்தார். எனது தாயின் கஷ்டத்தை நினைத்துக் கொண்டிருந்த எனக்கு அறிவுக்கண்ணை திறந்து வைத்தது அந்த அன்புச் சகோதரியின் அன்பு வார்த்தை மட்டும்தான். என் உயர்வுக்கு காரணம் அன்புச் சகோதரி என்பதை சிறுவர் இல்லத்துக்கு செல்லும் போதெல்லாம் கூறினாள்.

இன்பராசா சாளினி, 13
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
(2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு ஓர் மகா சக்தி



உலகிலுள்ள எல்லா மதங்களும் வலியுறுத்தும் முக்கிய அறமாக அன்பு அமைகின்றது. "அன்பின் வழியது உயிர் நிலை..... " என்பது வள்ளுவர் வாக்கு. ஆகவே மனிதர் மட்டுமின்றி உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்தும் அன்பினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. பிற உயிர்களுக்கு அன்பு காட்டுதல் , பேணுதல் என்பன அன்பே வடிவான கடவுளுக்குப் பிரியமான தொண்டாக அமையும். அதன் மூலம் இலட்சிய வாழ்வும் நிறைவு பெறும். கடவுள் வழிபாடு அன்பினை அடிப்படையாகக் கொண்டது. இதனாலேயே அன்பு ஓர் மகா சக்தி எனப்படுகின்றது. அதனால் அன்பினை உள்ளத்திலிருத்தி அதனை எப்பொழுதும் நினைத்துச் செயற்படுதல் வேண்டும். அன்பினால் எதையுமே வெல்ல முடியும். ஏனெனில் அன்பு ஓர் மகாசக்தி ஆகும்.

உலகிலுள்ள அனைத்திலும் கடவுள் நிறைந்திருப்பதனால் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்டுதல் அவசியமாகும். அன்பில்லாத வாழ்க்கை "என்பு தோல் போர்த்த உடம்பு" என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். ஓர் மனிதனின் மனோநிலை அன்பினால் உண்டாகின்றது. ஒருவன் வாழ்க்கையில் காக்க வேண்டிய விழுமியப் பண்புகளில் அன்பும் ஒன்றாகும். உள்ளத்தில் கோடாது உண்மையில் வாழும் வாழ்க்கை முறையே அன்பாகும். "அன்பிலார் எல்லாந் தமக்குரியார் அன்புடையர் என்பும் பிறர்க்கு" என்கிறார் திருவள்ளுவர். இதன் மூலமாக நாம் விளங்கிக் கொள்ளுவது யாதெனில் அன்பு இல்லாதவர்கள் எல்லாப் பொருட்களையும் தமக்கே உரிமையாக்கிக் கொள்வர். அன்புடையவர் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்குவர் என்பதாகும்.

நமது வாழ்வில் அன்பின் அனுபவத்திற்கு எடுத்துக் காட்டாக அன்னை திரேசாவை எடுத்து நோக்குவோமானால் ஒருநாள் அன்னை திரேசா செல்வந்தரொருவரிடம் சென்று எனது குழந்தைகளுக்கு நன்கொடையாக ஏதாவது தாருங்கள் எனக் கேட்க அப்பொழுது அந்தச் செல்வந்தர் அன்னையின் கைகளில் காறி உமிழ்ந்தார். அப்பொழுது அன்னை அன்பு ஓர் மகாசக்தி என்பதை உணர்ந்து அன்போடு அந்த செல்வந்தரிடம் செல்வந்தரே, எனக்குரியதை தந்து விட்டீர்கள். என் குழந்தைகளுக்கு உரியதை தாருங்கள் எனக் கேட்டார். அப்போது வெட்கித் தலை குனிந்த செல்வந்தர் அன்னையின் கால்களில் விழுந்து கதறி அழுதார்.

உலகில் இன்பமடைந்து வாழ்பவர் எய்தும் சிறப்பு, அன்புடையவராகப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்பர். உடம்பின் உள் உறுப்பாகிய அன்பு இல்லாதவரின் உடம்பிலுள்ள புறத்து உறுப்புக்கள் எல்லாம் என்ன பயனைச் செய்யும்? ஆகவே மனிதர்கள் ஆகிய நாமும் அன்பினை உள்ளத்திலிருத்தி அதனை எப்பொழுதும் நினைத்துச் செயற்படுதல் வேண்டும். உயிர்களிடத்தில் நாம் காட்டும் பரிவு இறைவனிடத்தில் கொள்ளும் பற்றுதலாக உள்ளது. ஏழைகள் உள்ளத்தில் கடவுளைக் காணலாம். ஆகவே "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதை உணர்ந்து நாம் அன்புணர்வுடன் செயற்படுதல் வேண்டும்.

அறியாதவர்கள் அன்பு அறத்திற்கு மட்டுமே துணை என்பர் ஆனால் ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்கும் அதுவே துணையாகும். அன்பே உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் மிகப் பெரிய ஆயுதம் அன்பானது ஒழுங்குபடுத்தப்பட்ட கலாசார மரபுகளைப் பேணக்கூடிய ஒழுகலாறுகளை சமயம் சார்ந்த அறவாழ்க்கையைப் போதிக்கின்றது. பசித்து வந்தோர்க்கு உணவளித்தல் என்பது அன்பினால் விளைந்த ஜீவகாருண்யத்தை காட்டுவதாக உள்ளது.

உலகம் உண்மையான அமைதியை காண வேண்டுமாயின் அது அன்பிலிருந்து தான் ஆரம்பிக்கப்பட வேண்டும். அன்பே ஒரு வலிமையான ஆயுதம். அதனை நாம் உலகிலுள்ள அனைத்தின் மீதும் செலுத்துவோமாயின் இவ்வுலகையே வெற்றி கொள்ள முடியும். எனவே மேற்கூறிய சான்றுகளினூடாக அன்பின் மகத்துவத்தை அறிய முடியும்.
"அன்பே எமது வாழ்வின் ஓர் மகா சக்தி"

ஜோய் நேருஜா
தரம் 10
கிளி - விவேகானந்தா வித்தியாலயம்
தரம் 2 முதலாம் பரிசு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அன்பு

பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்து தனக்கென ஒரு வேலை செய்து கொண்டே இருக்கும் சித்ரா வீட்டில் தனியாகவே இருந்தாள். திடீரென ஏதோ விழுந்த சத்தம் கேட்டு என்னவென ஓடிப்போய் பார்க்கையில் தனது தந்தையின் அஞ்சலிப்படம் விழுந்து கிடப்பதை பார்த்து அதிர்ச்சியடைந்து அதை எடுத்து தன் கைகளால் தடவிய வேளை அவள் கையில் கண்ணாடி குத்தி இரத்தம் வடிந்து அவளது தந்தையின் நெற்றிப் பொட்டில் விழுந்தது. அந்நேரம் அவளது கண்ணீர் துளி படத்தில் விழுந்த இரத்தத்தை கழுவியது போல அதிகமாக அவளது மனதில் பாரம் ஏற்பட்டது. அந்நேரம் அவள் தன் தந்தையின் ஆயுட்காலம் தன்னாலேயே முடிந்ததாக மனதில் சிறிய தயக்கத்துடன் அவள் இருதயத்தில் எழுந்த தன் தந்தையின் பழைய நாட்களை நினைவோட்டமாக கூற நினைக்கிறாள்.


எங்க ஊரு வேலுப்பட்டி தான் அதில் வருகிற வழியிலே எல்லாம் பச்சைப்பசேலெண்டு இருக்கும். அப்பா வேலுச்சாமி வயலில் வேலை செஞ்சுகிட்டு இருப்பாரு. வேலுச்சாமி கூட நானும் வயலில இறங்கி வேலை பார்ப்பேன். அப்போ எங்க அப்பா சொல்லுவாரு "நீ படிக்கத்தானே நா வயலில வேலை செய்யுறன். நீ படிக்கிற விசயத்தில கவனஞ்செலுத்து" எண்டு சொல்லிக்கிட்டே இருப்பாரு. அவர் அப்படி சொல்லுற போது நாமறுபடியும் பேசிக்கிட்டே இருப்பன். ஏன்னா தாயாகவும், சகோதரராகவும் வேலுச்சாமிதான் எனக்கு இருக்காரு. எங்க ஊரில முக்கிய விசயம் என்னெண்டா யாருமே பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவே மாட்டாங்க. படிச்சால் தங்களை மதிக்காது எண்டு சொல்லி விடவே மாட்டாங்கள். ஆனாலும் நா நல்ல படிச்சதால எங்க வாத்தியாரு என்னை பெரிய பள்ளிக்கூடத்தில சேர்த்து விட்டாரு. அப்புறம்தான் எல்லா பரீட்சையிலயும் முதலிடமென்டதால எனக்கு கம்பஸ் போறதுக்கு வாய்ப்பு கிடைச்சுது. எனக்கு இலவசமாகவே தங்க இடமும் சாப்பாடும் தருவாங்க. கம்பசில படிக்க ஆரம்பிச்சு 2 மாத்தில நா வீட்ட வந்தன். நான் வாறதெண்டதை தெரிஞ்ச வேலுச்சாமி ஊருக்கே விருந்து வைச்சிட்டாரு. அப்போ எனக்கு ரொம்பவே கோபம் வந்திட்டுது. "யோவ் நீயே ரொம்ப கஸ்டப்பட்டு என்னைப் படிக்க வைக்கிற அதில ஊருக்கே சாப்பாடு போடணுண்டு என்ன அவசியம்" எண்டு அப்பாவை ஏசிட்டேன். இதுவரைக்கும் நான் அவரை எப்பவுமே பேசினதில்லை. இதனாலே வேலுச்சாமி ரொம்ப கவலையா வீட்டில இருந்து அழுதாரு. நான் எதுவுமே சொல்லாம கம்பசுக்கு அடுத்த நாளே போயிட்டேன். அங்கே போன பிறகு தான் வேலுச்சாமிக்கு இதயத்தில வருத்தம் இருக்குது நா வேற இப்படி பண்ணீட்டனே எண்டு ரொம்ப கவலையா இருந்திச்சு. எந்த விசயத்தையும் அப்பாகிட்டே இருந்து மறச்சதே இல்ல. கம்பசில நிறையப் பேர் இருந்தாலும் வேலுச்சாமிகூட இருக்கிற மாதிரி வராது. பேசாம இதை விட்டிட்டு வீட்ட போவமா எண்டு சில வேளை நினைப்பன். திடீரெண்டு வேலுச்சாமிகிட்ட இருந்து கடிதம் வந்திச்சு அதில " நீ சீக்கிரம் ஊருக்கு வா உனக்கு கல்யாணம் பேசி இருக்கு" எண்டு இருந்திச்சு. இதைப் பார்த்ததுமே எனக்கு கொஞ்சம் தயக்கமா இருந்திச்சு. எனக்கு கலியாணம் செய்யவே விருப்பமில்லை. வேலுச்சாமிகூடவே நான் இருக்கணும் என்னை வளர்த்து படிக்க வச்சது வேலுச்சாமி ஆனா படிச்ச பிறகு யாருக்கோ நா உழைச்சு கொடுக்கணுமா? எண்டு வேலுச்சாமிக்கு மறுபடியும் தந்தி போட்டேன். அதுக்கப்புறம் எந்தப் பிரச்சினையும் இல்லை எண்டு பேசாமலே படிப்பில கவனத்தை செலுத்திட்டேன். தந்தி போனதுக்குப் பிறகு அப்பா தன்னாலதான் என்ட பொண்ணு கலியாணம் வேண்டாமென்று நினைக்கிறாளோ எண்டு கவலையோட வயலில இறங்கி வேலை பாாத்துகிட்டு இருந்தாரு. சில காலத்திற்குப் பிறகு வேலுச்சாமி பழைய மாதிரி சந்தோசமாக இருக்க ஆரம்பிச்சாரு. எல்லோருக்கும் எதிரி வெளிகூடியே இருந்து வரமாட்டாங்க எங்களிலையே இருப்பாங்க எண்டு பழைய ஆட்கள் சொல்லுவாங்க. அது சித்திரா விசயத்திலயும் நடந்திட்டு. என்னோட சிநேகிதியே என்னோட படிப்பு விசயத்தில என்னைவிட அதிகமா படிக்கணும்னு ஏப்ரல் பூல் அண்டு என்ர அப்பாவுக்கு தந்தியிலே எனக்கு விபத்தில 2 காலும் ஏலாது அவள் நடக்க இயலாது. வண்டியிலதான் சுத்துறாள் எண்டு போட்ட தந்தியை பார்த்த என்ர அப்பா வேலுச்சாமி வயலுக்கு வெளியே வந்து நெஞ்சைப் பொத்திக் கொண்டு அந்த அனுப்பின கடவுளுட்டை போயிட்டாரு. அவருக்கு என்மேல இருந்த உசிரில இனி என்ர பொண்ணு என்ன பண்ணுவாள் ஐயோ! இப்படி ஒரு நிலமை இதுதான் கடவுள் என்ர மகளுக்கு குடுத்த சந்தோசமா எண்டு தன்ர கண்ணை மூடிக் கொண்டாரு.

என்னோட எல்லா விசயத்தையும் பார்த்து பார்த்து செய்த என்னோட வேலுச்சாமி என்ன விட்டாலும் அவரோட இருக்கிற மாதிரியே எனக்கெண்டு எந்த துணையும் தேவையில்லை வேலுச்சாமி எனக்குப் போதும் நா தனியாவே இருப்பன் என்று நினைத்துக் கொண்டே படத்தை இருந்த இடத்தில வைத்து மாலையை சாத்தினாள் சித்திரா

அ.ஜெக்சியா
2018 -கலைப்பிரிவு
கிளி - இராமநாதபுரம் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் கண்ட கைலைக் காட்சி

என் இதயத்தின் ஒளிவிளக்காய் மிளிருகின்ற என் இதயத் தெய்வமே அண்ணல் சாயியே உன் செங்கமல மலர்ப்பாதம் தஞ்சம் எனப் பணிகின்றேன். செம்மலே அருள் புரிவாய். பன்னிரெண்டு வயதில் இருந்தே சுவாமியை வணங்கியமையால் கருணைக் கடல் பாபா கைலைக்காட்சி காட்டியதை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

மீன்பாடும் தேனாடாம் மட்டு மாநகரின் அருகே கல்லாறு என்ற கிராமம் அமைந்துள்ளது. அங்கு தீவிர சாயி பக்தர்களான திரு.திருமதி சுதாமதி புஸ்பகுமாரின் இல்லத்தில் மணங்கமழும் விபூதி சொரியத் தொடங்கியது. இதை அறிந்த நானும் எனது மகள் பிரசாந்தியும் அடிக்கடி அங்கு போய் சேவை செய்து வருவோம். இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் குழுமினர்.

ஒருநாள் இரவு பகவான் என் கனவில் தோன்றி அசரீரியாகக் கதைத்தார். அதில் முதலாவது வினாவாக நீ கல்லாற்றுக்கு சென்றாயா? எனக் கேட்க ஆம் சுவாமி எனக்கூற இரண்டாவது வினாவாக உனக்கு அவர்களைத் தெரியுமா? என்று கேட்கவும் பர்த்தி யாத்திரையில் அவர்களுடன் நன்கு பழகினேன் என்று சொன்னேன். மூன்றாவது வினாவாக திருமதி சுதாமதியின் முற்பிறவி பற்றி உனக்குத் தெரியுமா? என்று கேட்டார் நான் தெரியாது என்று சொன்னேன். சுதாமதி முற்பிறவியில் ஒரு நாகமாகப் பிறந்து என்னை வழிபட்டு என்னிடம் வரம் ஒன்று பெற்றிருந்தார். அதன் பலனாக என் வீட்டில் தன்னை வந்து தங்கும்படி கூறியிருந்தார். அதற்காகவே நான் வந்து தங்கியுள்ளேன். எனக் கூறினார். அத்துடன் எனது கனவு கலைந்தது. சுவாமியை நினைத்து நினைத்து நெஞ்சுருகி அழுதேன். விடிந்ததும் நானும் மகளும் பொங்கல் செய்து கல்லாற்றுக்கு சென்று கனவு விடயத்தை கூறினோம். சுதாவின் அம்மா சிறு வயதில் நாகதம்பிரான் கோவிலுக்கு சென்றால் உருவந்து ஆடுவாள். அதனால் நான் அதிகம் அழைத்துப் போவதில்லை எனக் கூறினாள்.




நாங்கள் அதன் பின் வீட்டின் முன்னே பஜனையில் ஈடுபட்டோம். அவ்வேளையில் அவர்களது வீட்டின் முன்னே உள்ள அருணோதயம் அங்கு வந்து எமது சுவாமியின் திருப்பாதங்களை கையடக்கத் தொலைபேசியில் படம் எடுத்துக் கொண்டிருந்தார். அவ்வேளையில் கையடக்கத் தொலைபேசியில் திடீரென பனிப்போர்வைக்குள் எங்கள் செஞ்சடையேன் கைலாய மலையில் வீற்றிருக்கும் காட்சி. அதைத் தொடர்ந்து சுவாமி கைலாச மலையிலிருந்து இறங்கிவர அவர் பின்னே ஏழுதலையுடன் ஆதிசேடன் குடை பிடித்துவர என் அப்பன் இறங்கி வரும் அற்புதக்காட்சியை கண்ணீர் மல்கக் கண்டு பரவசமடைந்தோம். அதன் பின் சுவாமி ஒன்பது சிறு உருவமாக ஓடி ஆடிக் கொண்டிருந்தால் சிறிது நேரத்தில ஒன்பது உருவமும் ஓர் உருவமாகி நவரத்தினமாலை அணிந்து காட்சி தந்தார். அம்மணிகளில் இருந்து கற்கள் ஜொலிக்க அக்கற்களின் நடுவே சுவாமி அபயஸ்தம் தந்து கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில் அழகான மீன் நடுவே எனது சுவாமி மச்ச அவதாரத்தில் காட்சி காட்டி எங்களை பரவசப்படுத்தினார். திடீரென விபூதி சுந்தரர் அங்குள்ள சீரடி சிலைக்கு குடம் ஒன்றில் விபூதியினால் அபிசேகம் செய்தார். நான் நினைத்தேன் சுவாமி எனது பொங்கலையும் ஆசிர்வதியுங்கள் எனப் பிரார்த்தித்தேன். அடுத்த நொடி பொங்கலும் சீரடிக்கு அருகில் காணப்பட்டது, மகளை பாடும் படி கூறினேன் அவரால் அழமுடிந்ததே தவிர பாடமுடியவில்லை. குரல்வளம் இல்லாவிட்டாலும் நான் அழுதழுது பாடினேன். மீண்டும் சுவாமி சிறு உருவங்களாக அங்குமிங்கும் ஓடினார். சிறிது நேரத்திலே சுவாமிக்கு முன்னே மூடியுள்ள தேங்காய் ஒன்று உருண்டு கொண்டு செல்ல கடற்கரை மணலின்மீது எம் அன்னை அடிமேலே அடிவைத்து அசைந்து சென்று கொண்டிருந்தார். சுவாமியின் சுருண்ட கேசம் காற்றில் நடனமாடியது. ஒன்றரை மணித்தியாலம் காட்சி தந்தார்.

நாவுக்கரசர் எண்பத்தோராவது வயதில் கைலை செல்ல முடியாது இறைவன் அருளால் திருவையாற்றில் நீராடி கைலைக்காட்சியை கண்டு "மாதா பிறைக் கண்ணியானே" எனப் பாடினார். நாங்கள் செய்த சேவையாலும், நாமஸ்மரணையாலும் சுவாமி இந்த அரிய காட்சியை எங்களுக்குக் காட்டினார்.

வதனி குணரெட்ணம்
கல்லடி சாயி நிலையம்
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சத்திய சாயி சர்வதேச நிறுவனம் - இலங்கை. வடபிராந்தியம் குருமாருக்கான செயற்பட்டறை (24.02.2018), (24.3.2018)

## 24.02.2018

மேற்படி நிகழ்வு 24.02.2018 சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் 1.30 மணிவரை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டு அவற்றிற்கான தீர்வுகள் எடுக்கப்பட்டன. 31 குருமார் உட்பட 41 பேர் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடப்பட்ட 4 விடயங்கள் வளவாளர்கள்

1. மாணவர் வரவை அதிகரித்தல்
   - திரு. K.V. சிவநேசன்
2. மாணவரில் மலர்ச்சியை ஏற்படுத்தல்
   - திரு. A. ஜெகநாதன்
3. மாணவரை புரிந்து கொண்டு செயற்படல்
   - Dr. இ. சிவசங்கர்
4. குருமாரின் தகைமையை உயர்த்துதல்
   - திரு. S. தங்கராஜா

பின்வரும் சில விடயங்கள் பொதுவாக தீர்மானிக்கப்பட்டன.

- மாணவர் எத்தகைய சூழலிலிருந்து வருகிறார்கள். அவர்கள் குணநலன்களை அவர்கள் மூலமும் பெற்றோர் தொடர்பு மூலமும் அறிதல்
- மாணவரை அன்புடன் வரவேற்று முகமலர்ச்சியோடு கற்பித்தல். குருமார் முன்மாதிரியா நடந்துகொள்ளல்.
- மாணவர்க்கு சிற்றுண்டி, பானம் வழங்கல்.
- பொது நிகழ்வு கண்காட்சி வைத்தல்
- பாலவிகாஸ் பஜனையில் சந்தர்ப்பம் வழங்கல்
- மாணவர் விருப்பங்களை அறிந்து அவர்கள் மகிழும் வகையில் கற்பித்தல் சாதனங்கள் இணையத்தளம் உபயோகித்து கற்பித்தல்.
- பிள்ளைகளின் திறன்களை பாராட்டி அன்பளிப்பு வழங்கி ஊக்கமளித்தல்.

மேலதிக விடயங்கள் பின்வருமாறு

### மாணவர் வரவை அதிகரித்தல்

1) அயல் பாடசாலை ஆரம்பபிரிவு மாணவர்களுக்கு நற் சிந்தனை வழங்கல்.
2) இல்ல பஜனை மூலம் மாணவர் வரவை அதிகரித்தல்.
3) ஒழுங்காக வராத மாணவரை விசாரித்து வரச்செய்தல்.
4) பெற்றோர், சமித்தி அங்கத்தவர், மாணவர்மூலம் மாணவரை அதிகரித்தல்.

### மாணவரில் மலர்ச்சியை ஏற்படுத்தல்

1) மாணவரிலுள்ள குறை குற்றங்களை தீய பழக்கங் களை தனிமையில் அன்பாக எடுத்துரைத்து தீர்த்தல்.
2) விளையாட்டுக்கள் சுற்றுலா மூலம் மகிழச் செய்தல்.

### மாணவரை புரிந்துகொண்டு செயற்படல்

1) பாடங்களை மிக இலகுவான முறையில் கற்பித்தல் பரீட்சையை மையப்படுத்தி பயத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தாதிருத்தல்.
2) நேரம் பிந்திவரும் மாணவரை அன்போடு விசாரித்து நேரம் தவறாமை பற்றி விளக்கமளித்து நேரத்திற்கு வரச்செய்தல்.
3) நிலையத்தில் நல்ல ஒழுக்க சீலர்களாக முன்மாதிரியாக நடந்து பிள்ளைகளை வழிப்படுத்தல்.
4) படிப்பு, பதவி அந்தஸ்து ஆகியவற்றை முன்னிலைப்படுத்தலை தவிர்த்தல்.
5) அமைதியான பிள்ளைகளையும் அதிகம் துடியாட்டமுள்ள பிள்ளையையும் கவனத்தில் எடுத்தல்.

### குருமாரின் தகைமையை உயர்த்துதல்

1) பாலவிகாஸ் பயிற்சி பெற்றிருத்தல்.
2) குரு தனது பதவியை விருப்பத்துடன் செய்தல்.
3) தலையிலிருந்து தலைக்கு அல்லாமல் இதயத்திலிருந்து இதயத்திற்கு கற்பிக்கும் தகைமையை பெறல்.
4) தினசரி ஜெப தியானம் சாதனை செய்தல்.
5) சுவாமியின் வழிநடத்தலுக்கு ஏற்ப உடை, உணவு, உடமை, உறவு என்பவற்றில் தூய்மையைப் பேண ஊக்கமெடுத்தல்
6) தெய்வபக்தி, பாபபீதி, சமூக நீதி உடையவராய் இருந்து மாணவரிலும் இவை ஏற்பட ஊக்கமெடுத்தல்.
7) வாசித்தல், தேடுதலில் குருமார் ஆர்வமுள்ளவராயிருத்தல்.
8) My Life is Swami's message என வாழ்ந்து காட்டுபவராக இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24.3.2018

கலந்துரையாடப்பட்ட விடயங்கள் - வள வாளர்கள்

1. குருமாரின் தனிநபர் செயற்பாடு
   - திரு. S.R.சரவணபவன்
2. குருமாரின் குடும்பத்தில் செயற்பாடு
   - திரு. S.சிவபாலன்
3. குருமாரின் சமூகத்தில் செயற்பாடு
   - திரு. K.V.சிவநேசன்
4. குருமாரின் மாணவருடன் செயற்பாடு
   - திரு. S.சிவமயூரன்

இறைவனின் நற்செயல்களை நடைமுறைப் படுத்தும் பிரதிநிதிகளே குருமார். அண்டசராசரம் எனும் பெரிய இயந்திரத்தின் அச்சாணி குருமார்.

**தனிநபர் செயற்பாடு**


குருவாக இருத்தல் சுவாமி தந்த ஒரு கொடை

1. தினசரி ஓம்காரம், காயத்திரி, தியானம், ஜபம் செய்தல் வேண்டும்.
2. செய்கின்ற எல்லாக் காரியங்களையும் இறை அர்ப்பணமாக செய்யவேண்டும். அதாவது அன்றாட வாழ்வில் ஆன்மிகம் அவசியம்.
3. ஓம்காரம் உபாசனையின் நிசப்தம் தியானத்திற்கு உதவும். (எண்ணற்ற நிலை)
4. காயத்திரி மந்திர உச்சாடனம், நாமஜபம் புத்தியை பிரகாசிக்கும்.
5. சாயி இலக்கியங்களைப் படித்தல்
6. ஆசைக்கு வரம்புவைத்தல், எல்லோருக்கும் உதவிசெய்தல்.
7. நாமத்தை கூடியளவு ஜபம் செய்தல்.

சாதனையின் நன்மைகள்

1. குருமாரில் மாற்றம் ஏற்படும். முன்னேற்றம் உண்டாகும்.
2. முன்மாதிரியாக வழிகாட்டியாக



விளங்கலாம்.

3. மனஅமைதி, மனத்தூய்மை ஏற்படும்.
4. இன்பதுன்பத்தில் சமநிலையான தளம்பாத மனம்
5. தியானத்தில் குருவில் ஏற்படும் அதிர்வுகள் மாணவரை சென்றடைந்து அவர்களில் மாற்றம் ஏற்படும்.
6. தெய்வீகம் மிளிரும்.

**குருவின் குடும்பத்தில் செயற்பாடு**

தனிநபராக குரு செய்யும் சாதனைகள் குடும்பத்தையும் சென்றடையும். குடும்பத்தவரையும் ஈடுபடச்செய்யும்.

1. தினசரி ஓம்காரம் காயத்திரி, நாமஜபம், தியானம் செய்தல்
2. சுவாமியை வணங்கிவிட்டு எக்காரியத்தையும் செய்தல்.
3. இறை அர்ப்பணம் சரணாகதி.
4. குடும்பத்தவர்க்கு உதவுதல்.
5. அதிகாலை நேரத்திற்கு எழுதல்.
6. போக்குவரத்து நேரம், வேலைத்தளத்தில் இறைநாமம், இறைசிந்தனையுடன் செயற்படல்.
7. சாயி இலக்கியம் படித்து குடும்பத்தாருடன் கலந்துரையாடல்
8. எமது பிள்ளைகள் பேரப்பிள்ளைகளின் செயற்பாடு எங்களில் இருந்து வந்ததே எனவே நாம் நல்ல வழிகாட்டியாக அமையவேண்டும்.
9. பசித்தோருக்கு உணவளித்தல்.
10. எல்லோருடனும் மிருகம், தாவரங்களுடன் அன்பாயிருத்தல்.
11. நல்லோருடன் உறவு வைத்திருத்தல்.
12. இயன்றவரை மௌனம் கடைப்பிடித்தல்.
13. தொலைக்காட்சியில் தேவையற்றவையை பார்ப்பதை தவிர்த்தல்.
14. குடும்ப வழிபாடு, சேர்ந்து உணவு உண்ணல்.

**குருவின் சமூகத்தில் செயற்பாடு**

1. சமூகத்தில் முன்மாதிரியாக நடத்தல் நடையுடை பாவனை, பேச்சு
2. பாலவிகாஸ் மாணவர் வீடு சென்று பெற்றோருடன் கலந்துரையாடல்
3. எமது செயற்பாடுகளான மூத்தோரை பெற்றோரை மதித்து மரியாதை செய்தல். அன்பு, அமைதி, ஒற்றுமை பேணல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பாடசாலையில் முன்மாதிரியாக வழிகாட்டியாக திகழச்செய்து சமூக மாற்றம் ஏற்பட உதவுதல்.
5. சமூகத்தாருடன் நல்லுறவு பேணுதல்
6. சமூக சேவையில் ஈடுபடல்
7. மாணவரின் குடும்ப சுகதுக்கங்களில் பங்கு கொள்ளல்
8. பொது இடங்களில் சுவாமியின் போதனைக்கு அமைய கலை நிகழ்ச்சி களை வழங்கல்.
9. அயலவர் வயோதிபர்க்கு உதவுதல்.
10. பாலவிகாஸ் மாணவர்களின் பெற்றோரை அழைத்து அவர்களையும் சமிதி சேவை, சிரமதானம், ஏனைய நிகழ்வுகளில் ஈடுபடசெய்தல்.
11. பாடசாலைகளின் நற்சிந்தனை வழங்கல்.
12. தேவாரம் பண்ணிசை கற்றுக்கொடுத்து பொது இடங்களில் பாடச்செய்தல்.
13. பொது நிகழ்வுகளில் பங்கு கொள்ள ஊக்கமும் தன்னம்பிக்கையும் வளர்த்துக் கொள்ளல்.
14. சமூகத்தில் தவறுகள் ஏற்படின் அன்பாக கூறி வழிநடத்துதல்.



**குருவின் மாணவருடன் செயற்பாடு**

1. மாணவருடன் அன்பாகப் பேசிப்பழகல்.
2. மாணவரின் பெற்றோர் சூழலை அறிதல்
3. குருமார் மாணவராக மாறி மாணவருடன் பழகல்.
4. குருமார் கற்பித்தலில் அவர்களிடையே ஒரு ஒற்றுமை ஒத்திசைவை ஏற்படுத்திக்கொள்ளல்.
5. ஒழுங்கான உடை அமைப்பை ஏற்படுத்தல்.
6. குருமார் தொடர் பயிற்சி எடுத்து குருவிகாஸ் ஏற்படுதல் மூலம் மாணவருடன் இலகுவான முறையில் செயற்படல்.
7. பெற்றோருடன் நல்லுறவுவைத்து அவர்களுடன் உறுதுணையுடன் செயற்படல்.
8. தியானம், நாமஜபம், காயத்திரிஜபம், குருமார் தாமும் செய்து பிள்ளைகளையும் செய்ய ஊக்கப்படுத்தல்.
9. மாணவர்கள் ஆர்வத்துடன் கற்றலுக்கு குருமார் முயற்சி எடுத்தல் மாணவரைப் பகுத்தறிந்து செயற்படல்.
10. குருமார் அர்ப்பணிப்புடன் செயற்படல்.
11. குருமார் உறுதியான சமநிலையான மனதுடன் செயற்படல்.
12. மாணவரின் திறமைகளை வெளிக் கொண்டுவர உதவுதல்
13. மாணவரின் நிலைக்கு இறங்கி செயற்படல்
14. பெற்றோரின் மனநிலையை மாற்று மளவுக்கு மாணவருடன் செற்பாட்டை உருவாக்கல்
15. தொழில்நுட்ப வளர்ச்சியை புறக்கணித்து ஒதுக்கும்படி அறிவுறுத்தாமல் ஏற்ற நல்லவற்றை பயன்படுத்த வழி அமைத்துக்கொடுத்தல் (சாயி நிகழ்வுகள்)

ஜெய் சாயிராம்

திருமதி ம.சரவணபவன்
வடபிராந்திய பாலவிகாஸ் ஒருங்கிணைப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமியின் வருகையும் அவரது தரிசனமும்

சுவாமியின் தெய்வீக திருவடிவத்தை நேரடியாக தரிசிக்கும் வாய்ப்பு முதன்முதலாக 2010ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 11ஆம் திகதி மாலை எனக்குக் கிடைத்தது. தொடர்ந்து பத்து நாள்கள் பிரசாந்தி நிலையத்தில் தங்கியிருந்து அவரது தெய்வீக தரிசனத்தை பெறும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இறுதிநாளன்று தரிசன வேளையில் சுவாமியின் திருப்பார்வை அங்கு அமர்ந்திருத்த இலங்கை பக்தர்கள் மீது பதிந்தது. அன்று நான் முதல் வரிசையில் அமர்ந்திருந்தேன். இந்த அனுபவம் எனது வாழ்நாளில் மறக்கமுடியாத நிகழ்வாக அமைந்திருந்தது.

சுவாமி தனது பௌதீக உடலை நீத்து 3 ஆண்டுகளின்பின் மேலும் ஒரு தரிசன பாக்கியம் எனக்கு கிட்டியது. சுவாமி வேறு ஒரு உடல் எடுத்து அந்த அருளாசியை எனக்கு வழங்கினார். என்னைப்பொறுத்தவரை அது ஷீரடி சாயியின் தோற்றமாகவே கருதுகிறேன். 2014ஆம் ஆண்டு பங்குனி மாதம் 17 ஆம் திகதி நான் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி எனும் இடத்தில் அமைந்துள்ள "சாயி மந்திரில்" பிரார்த்தனையில் ஈடுபட்டதன் பின்னர் சற்றே அமர்ந்து சாயி இலக்கியம் படித்துக்கொண்டிருந்தேன். நான் மட்டும் தனிமையில் அமர்ந்திருந்தேன். திடீரென ஒரு பேசும் குரல் என் காதில் விழுந்தது. நான் நிமிர்ந்து பார்த்தேன் என் முன்னே ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

நன்கு பழுத்த தலைமுடியும் வெண்தாடியும் அவரை அழகு செய்தன. அகன்ற நெற்றியும் அதில் நிறைந்த விபூதியும் ஒளி உமிழும் கண்களும், நீண்ட கூர்மையான மூக்கும் வெள்ளை வேஷ்டியும் சேட்டும் கொண்டதாக அவரது தோற்றம் காணப்பட்டது. கையிலே ஒரு குடையுடன் நின்று கொண்டிருந்தார்.




அவரது தெய்விக சாந்நித்தியம் என்னை மூழ்கடித்தது. அவரது தெய்வீக தோற்றத்தைக் கண்டு நான் என்னை மறந்த சூழ்நிலையில் நின்று கொண்டிருந்தேன். அவர்பேசிய வார்த்தைகள் எல்லாம் அவர் என்னிடம் இருந்து விடைபெற்றுச் சென்றதன் பின்னரேயே எனக்கு நினைவூட்டம் பெற்றது. அந்த அளவிற்கு நான் என்னை இழந்த நிலையில் இருந்தேன். பிற்பாடு அவற்றையெல்லாம் எனது டையரியில் குறித்துவைத்துக்கொண்டேன்.

அவர் பேசிய வாக்கியங்கள் இவ்வாறு அமைந்திருந்தன.

1) சங்கிலியை (பிரதான வாயிலை பூட்டும் சங்கிலி) ஏன் வெளியில் போட்டிருக்கின்றாய்?
2) நீ என்ன செய்கிறாய்.
3) புதிதாக ஓர் ஓலைக் கொட்டிலில் "சாயி பாபாவின்" படம் வைத்து வழிபாடு செய்கிறார்கள். அது உனக்குத் தெரியுமா?
4) சாயிபாபா சமாதி அடைந்தாலும் இப்பொழுதும் அவர் அவராகவே இருக்கின்றார். (இதனைக் கூறும்பொழுது அவர் அங்கே இருந்த சுவாமியின் திருவுருவப் படங்களை பார்வையிட்டுக் கொண்டிருந்தார்.)
5) சாப்பிட ஏதாவது வைத்திருக்கிறாயா?
6) விபூதி எங்கே வைக்கப்பட்டிருக்கிறது? (எனக் கேட்டு அதனை தன் கைகளால் தொட்டுக்கொண்டார்)
7) பாத்திரங்கள் ஏன் மூடப்பட்டிருக்கின்றன? (சுவாமியின் திருவுருவப் படங்களுக்கு முன்னால் மலர்கள் வைக்கப்பட்டு அவை அலுமினிய தட்டுக்களினால் மூடிவைக்கப்பட்டிருந்தன)
8) நான் மட்டக்களப்பில் இருந்து வருகின்றேன். மேலும் பொத்துவில் வரை பயணம் செய்யப்போகின்றேன். (கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு தொடக்கம் பொத்துவில் வரை சாயி மையங்கள் இருக்கின்றன.)

அவர் இவ்வாறு என்னிடம் கூறிக் கொண்டிருக்கும்போது நான் ஒரு சில பதில்களையே அவருக்கு வழங்கியமை எனக்கு ஞாபகமிருக்கிறது. நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று கேட்டதற்கு நான் எனது பட்டப்படிப்பை பூர்த்தி செய்துவிட்டு மேலும் ஒரு டிப்ளோமா பட்டப்படிப்பை தொடர்கின்றேன் என பதில் கூறினேன். அதற்கு Oh! Graduate பண்ணிவிட்டாய்! என மீண்டும் என்னிடம் கூறினார்.

குறகிய சில நிமிடங்களில் மண்டபத்தை ஒரு பார்வையிட்டு என்னிடம் இருந்து விடைபெற்றார். எனினும் நான் பிரக்ஞை இழந்து நிற்பது போன்ற உணர்வு காணப்பட்டாலும் நான் பிரக்ஞையுடன்தான் அந்த இடத்தில் நின்றுகொண்டிருந்தேன். அதிலிருந்து மீள எனக்கு சில மணிநேரம் எடுத்தது. இன்றும் அந்த நினைவுகளை எண்ணி சுவாமிக்கு நன்றியுடையவனாக இருக்கின்றேன். அவரின் ஆசீர்வாதங்கள் எல்லோர் மீதும் பொழியட்டும்.

ஜெய் சாயிராம்

வி.தனுஜன்
திருமால் வீதி, களுவாஞ்சிக்குடி,
மட்டக்களப்பு.
01.02.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவரின் விநாயகர் வணக்கமும் காயத்திரி சிந்தனையும்

திருவள்ளுவர் எந்த ஒரு கடவுளையும் குறிப்பிடவில்லை என பொதுவாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அவருடைய முதலாவது குறளில் ஓம்கார வடிவமான விநாயகரையும் காயத்திரி மந்திரத்தின் உட்கருத்தையும் மிகவும் சுருக்கமான முறையில் சிந்தித்தே திருக்குறள் என்ற அருட் பொக்கிஷத்தைத் தந்துள்ளார்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்ற குறளுக்கு பரிமேழழகர் உரையில் எழுத்துகளுக்கெல்லாம் முன்னிற்பது அகரம். அதுபோல உலகத்திற்கு ஆதிபகவன் ஆகிய இறைவனும் இறைவியும் முன்னிற்கிறார்கள் என்று கருத்துப் போடப்பட்டுள்ளது. ஆனால் எனது சிந்தனையில் தோன்றிய கருத்தையும் உங்கள் சிந்தனைக்குத் தருகிறேன்.

"அகர முதல எழுத்தெல்லாம்" என்றால் அகரத்தை முதலாகக் கொண்ட ஓம் என்பதைக் குறிக்கிறது. அ உ ம் ஸ்ரீ "ஓம்" என்பதை கூறி "ஓம்" என்பது "ஆதி" அநாதியானது. இதையே சூரியனை ஆராய "நாசா" அனுப்பிய விண்வெளி செயற்கைக்கோள் சூரியனில் இருந்து "ஓம்" சப்தம் வருவதாக பதிவு செய்துள்ளனர். சூரியன் தோன்றிய காலத்திலிருந்தே இந்த "ஓம்" சப்தம் வெளிவந்து கொண்டிருக்கிறது. இதையே எமது ஆன்மீக விஞ்ஞானிகளான முனிவர்களும் ரிஷிகளும் தமது ஆத்ம சக்தியால் கண்டுணர்ந்து "ஓம்" என்பதை இந்து மதத்தின் மூலமந்திரமாக வகுத்துத்தந்துள்ளனர். சூரியன் தோன்றியது பலகோடி வருடங்களுக்கு முன்பாக. அதன் சக்தியை விளக்கவே விஸ்வாமித்திர மகரிஷி காயத்திரி மந்திரத்தை 15, 000 வருடங்களுக்கு முன்பாக தந்துள்ளார்.

காயத்திரி மந்திரத்தில் இந்த பிரபஞ்சம் சம்பந்தமான மூன்று செய்திகளைத் தருகிறது.

1. "ஓம் - பூர், புவ, ஸ்வஹா" - அதாவது ஓம்தான் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் செய்கிறது.
2. "தத் சவிதுர் வரேண்யம்" - தத் - அந்த, சவிதுர் - எந்த ஒன்று மரங்கள் பயிர்களை வளரச் செய்கிறதோ அது சவிதுர். இதுதான் சூரியனில் இருந்து வரும் ஒம் என்ற சப்தமாகக் கொள்ளலாம். சூரியனில் இருந்து வரும் இந்த பிரபஞ்ச சக்திதான் உலகத்திற்கு தேவையான உணவைப் படைக்கிறது. பயிர்களை வளரச் செய்கிறது. இதுதான் படைப்புச் சக்தியாகத் தொழிற்படுகிறது.
3. "பர்கோ தேவஷ்ய" - சூரியனில் இருந்துவரும் ஒளி தெய்வீகமானது. காலம் என்பது இந்த ஒளிமூலம்தான் நிர்ணயிக்கப்படுகிறது. உலக இயக்கத்திற்கு ஒளி அவசியம். இருள், வெளிச்சம், பெரிது, சிறிது, நல்லது, கெட்டது, நாள், கிழமை, மாதம், வருடம் எல்லாம் இந்த சூரிய ஒளியின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது. ஆகவே இந்த ஒளி தெய்வீகமானது என்ற செய்தியும் தரப்பட்டுள்ளது. ஆகவே சூரியனிலிருந்து வெளிவரும் ஒலியும், ஒளியும்தான் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்கின்றன.

இதையே திருவள்ளுவரும் தமது முதலாவது குறளில் அவருக்கே உரித்தான சுருக்கமான முறையில் நினைவுகூர்ந்துள்ளார்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி" - இது விநாயகர் வணக்கம்

"ஆதி - பகவன் முதற்றே உலகு" ஆதி என்பது பிரணவமாகிய "ஓம்". ஆகவே திருவள்ளுவர் முதலில் விநாயகரை நினைத்து பின்னர் காயத்திரி மந்திரத்தையும் நினைத்து தமது உலகப் பெரு நூலாகிய திருக்குறளை ஆரம்பிக்கிறார்.

எமது ஆலயங்களில் பூசகர் பூசை செய்யும்போது ஒருகையில் "ஓம்" என்று ஒலிக்கும் மணியையும் மறுகையில் தீபத்தையும் வைத்து தீபாராதனை செய்வது வழக்கம். ஒலியும் ஒளியும் சேர்ந்து தான் உலகப் படைப்பு நடைபெறுகிறது என்ற காயத்திரி மந்திர விளக்கமாக இது அமைந்துள்ளது. இதனை திருவள்ளுவரும் உணர்ந்து இரத்தினச் சுருக்கமாக தமது முதலாவது குறளில் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பாகவே அமைத்துள்ளார்.

எழுத ஆரம்பிக்கமுன் நாமிடும் பிள்ளையார் சுளியும் இக்கருத்தையே தருகிறது என்பதும் கவனிக்கத்தக்கது.
ஒலி அலை வடிவமாக செல்வது (∿∿)
ஒளி நேர்கோட்டில் செல்வது. (——)
ஒரு அலையும் ஒரு ஒளிக்கோடும் சேர்ந்தால் பிள்ளையார் சுளி ( உ ) ஆகும்.

பலகோடி வருடங்களுக்கு முன்பாக இருந்து சூரியனில் இருந்து வரும் "ஓம்" என்ற ஒலிதான் உலக இயக்கத்தின் அடிப்படை. இந்து சமயத்தின் மூல மந்திரம். காயத்திரியின் உட்பொருள். இதனை விஸ்வாமித்திர மகரிஷி உணர்ந்தவாறே திருவள்ளுவரும் உணர்ந்து எமக்கு கூறியுள்ளார்.

ஜெய் சாயிராம்

S.R.சரவணபவன்
தாவடி.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிரசாந்தி பேரவைத் தலைவர் டாக்டர் நரேந்திரநாத் ரெட்டி அவர்களிடமிருந்து

# 2018 குருபூர்ணிமா செய்தி

எமது குருவும் கடவுளுமாகிய பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் கமலப் பாதங்களில் எனது அன்பும் நன்றியும் சேர்ந்த பிரார்த்தனைப் பிரணாம்.

அன்பான சகோதர சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பான சாயிராம்! உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான, புனிதமான குரு பூர்ணிமா வாழ்த்துக்கள்.


உலகிலுள்ள ஆன்மீக சாதகர்கள் அனைவரும் தங்களுக்கு இறைவழியைக் காட்டிய குருவிற்கு நன்றியும் வணக்கமும் தெரிவிக்கும் நாளே குரு பூர்ணிமாவாகும். பகவான் சிறீ சத்திய சாயி பாபாவே எமக்குக் குருவாகவும் கடவுளாகவும் கிடைத்தது எமது பாக்கியமும் அவரின் ஆசீர்வாதமுமாகும்.

அவர் குருமார்களுக்கெல்லாம்
குருவானவர்.
அவர் பரமகுரு, திவ்வியகுரு.
அவர் ஒப்புயர்வற்ற தெய்வக்குரு.
அவர் ஜகத்குரு, பிரபஞ்சம் முழுவதற்கும் குரு.

அவரின் செய்தி முழுப் பிரபஞ்சத்திற்கும் உகந்ததும் நித்தியமானதுமாகும். அவரின் செய்தி காலம், இடம், சமூகம், சமயம், இனத்திற்கும் அப்பாற்பட்டது.

அவர் ஜகத்குரு. சற்குரு.
எமக்கு சத்தியத்தை உணரவைப்பவர்.
அவரே சத்தியமாகையால் எம்மை அசத்திலிருந்து சத்திற்கு வழிகாட்டுவார்.

இந்தப் புனிதமான குரபூர்ணிமாவில் இதன் சிறப்பைப் பற்றி பகவான் வெளிப்படுத்தியதை நினைவுகொள்வோம். பகவான்




என்பதற்கு இலக்கு என்பதோடு, குவிமையம் அடைய வேண்டியது என்றும் பொருளுண்டு. நாம் குருவின் மீது மனதைக் குவிக்கவேண்டும். போலி குருமார்களால் திசை மாறக்கூடாது. இதைத்தான் சுவாமி தனது அவதார பிரகடனத்தின் பின்பு முதற் பாடிய பாட்டில், "குருவின் பாதக் கமலங்களில் மனதை அர்ப்பணி" (மானச பஜரே குரு சரணம்) என்று வலியுறுத்தியுள்ளார். இதுவே எம்மை உய்விக்கும். நாம் குருவை இறுகப் பிடித்தால் சத்தியத்தை அடைந்துவிடுவோம்.

அது என்ன?
குரு என்ற பதத்தின்
"கு" என்பது குணாதீதா, அதாவது குணங்களுக்கு அப்பாற்பட்டதே சத்தியம்.
"ரு'' என்பது ரூபறஹித்த, அதாவது ரூபங்களுக்கு அப்பாற்பட்டது. குணங்களுக்கும் ரூபங்களுக்கும் அப்பாற்பட்டதே சத் சித் ஆனந்தமாகும் - பேரறிவு, பேருணர்வு, பரவசம் என்பதே பொருள்.

இக்கூற்று பகவானின் பேரிலேயே "சாயி பாபா" (BABA - Being Awareness, Bilss, Atma) அடங்கியுள்ளது.

எமது இலக்கு என்ன? பாபா தான் (BABA) தான். இந்த இலக்கை அடையும் வழி எது? இதுவும் சாயி (SAI) தான்

SAI என்றால் See Always Inside. எப்போதும் அகப் பார்வை யிலிருக்க வேண்டும். இதன்மூலம் சத்தியத்தை உணரலாம்.

இந்த நிலையை ஏன் அனுபவிக்க முடியவில்லை? அஞ்ஞானம் என்ற இருள் மூடி மறைத்துள்ளது. இந்த இருளை அகற்றுவதற்கே குரு வருகின்றார்.

குரு இன்னொரு அர்த்தம் :
கு - அஞ்ஞானம் என்ற இருள்
ரு - இருளை நீக்குபவர்.

தலை, இதயம், கைகளின் இசைவு மூலம் இதை அடையலாம். பகவான் தனது அளப்பெருங்கருணையினால் அவரது நரமத்திலேயே மனித குலத்திற்கு ஒரு நிறுவனத்தை அளித்துள்ளார். இதன்மூலம் மனம், வாக்கு, காயம் (3H) என்ற மூன்றின் இசைவை விருத்தி செய்யவேண்டும். இதற்காக






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்களை, மேம்பாட்டுக் கல்விப் பரம்பல், இலவச மருத்துவமுகாம், சமூக எழுச்சி என்பவை மூலமாகத் தந்துள்ளார்.

சேவையில் ஈடுபடும் பொழுது எமது மனப்பாங்கே முக்கியம் என்று சுவாமி சொல்லியுள்ளார்.

என்ன மாதிரியான மனப்பாங்கு? சேவை செய்யும் பொழுது, இறைவனுக்கே சேவை செய்கின்றோம். நாராயண சேவை என்பது இதையே குறிக்கின்றது. சேவையைப் பெறுபவரில் இறைவனைக் காணவேண்டும். இம் மனப்பாங்கு இயல்பாகவே எம்மில் அன்பு, பணிவு, பயபக்தி ஆகியவற்றை மிளிரச் செய்யும். சேவையில் ஈடுபடும் பொழுது அகங்காரம், பற்று ஆகிய எதிர்மறைத் தடைகளை அகற்ற வேண்டும். அகங்காரம் தான் செய்கிறேன் என்ற எண்ணம், பற்று செயலின் விளைவில் கண்ணாயிருப்பதையுமே குறிக்கிறது. இந்த உயர்மனப்பாங்குடன் சேவையில் ஈடுபட்டால் நாமே மிகவும் உன்னத பயனாளியாகின்றோம். அதாவது, எம்மில் உள்ள எதிர்மறைக் குணங்களான கோபம், பேராசை, பொறாமை, பற்று ஆகியவை நீங்கி இதயம் களங்க மில்லாத தாகின்றது. இதயத் தூய்மையே ஞான நிலையாகும்.

இதயத்தை மேலும் விருத்தியடையச் செய்ய வேண்டும். இதயத்தை அன்பினால் நிரப்பவேண்டும்.

"இறைவன் அன்பு மயமானவன்,
அன்பே இறைவன், அன்பிலேயே வாழவேண்டும்" என்பது சுவாமியின் கூற்று."

இதயத் தூய்மையை மேலும் அதிகரிக்க பக்திபூர்வமான சாதனைகள் செய்யவேண்டும்.
உதாரணமாக :
ஜெபம் (நாமஸ்மரணம்) - இறை நாமத்தை தொடர்ச்சியாகச் சொல்லுதல்.
பஜனை - இறைவனது புகழைப்பாடுதல்
தியானம் - தெய்வீகத்தில் மனதை ஆழ்த்துதல்.

தெய்வீகப் பேரன்பு விளைந்ததும், உன்னத சாந்தி ஏற்படும். அதாவது, மழை பெய்ததற்கு நிரூபணம் ஈரநிலமேயாகும். சாந்தி மனப்பாங்கே பேரன்புக்குரிய நிரூபணம். இந்த அமைதி பிரசாந்தியாக நிலைக்கவேண்டும்.

தெய்வீகப் பேரன்பின் இன்னொரு வெளிப்பாடு மனச் சமநிலையாகும். புகழ்ச்சி, இகழ்ச்சி, இலாபம், நட்டம், வெற்றி, தோல்வி ஆகிய இரட்டை நிலைகளினால் மனச் சமநிலை குலையாதிருத்தலேயாகும். நித்தியானந்தத்தில் இருப்பதே யாகும்.

அடுத்து எவ்வாறு தலையை (மனம், எண்ணம்) விருத்தி செய்வது? இதற்கு ஆத்ம விசாரணையே வழியாகும். ஆன்மீக வாழ்வில் முக்கால் பங்கு ஆத்ம விசாரணையேயாகும். இதன்மூலம் எது நிரந்தரம், எது நிரந்தரமற்றது, எது எல்லாவற்றிலும் எப்போதும் உள்ளது என்பதைப் பற்றிய தெளிவும் அனுபவமும் உண்டாகும். இதன் உச்ச நிலை, எல்லாம் ஒன்றே என்ற அனுபவநிலையாகும். "அத்வைத தரிசனமே ஞானம்" என்பதது வேதவாக்கு. படைப் பிலுள்ள வேற்றுமையில் ஒற்றுமையை உணர்த்தலாகும்.

சுவாமியின் செய்தியில் மூன்று மார்க்கங்களும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாக்கப்பட்டுள்ளன.
கர்ம மார்க்கம் - தன்னலமற்ற சேவை
பக்தி மார்க்கம் - பக்திபூர்வமான சாதனைகள்
ஞான மார்க்கம் - ஞான நிலையடைதல் (தியானம்,ஆத்மவிசாரணை)


சகல வேதங்களினதும் சாராம்சத்தை பின்வருமாறு கூறியுள்ளார், "எம்மிலும் ஏனைய அனைத்திலும் உள்ளது ஒரே ஒரு ஆத்மா வேயாகும்" இதை எப்படி அனுபவத்திற்குக் கொண்டு வரலாம்? இதற்காக சுவாமி நான்கு மகா மந்திரங்களைத் தந்துள்ளார். அவையாவன,

1.எப்போதும் உதவி செய்
- Help Ever
2.ஒருபோதும் தீங்கு செய்யாதே
- Hurt Never
3.அனைவரிலும் அன்பாயிரு
- Love All
4.அனைவருக்கும் சேவை செய்
- Serve All ஆகும்.

1. எப்போதும் உதவி செய் - நாம் எமக்கு விருப்பமான நேரத்தில் தான் உதவிசெய்வோம். இதுவல்ல, எப்போதும் எண்ணம், சொல், செயலால் உதவி செய்யவேண்டும். எப்போதும் யாருக்காவது உதவி செய்யவேண்டுமென்ற சிந்தனையில் இருக்கவேண்டும். செயற்பட வேண்டும்.

2. ஒருபோதும் தீங்கு செய்யாதே - எண்ணம், சொல், செயலால் தீங்கு விளை விக்கக்கூடாது. படைப்பிலுள்ள அனைத் திற்கும் தீங்கு விளைவிக்கக்கூடாது.

3. அனைவரிலும் அன்பாயிரு - எமக்கு விருப்பமான சிநேகிதர்களிடமும் குடும்பத் தினரிடமும் அன்பாயிருப்பது மாத்திரமல்ல, எம்மை தூஷிப்பவர்கள், எமக்குத் தீங்கு விளைவித்தவர்களிலும் அன்பாயிருக்க வேண்டும். உயிர்களிடத்து மாத்திரமல்ல. படைப்பிலுள்ள அனைத்திலும் அன்பு காட்டவேண்டும்.






4. அனைவருக்கும் சேவை செய் - எனது, உனது என்று பாகுபாடு காட்டாமல், சாதி மத பேதமில்லாமல், முன்பின் தெரியாதவர்களுக்கும் உதவி செய்யவேண்டும்.

இந் நான்கையும் மனப் பூர்வமாகப் பின்பற்றினால் எல்லாம் அனைத்தும் தெய்வீக அன்பே, ஆத்மாவே என்ற அனுபவம் ஏற்படும்.

பகவானிடம், அவரின் உன்னதமான தேர்ந்தெடுத்த ஆசீர்வாதத்தை எங்கள் எல்லோரிலும் பொழிய வேண்டு மென்றும் அசத்திலிருந்து சத்திற்கும் அஞ்ஞான இருளிலிருந்து ஞான ஒளிக்கும் மரணத்திலிருந்து மரணமின்மைக்கும் கூட்டிச் செல்ல வேண்டு மென்று பிரார்த்திக்கின்றேன்.

"சமஸ்த லோகா சுகினோ பவந்து"
"சகல லோகங்களிலும் உள்ள அனைத்தும் ஆனந்த மாயிருக்க வேண்டும்"

ஜெய் சாயிராம்

டாக்டர் நரேந்திரநாத்ரெட்டி
தலைவர், பிரசாந்தி பேரவை.
ஆடி, 2018




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனச் செய்திகள்

## தேசிய சேவைகள்

**சத்திய சாயி பாடசாலை**

சத்திய சாயி பாடசாலையின் பண்பு விருத்தி விளையாட்டு விழா பாடசாலை மைதானத்தில் 3.3.2018 இல் இடம் பெற்றது. இந் நிகழ்விற்கு சத்திய சாயி நிறுவன தேசிய தலைவர் திரு.வி.மனோகரன் அவர்கள் கலந்து கொண்டார்கள்.



சத்திய சாயி பாடசாலையின் பெறுபேற்று விருது வழங்கும் நிகழ்வு 2.6.2018 திகதியன்று பாடசாலையில் இடம்பெற்றது.



சத்திய சாயி நிறுவன பரிசளிப்பு விழா 6.7.2018 திகதியன்று சத்திய சாயி பாடசாலையில் இடம் பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடபிராந்திய இணைப்புக் குழுத்தலைவர் திரு.கே.வி.சிவநேசன் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

## வட பிராந்தியம்

**அன்புவாரம்**

- அன்புவார இறுதி ஒன்றுகூடல் நிகழ்வு யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் இடம் பெற்றது. 20.3.2018 இல் யாழ்ப்பாணம் சாயி நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மத்திய சபை தலைவர் திரு.வி.மனோகரன் அவர்கள் கலந்து கொண்டார், 17.6.2018 இல் கிளிநொச்சியில் இடம் பெற்ற நிகழ்வில் தேசிய கல்வி இணைப்பாளர் திரு.நா.புவனேந்திரன் அவர்கள் கலந்து கொண்டார்.

**கிராம எழுச்சி சேவை**

செல்வபுரம், இன்பச்சோலை, திருமால்புரம் ஆகிய இடங்களில் கிராமிய எழுச்சி சேவை இடம் பெற்று வருகின்றது. தொடர்ச்சியாக கிராமத்தில் மனித மேம்பாட்டு கல்வி வகுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. இன்பச்சோலை கிராமத்தின் குடிநீர் தேவையை கருத்தில்க் கொண்டு 36 குடும்பங்களின் பயன்பாட்டிற்காக தண்ணீர் தாங்கி அமைத்து வழங்கப்பட்டுள்ளது.



**முதியோர் இல்ல சேவை**

கைதடி முதியோர் இல்லம், சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லம் ஆகியவற்றில் கிரமமாக வடபிராந்தியத்திலுள்ள நிலையங் களால் அன்புபரிமாற்ற சேவை இடம் பெறு கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நயினாதீவு நிலையத்திற்கு புதிய கட்டிடம்**

புதிய சாயி நிலைய கட்டிடம் நயினாதீவில் 18.1.2018 இல் பூமி பூஜை இடம் பெற்று கட்டிட வேலைகள் இடம்பெற்று வருகிறது.



## கிழக்கு பிராந்தியம்


**கடற்கரை துப்பரவு செய்யும் பணி**

ஒந்தாச்சிமட கடற்கரை 24.2.2018 திகதியன்று துப்பரவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. இச்சேவையில் 42 பேர் கலந்து கொண்டனர்.

8.4.2018 திகதியன்று தம்பிலுவில், திருக்கோவில், காரைதீவு, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, காரைதீவு, வீரமுனை நிலையங்கள் இணைந்து ஒன்றரை கிலோமீற்றர் தூரமான கடற்கரை துப்பரவு செய்யப்பட்டது. நேருபுரம் கிராமத்தை சேர்ந்த 73 அன்பர்கள் இணைந்து கொண்டார்கள். இக் கிராமங்களை சேர்ந்த விளையாட்டு கழகங்கள், பிரதேச சபை போன்றன இணைந்து இச் சேவையில் ஈடுபட்டன.

**மருத்துவ முகாம்**

வாகரையிலிருந்து 30 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள காட்டு பிரதேசத்திலுள்ள 225 குடும்பங்களை சேர்ந்த 98 சிறுவர்களை உள்ளடக்கிய மருதங்கேணிக்குள கிராமத்தில் மேற்கொண்ட கண் சிகிச்சை, பல் வைத்தியம், புற்றுநோய் வைத்தியம், சுகாதார விழிப்புணர்வு உள்ளடங் கலாக மேற் கொள்ளப்பட்ட மருத்துவ முகாம் சேவையில் 5 வைத்தியர்கள், 5 தாதிகள் மற்றும் சேவாதள் ஆகியோர் கலந்து கொண்டனர். கல்வி கற்கும் மாணவர்களுக்கு பொதுசுகாதாரம் பேணுதல் தொடர் பாக விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் கர்ப்பிணி தாய்மார்களுக்கும், சிறுவர்களுக்கும் சத்துமா, பால்மா பக்கட் என்பனவும் வழங்கப்பட்டது.



## வடமத்திய பிராந்தியம்

**வடமத்திய வலய பாலவிகாஸ் குருமார்களுக்கான பயிற்சி**

பால விகாஸ் குருமார்களுக்கான பயிற்சி வகுப்பு தண்ணீரூற்று சத்ய சாயி சேவா நிலையத்தில் 2018.06.09ம் 10ம் திகதிகளில் நடைபெற்றது. இப் பயிற்சி வகுப்பை தேசிய கல்வி இணைப்பாளர் திரு.நா.புவனேந்திரன் அவர்கள் ஒருங்கமைத்து நடாத்தினார். இப்பயிற்சி வகுப்பில் மொத்தமாக 42 குருமார்கள் பங்கு பற்றினர்.



**மருத்துவ முகாம்**

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 7ஆவது ஆராதனா மகோற்சவத்தினை முன்னிட்டு வவுனியா வடக்கு பிரதேசத்தில் நடாத்தப்பட்ட இலவச மருத்துவ முகாம் 22.04.2018 ஞாயிற்றுக் கிழமை, நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இம் முகாமில் பொது மருத்துவ முகாம், நிபுணத்துவ மருத்துவ சேவை, கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும், காது,மூக்கு,தொண்டை நோய்களுக் கான சிகிச்சை, பற் சிகிச்சை, சித்த வைத்திய முகாம், இலைக் கஞ்சி வழங்குதல் என்பன இடம் பெற்றது. 235 பேர் பங்கு பற்றனார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் நிலையத்தில் சீர்திருத்தப் பாடசாலை மாணவர்கள்




வவுனியா நிலையத்தில் படத்தில் விபூதி






அன்புவார நிகழ்வு யாழ்ப்பாணம், கிளிநொச்சி



சத்திய சாயி பாடசாலை பாராட்டு நிகழ்வு - 2018



அன்பு பகிர்வு - மன்னார்



திருமால்புரம் நகரசங்கீர்த்தனம் (வ.பி)



தாமரைக்கேணி நிலையத்தில் தலைமைத்துவபயிற்சி (கி.பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு சாயி நிலையம் - பார்ன்ஸ் பிளேஸ்



முகப்புப் பகுதி



பிரார்த்தனை மண்டபம்



COLOURS Nallur 0212229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org